மரணிக்கும் மண்வாசனை

சிறுகதைகள்



கலாபூசணம்
வடவரணி சி.சபா

கலாபூசணம்

வடவரணி சி.சபாவின்

மரணிக்கும் மண்வாசனை

☆

சிறுகதைகள்

☆

வெளியீடு :

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்

நாவற்காடு, வரணி.

வெளியீட்டு வரிசை – 07

நூலின் பெயர் : **மரணிக்கும் மண்வாசனை**

நூலின் வகை : சிறுகதை

நூலாசிரியர் : சி.சபாரத்தினம்
(வடவரணி சி.சபா)

வெளியீடு : நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்
நாவற்காடு - வரணி (இலங்கை)

பதிப்பு : முதற்பதிப்பு - 2019

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பக்கங்கள் : 150 + xiv

தொடர்பு : சி.சபாரத்தினம்
கச்சாய் வீதி, கொடிகாமம்.
தொ.இல : 0772882250

அட்டைப்படம் : நா.ஜினோ

நூலின் விலை : 400/=

அச்சுப்பதிப்பு : சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம்.

ISBN இலக்கம் : 978-955-7192-05-5

சிரேஸ்ட பேராசிரியர் திரு ம.இரகுநாதன்,
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அணிந்துரை

கலாபூசணம் வடவரணி சி.சபாவின் "**மரணிக்கும் மண் வாசனை**" என்னும் தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதுவதற்கு கிடைத்த வாய்ப்பு மனதிற்கு இனிமையானது. வாய்ப்பளித்த உள்ளங்கள் நன்றிக்குரியவர்கள்.

1970களில் தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்த சி.சபா கவிஞராக சிறுகதைப் படைப்பாளியாக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டவர். 2018இல் இவரது கவிதைத் தொகுப்பொன்று "**பகலில் காணும் கனவுகள்**" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. தற்போது "**மரணிக்கும் மண்வாசனை**" என்ற தலைப்பில் பதினைந்து சிறுகதைகளும் ஒரு உருவகக்கதையும் தொகுப்பாக வெளியிடப்படுகிறது.

பலமாதங்களாக வயிற்றில் சுமந்த சிசுவை பெற்றெடுக்கும் போது ஒரு தாய் அடைகின்ற மகிழ்ச்சியும், நீண்டகாலமாகச் சுமந்து வந்த உதிரியான படைப்புக்களை ஒருங்கிணைத்து நூல்வடிவில் காணும் போது நூலாசிரியனுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியும், வார்த்தைகளுக்குள் அடங்காதவை. அந்த மகிழ்ச்சியில் திளைத் திருக்கும் **கலாபூசணம் வடவரணி சி.சபாவிற்கு முதலில் எனது வாழ்த்துக்கள்.** உங்கள் இலக்கியப் பயணம் மேன்மேலும் தொடர வேண்டும். ஆக்க பூர்வமான படைப்புக்கள் பலவற்றைச் சமூகம் உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக **உங்களின் எழுதுகோல் என்றைக்குமே ஓய்ந்து விடக் கூடாது.**

இத் தொகுப்பிலுள்ள கதைகள் சில காதல் பேசுபவை, இன்னும் சில சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சாதியத்தின் வேர்களை அடையாளங்காட்டுபவை, சில வறுமையின் கொடுமையை எடுத்துக் காட்டுபவை, சில அரசியல்வாதிகளின் சுயநலப் போக்கை வெளிப்படுத்துபவை, இன்னும் சில இந்த வகைப்பாட்டிற்குள் அடங்காதவை. இந்த வகையில் "**எதற்காக அழுதாள்**" என்ற கதையில், பத்திரிகையில் வெளிவந்த கதைகளைப் படித்த துளசி அதன் ஆசிரியரை மனதால் விரும்பி பின் அந்தப் படைப்பாளி ஆண் அல்ல பெண் எனத் தெரிந்து ஏமாற்றமடைகிறாள்.

"**குறிஞ்சி வரவேற்பாளா?**" என்ற கதையில் மலைக் கிராமத்திற்கு தொழில் நிமிர்த்தம் வந்த அருண், செல்வம் ஆகிய இருவரும் தாங்கள் தங்கியிருந்த வீட்டுப் பெண்ணான குறிஞ்சியின் மீது கருணை காட்ட முற்பட்டு, அவளைத் தம்மில் ஒருவர் திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்கின்றனர். இவர்களின் விருப்பத்தை ஏற்றுக் கொண்ட குறிஞ்சி அவர்களில் தான் விரும்புவது யாரை என்ற முடிவைத் தெரியப்படுத்த முன்னர் இவர்களின் வாகனச் சாரதியினால் இரவில் ஏமாற்றப்பட்டு **தான் ஏமாற்றப்பட்டது யாரால்**? எனத் தெரியாமல் தத்தளிக்கிறாள். குறிஞ்சியின் மனப்போராட்டத்தை அறியாத அருணும், செல்வமும் அவளின் பதிலுக்காக காத்திருந்து ஏமாற்றமடைகின்றனர். ஆனால் குறிஞ்சி தான் ஏமாந்தது யாரிடம் எனத்தெரியாமல் தத்தளிக்கிறாள். இந்திரனிடம் ஏமாந்த அகலிகை போல அன்ரனிடம் ஏமாந்த குறிஞ்சி அதனை அறியாமல் வாழ்வை இழக்கிறாள்.

"**அந்த ஒருநாள்**" என்ற கதை காதலித்தவனுடன் திருமணத்திற்கு முன்னர் உடலுறவு கொண்ட ஒரு பெண் எதிர்பாராத விதமாக திருமணம் தடைப்பட்ட போது அவள் அனுபவித்த துன்பங்களை எடுத்துக்காட்டுகிறது. காதலன் இராணுவ சேவைக் காகச் சென்று திரும்பி வரத் தாமதமாகியதால் அவள் வயிற்றில்

கருவோடு காத்திருந்து, காத்திருந்து இறுதியில் சிசுவை பிரசவித்து விட்டு தன்னுயிரை மாய்த்துக் கொள்கின்றாள். இராணுவ சேவையிலிருந்து திரும்பி வந்தவனுக்கு அவளின் பிணமும் பிரசவித்த பிள்ளையும் கிடைக்கின்றது. இந்கப் பெண்ணுக்கு ஏற்பட்ட நிலை தற்செயலானது எனினும், திருமணத்துக்கு முன்னர் எந்த நிலையிலும் வரம்பைத் தாண்டி விடக்கூடாது என்ற எச்சரிக்கையை இக்கதையின் மூலமாக ஆசிரியர் சமூகத்திற்கு விடுக்கிறார் என்றே கருதக்கூடியதாக உள்ளது.

"**விக்டர் நீ அதிஸ்டம் இல்லாதவன்**" என்ற கதை விக்டர் குடியிருந்த வீட்டில் அநாதரவாக விட்டுச் சென்ற லொத்தர் சீட்டிற்கு பத்து இலட்சம் ரூபா பரிசு கிடைத்ததையும் அதனை அவனால் பெறமுடியாமல் போனதையும், எடுத்துக்காட்டுவதாக இருந்தாலும் இதற்கு அடிப்படையாக இருப்பது பொருந்தாத காதல் விவகாரமே. முதலாளியின் மகள் சாந்திக்கும் விக்டருக்கும் இடையே ஏற்பட்ட காதல் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டது.

முதலாளியின் மகளை அவரது கடையில் சிற்றூழியம் செய்யும் தொழிலாளி காதலிப்பதென்பது சாதாரணமானதல்ல. இதனால் ஏற்பட்ட சிக்கலுக்கு முகங்கெடுக்க முடியாத நிலையிலேயே விக்டர் முதலாளியின் வீட்டை விட்டு வெளியேறுகின்றான். வெளியேறிய பின்னரே அவன் விட்டுச் சென்ற லொத்தர் சீட்டு சாந்தியின் கையில் கிடைக்கின்றது. எனவே இங்கு ஏற்றத்தாழ்வு காதலுக்கு தடையாக இருப்பதே பிரச்சினையாகும். இவ்வாறான சமூக தடைகளைத் தாண்டி கலப்புத் திருமணம் செய்பவர்களும் சமூகத்தில் இல்லாமல் இல்லை. "**குருநாதன் கொள்கை**" என்ற கதையில் வருகின்ற சிவகுருநாதன் கொடிகாமத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவன். சமூகத்தில் ஏற்பட்ட எதிர்ப்புக் களைப் பொருட்படுத்தாமல் தனது கொள்கைக்காக கலப்பு மணம் செய்து கொண்ட குருநாதனை எடுத்துக்காட்டிய இக்கதையில்

இன்று கோயிலில் தேர் இழுப்பதற்கு சாதிவேறுபாடு பார்த்து இயந்திரத்தைப் பயன்படுத்திய அண்மைக்கால சமூக வரலாற்றையும் இக்கதை பதிவு செய்கின்றது. அத்துடன் 1960களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சாதி எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்பான தகவல்களையும் இக்கதை பதிவு செய்கின்றது. சமூக வரலாற்றுச் செய்திகளின் பதிவாக இக்கதை அமைவதால் இலக்கிய நயம் குன்றி சிறுகதைக்குரிய கட்டுப்பாடுகளை மீறிவிடுவதையும் **அதேசமயம் நிசத்தை உணரக் கூடியதாகவும் உள்ளது.**

கட்சிக்கொடிகள் என்ற கதை உடுக்க உடுதுணியின்றி ஊரெல்லாம் ஏழைகள் மலிந்திருக்க வீதிக்குவீதி விலை உயர்ந்த துணிகளில் பறக்க விடப்பட்டுள்ள கட்சிக் கொடிகளை எடுத்துக் காட்டி, **பஞ்சம் இல்லை என்பதை உணர்த்தும் அன்னக் கொடியே பறக்க வேண்டும்** எனக் கூறுவது புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் விவசாயி என்னும் திரைப்பட பாடலை நினைவு படுத்துவதாக உள்ளது.

"**பெற்ற பிள்ளைகளும் நட்ட பிள்ளைகளும்**" என்ற கதையில் கணவன் இறந்து போகத் தனது பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் பேணிவளர்த்த **சிங்காரங்கா என்ற பெண்** நட்டு வளர்த்த தென்னம் பிள்ளைகள் அவள் இறந்தபின்னும் ஊரவர்களுக்கு தாகம் தீர்க்கும் சிறப்பை எடுத்துக்காட்டி தென்னம் பிள்ளைகளையும், பெற்றபிள்ளைகள் போலவே கருதவேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

"**படித்திருந்தால்**" என்ற கதை செந்தாளம் பட்டிக் கிராமத்தில் பிறந்த ஒருவன் வறுமையால் படிக்க முடியாமல் வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழில் தேடித் தோற்றுப் போனதையும் அவனது ஊரிலுள்ள பாடசாலையில் அவனுக்கு **மணி அடிக்கும் வேலை கூட வழங்க மறுத்ததையும்** எடுத்துக்காட்டி அவன் தொழில்

அதிபராகி அதே பாடசாலைக்கு இருமாடிக் கட்டிடம் அமைத்துக் கொடுத்ததையும் எடுத்துக் காட்டுகின்றது.

பொதுவாக இத்தொகுப்பில் உள்ள கதைகள் நவின சிறுகதைகளுக்குரிய எல்லைகளைத் தாண்டிய சிறிய கதைகளாகவே காணப்பட்டாலும், **இவை ஆசிரியரின் சமூக நோக்கத்தையும் இலக்கிய ஆர்வத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.**

இலக்கியம் சமூகத்துக்காகவே படைக்கப்படுவது. சமூக நலனைக் கருத்தில் கொள்ளாது வெறும் கற்பனைக் கோட்டைகளாக எழுப்பப்படுகின்ற படைப்புக்கள் கால ஓட்டத்தில் காணாமற்போய் விட **சமூக நலனை கருத்தில் கொண்டு படைக்கப்பட்ட படைப் புக்களே காலங்கடந்தும் வாழ்கின்ற தகுதியைப் பெற்று விடுகின்றன** என்ற உண்மையை உணர்ந்து கொண்டால் சபாவின் சமூகநல நாட்டமும் இலக்கிய ஆர்வமும் எதிர்காலத்தில் உன்னதமான படைப்புக்களைத் தரும் என்ற எதிர்பார்ப்புடன் வாசகர்கள் காத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அதற்காக அவருக்கு எனது வாழ்த்துக்கள்.

நன்றி.

Prof.Dr.M.Ragunathan
Head & Senior Professor in Tamil
Department of Tamil
University of Jaffna
Jaffna, Srilanka.

திரு சிவஞானம் சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்மாவட்டம்.

வாழ்த்துரை

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me), Sp.Tr(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
682, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2225595.
📠 :021 2280024 021 2225595.
✆ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me), Sp.Tr(Ag)
Jaffna Electoral District
682, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka
☎ :021 2280024 021 2225595.
📠 :021 2280024 021 2225595.
✆ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

"மரணிக்கும் மண்வாசனை" வெளியீடு சிறக்க வாழ்த்துகிறேன்.

மனித வாழ்வியல் சக்கரத்தின் அசைவுகளை மீட்கும் காலக்கண்ணாடிகளான இலக்கியங்களுள் சிறுகதை வடிவத்துக்கு தனித்துவமான இடமுண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தின் வரணி மண்ணைத் தன் பூர்வீகமாகக் கொண்டு தனது மண்ணையும் மக்களையும் அவர்களது மரபியல்களையும் நேசிக்கின்ற ஒரு சமூக சேவையாளராக இவர் ஆற்றியுள்ள சமூகப் பணிகளுக்கு அப்பால் ஒரு கவிஞராக, இலக்கியவாதியாக பல்வேறு தரப்பினராலும் அறியப்பட்ட பல்துறைசார் ஆளுமையாளனாக இந்த மண்ணுக்கு **கலாபூசணம் வடவரணி சி.சபா அவர்கள் ஆற்றி வருகின்ற தமிழ் இலக்கியப்பணி அளப்பரியது.**

அதன் வெளிப்பாடாகவே அவரால் வெளியீடு செய்யப்பட்ட "**பகலில் காணும் கனவுகள்**" என்ற கவிதை நூலுக்கு அடுத்த படியாக "**மரணிக்கும் மண்வாசனை**" என்று இச்சிறுகதை நூலும் இதனோடு இணைந்து வெளியீடு காணவுள்ள "**ஓவியமும் சிற்பமும்**" என்ற கட்டுரை நூலும் வெளிவருவது நிறைவளிக்கிறது.

கிராமத்து வளங்கள் முழுமையாக நுகரப்பட வேண்டும், உழைத்து வாழவேண்டும் என்ற சிந்தனையை இளைஞர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற கொள்கையை "மரணிக்கும் மண்வாசனை" என்ற சிறுகதையின் ஊடாக வெளிப்படுத்தும் அதேவேளை **தான் பிறந்த மண்ணின் வளமும், அதன் வாசனையும் படிப்படியாக மரணித்துக் கொண்டிருக்கிறது என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.**

போர் தந்த இழப்புக்களாலும் வலிகளாலும் ஏற்பட்ட ஆற்றமுடியாத மனக்காயங்களாலும் அந்நிய கலாசார மோகத்தினாலும், மேலைநாட்டவரின் வருகையாலும் நவீன பொழுதுபோக்கு சாதனங்களாலும் அருகிவரும் நம் பண்பாடு, கலாசாரம், மரபியல்களை **அடுத்து சந்ததிக்கு எடுத்துரைக்கின்ற ஓர் எழுத்தாவணமாகவே இவரது இச்சிறுகதைப் படைப்பை என்னால் பார்க்க முடிகிறது.** அந்த எண்ணத்தையே அவரது நூலின் தலைப்பும் பிரதிபலித்து நிற்கின்றது.

பதினைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை தாங்கி வெளிவரும் இந்த நூலின் ஒவ்வொரு கதைகளிலும், அழிவின் விளிம்பிலுள்ள தமிழர் தம் மரபியல் அடையாளங்கள் ஒவ்வொன்றாய் எடுத்தாளப் படுவது இந்த நூலுக்கே உரிய தனித்தன்மை எனலாம். அவை எல்லாவற்றையும் சுட்டிக்காட்ட முடியாவிட்டாலும் கூட, குறிப்பாக ஆலய வழிபாட்டை முதன்மைப்படுத்தும் "**கறுக்காய் கந்தனும் கருங்குளவிக்கூடும்**", உறவு நிலையின் மகத்துவத்தை உணர்த்தக் கூடிய "**கடிகாரம் ஓடவில்லை**", தாயன்பின் உயர்வைச் சொல்லும் "**காடைக்குருவி**", அருகிவரும் சாமுத்திரிக்கா இலட்சணம் பற்றிய "**கண்களை மட்டுமே காட்டுவாள்**", சிந்திக்க தூண்டுகின்ற "**மனிதன் மாறுவானா?**" சமூக ஏற்றத்தாழ்வுகளும், அந்தஸ்தும் புனிதமான காதலுக்கு தடை போடலாம் என்பதை சொல்லும் "**விக்டர் நீ**

அதிஸ்டமில்லாதவன்" எக்காலத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் மனிதனின் கொள்கைகள் மாறிவிடக்கூடாது என்பதை சான்றாதாரங் களுடன் யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக்கூறி சாதியம் என்னும் விலங்கை அடியோடு தகர்த்தெறியும் "**குருநாதன் கொள்கைகள்**" போன்ற சிறுகதைகளை அவரது எழுத்தாற்றலுக்கும், சமூகப் பார்வைக்குமான எடுத்துக் காட்டாக குறிப்பிட்டுக் கூறமுடியும்.

நீண்டநெடு நாட்கள் அவரோடு நெருக்கமாக பழகியவன் என்ற அடிப்படையில் அவரது இன, மொழி, சமூகப்பற்று நான் அறிந்ததே. அந்த வகையில் இதுநாள் வரையிலும் தான் நேரடியாக கண்டு, அனுபவித்து, வாழ்ந்த வாழ்வையும், வாழ்க்கை நிகழ்வு களையும் யதார்த்தமான சிறுகதைகளாக தொகுத்து, அதற்கு நூல் வடிவம் கொடுத்திருப்பதும், அந்த நூலுக்கு நான் சிறப்புரை வழங்க கிடைத்ததையும் **அவருக்கும் எனக்குமான பிணைப்பை இன்னும் இறுக்கமாக்கும் என்றே நான் கருதுகின்றேன்.**

இந்த மண்ணின் வலிகளையும், உணர்வுகளையும், மரபியல்களையும் தாங்கி வெளிவரும் "**மரணிக்கும் மண் வாசனை**" சிறுகதை நூலின் வெளியீடு சிறப்புறவும், இதழாசிரியர் கலாபூசணம் **வடவரணி சி.சபா** அவர்களின் **கலை இலக்கியப்பணி** தொடரவும், சமூகத்தை நேசிப்பவர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் மகிழ்விக்கும் அவரது படைப்புக்கள் தொடர்ந்து வெளிவரவும் இறையாசி இறைஞ்சி மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சிவஞானம் சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

என்னுரை

வளங்கள் பல நிறைந்த வடவரணி என்ற மிகவும் அழகான கிராமத்தில் பிறந்து வளந்தவன் நான். பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்கும் வகையில் எனது ஆக்கங்களையும், படைப்புக்களையும் **"வடவரணி சி.சபா"** என்னும் புனை பெயரில் வெளிப்படுத்தி வருகிறேன்.

எத்தனையோ கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகளை எழுதி பல பரிசில்களையும் பல்வேறு கௌரவங்களையும் கலாபூசணம், கலைச்சாகரம் போன்ற விருதுகளையும் நான் பெற்றுக் கொண்ட போதும், நான் பிறந்த மண்ணின் இயற்றை வளங்களையும் அதன் இயல்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் **ஒரு சிறு கதையைத்தானும் எழுதவில்லையே என்ற ஆதங்கம் என் மனதில் நீண்டகாலம் இருந்து வந்துள்ளது.** மேலும், கிராமிய வளங்களும், கலாசார விழுமியங்களும், இலக்கிய உணர்வுகளும், சமூக சிந்தனைகளும் படிப்படியாக மரணித்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தும் வகையில் "**மரணிக்கும் மண்வாசனை**" என்ற தலைப்பில் ஓர் சிறுகதையை இந்நூலுக்கு உரித்தாக்கியுள்ளேன்.

இச்சிறுகதை 2019ம் ஆண்டு (இவ்வருடம்) கலாசார அலுவல்கள் திணைக்களமும் தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய தேசிய இலக்கிய விழாவின் போட்டியில் முதலாவதாக தெரிவுசெய்யப்பட்டு, உயிர் பெற்று நிற்பது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இதனை அடிப்படையாக கொண்டே இந்நூலுக்கும் **"மரணிக்கும் மண்வாசனை"** என்ற பெயரை தலைப்பாக கொடுத்துள்ளேன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஏனைய சிறு கதைகளும், சமூக சிந்தனைகளையும் பலவேறு யதார்த்தங்களையும் வாழ்வியல் உண்மைகளையும் உணர்த்தி நிற்பதை நானே கூறுவது பொருத்தப்பாடற்றது. அதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன்.

ஏற்கனவே என்னால் வெளியீடு செய்யப்பட்ட "**பகலில் தானும் கனவுகள்**" என்ற கவிதை நூலுக்கு பலத்த ஆதரவு கிடைத்தது போல, தற்போது வெளியீடு செய்யப்படும் "**மரணிக்கும் மண்வாசனை**" என்ற இச்சிறுகதை நூலுக்கும், இதனுடன் இணைத்து வெளியீடு செய்யப்படும் "**ஓவியமும் சிற்பமும்**" என்ற கட்டுரை நூலுக்கும், வாசகர் மத்தியிலிருந்து நல்லாதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

மேலும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய யாழ்ப்பாண **பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும், சிரேஸ்ட பேராசியருமான உயர்திரு ம. இரகுநாதன் அவர்கட்கும், சிறப்புரை வழங்கிய மதிப்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறீதரன் அவர்கட்கும்** நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதுடன், இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் எல்லா வகையிலும் ஆக்கமும், ஊக்கமும் தந்த எழுத்துலக நண்பர்கள், ஆர்வலர்களுக்கும் இந்நூலை வெளியீடு செய்யும் "**நதியோர நாணல்கள் கலை இலக்கிய மன்றத்துக்கும்**" எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

நன்றி.

சி.சபாரத்தினம்
(அகில இலங்கை சமாதான நீதவான்)
கோச்சாய் வீதி, கொடிகாமம்.

வடவரணி சி.சபா
(கலாபூசணம்)
தொ.இல - 0772882250

பொருளடக்கம்

01.	எதற்காக அழுதாள்?	01 - 11
02.	குறிஞ்சி வரவேற்பாளா...?	12 - 21
03.	அதே முகம்...!	22 - 31
04.	கறுக்காய் கந்தனும், கருங்குளவிக் கூடும்.	32 - 42
05.	அந்த ஒரு நாள்...!	43 - 50
06.	குருநாதன் கொள்கை	51 - 60
07.	விக்டர் நீ...! அதிஸ்டம் இல்லாதவன்...!	61 - 67
08.	மரணிக்கும் மண்வாசனை	68 - 80
09.	கட்சிக்கொடிகள்	81 - 91
10.	சிரிக்க வைக்கிறான் ஜோக்கர்...!	92 - 98
11.	பெற்ற பிள்ளைகளும், நட்ட பிள்ளைகளும்	99 - 108
12.	படித்திருந்தால்...!	109 - 116
13.	கடிகாரம் ஓடவில்லை	117 - 127
14.	கண்கள் மட்டுந்தான் காட்டுவாள்	128 - 137
15.	காடைப்பறவை	138 - 145
16.	மனிதன் மாறுவானா?	146 - 149

எழுதுகோல் வெளிப்படுத்தும்
எழுத்தாளன் சிந்தனையால்
எழுகின்ற படைப்புக்கள்
எல்லோர்க்கும் சொந்தமாகும்.

வடவரணி சி.சபா..

மனிக்கும்
மன்வாசனை
சிறுகதைகள்
கலாபூசணம்
வடவரணி
S.சபா

01 எதற்காக அழுதாள்..?

"சிற்பி" எல்லா வாசகர்களின் மனதிலும் நிலைத்துவிட்ட ஓர் பிரபலமான எழுத்தாளர். அவருக்கென தனியான ஓர் வாசகர் கூட்டம். அவரின் ஆக்கங்கள் இடம்பெறாத முன்னணிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் கிடையாது. குறிப்பாக "கலையூற்று" வாராந்த சஞ்சிகை, நிச்சயமாக அவரின் ஆக்கங்களில் ஏதாவது ஒன்றை தாங்கித்தான் வரும். இவ்வார கலையூற்று வந்துவிட்டதா? என்ற எதிர்பார்ப்புடன் வாசகர்கூட்டம் அலைமோதும். இதனால் கலையூற்று சஞ்சிகை விற்பனையும் பலமடங்கு அதிகரித்தது. சிற்பி மீது வாசகர் கூட்டம் வைத்திருந்த மதிப்பும் அதிகமாயிற்று.

சிற்பியை பேட்டி காண பலர் முயற்சித்தபோதும், அவர்களுக்கு தோல்வியே ஏற்பட்டது. அவரை யாரும் நேரில் சந்திக்க முடியாது? அவரின் உருவம் கூட யாருக்கும் தெரியாது?. "என்னைப் பத்திரிகையில், சஞ்சிகைகளில் சந்தித்துக்கொள்ளுங்கள்" இதுதான் அவரின் பதிலாக அமைந்துவிடும். அதுவும் நேரில் அல்ல, பத்திரிகை சஞ்சிகைகளின் ஊடாகவேதான்.

"துளசி" அவரின் அபிமான வாசகி. தொழிலதிபர் இராமநாதனின் ஒரே செல்லமகள், பட்டதாரியான அவள் தனக்கென ஓர் சிநேகிதி கூட்டத்தை வைத்துக்கொண்டு அவர்களுடன்

உல்லாசமாகப் பொழுதை போக்கிக்கொண்டு, தனது காரில் பவனிவரும், ஓர் கட்டழகுக்கன்னி. சிற்பியின் ஆக்கங்களை தேடித் தேடி வாசித்து திருப்திப்படும் அவளின் அடிமனதில் ஓர் அலாதியான ஆசை. சிற்பியை நான் நேரடியாக சந்திக்கவேண்டும்? சில நிமிடங்கள் மனம் விட்டு பேசவேண்டும்? தனது கருத்துக்களை பரிமாற வேண்டும்? என்பது மட்டுமல்ல, இந்த சந்திப்பை எப்படி ஏற்படுத்த வேண்டும்? என்பதையே அடிக்கடி எண்ணிக் கொண்டிருந்தாள். இந்த எண்ணம் நாளுக்குநாள் அதிகரித்து, அவள் மனதில் ஒரு வெறித்தனத்தை உருவாக்கியது.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. மீனாட்சி அம்மனை தரிசித்துவிட்டு ஏதேச்சையாக கலையூற்று வாராந்த அலுவலகத்துக்கு சென்றாள். பிரதம ஆசிரியரை அணுகி,உங்கள் சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதிவரும் சிற்பியின் வீட்டுவிலாசத்தை தரமுடியுமா? என்று பணிவுடன் கேட்டாள்.

அவளை உற்றுப் பார்த்த ஆசிரியர், சிறிது நேர மௌனத்தின் பின் தன் அருகில் நின்ற இளம் பெண் ஒருத்தியை சுட்டிக்காட்டி, இவள் பெயர் செம்பருத்தி இவள் ஒரு ஓவியர். சிற்பியின் ஆக்கங்களுக்கு பொருத்தமான படங்களை வரைந்து தருபவள் மட்டுமல்ல, சிற்பியின் ஆக்கங்களை எடுத்துக்கொண்டு அலுவல கத்துக்கு வருபவளும் இவளேதான். இவளைத் தொடர்பு கொள்வதன் மூலம் உனக்கு பல தகவல்கள் கிடைக்கலாம்.....! என்று கூறினார்.

துளசி செம்பருத்தியின் அருகில் சென்றாள். செம்பருத்தியே ஓர் ஓவியம் போலவே காட்சியளித்தாள். நான் சிற்பியை நேரில் சந்திக்க விரும்புகிறேன்?. எனக்கு உங்களால் உதவ முடியுமா?

என துளசி கேட்டபோது, செம்பருத்தியின் பார்வை ஓர் ஊடுருவல் போல் துளசியைத் தாக்கியது.

அவர் எவரையும் நேரில் சந்திக்க விரும்புவதில்லை? இருந்தாலும் முயற்சி செய்கிறேன். அடுத்தவாரம் சந்திக்கும்போது முடிவைத் தெரிவிக்கிறேன், என்று சுருக்கமாக கூறினாள்.

பிளீஸ், எப்படியும் முயற்சி செய்யுங்கள், நல்ல முடிவுடன் வாருங்கள். என் பெயர் துளசி. நான் அவரின் ஆக்கங்களை பெரிதும் விரும்பும் தீவிரமான வாசகி. துளசி செம்பருத்தியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, தன் படகுக்காரில் ஏறிக்கொண்டாள். துளசிக்கு சிற்பியை நேரில் சந்தித்துவிட்டது போன்ற மனத்திருப்தி. அடுத்தவாரம் வரை அவளால் உறங்கமுடியவில்லை. நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை மீனாட்சியம்மனைத் தரிசித்து விட்டு கலையூற்று சஞ்சிகை காரியாலயத்துக்கு சென்றாள். அவள் எதிர்பார்த்தது போலவே ஓவியர் செம்பருத்தி அங்கு வந்திருந்தாள். அவள் முகத்தில் ஓர் புன்முறுவல், தங்களைச் சந்திப்பதற்கு சிற்பியின் ஒப்புதல் கிடைத்துவிட்டது. நாளை மறுதினம் மு.ப 9.00 மணிக்கு நீங்கள் அவரைச் சந்திக்கலாம். துளசியால் நம்பவே முடியவில்லை?. செம்பருத்தியின் இருகைகளையும் பற்றிக்கொண்டு நன்றி கூறினாள்.

அன்றைய தினம் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டாள். தனக்கு விருப்பமான சாறியை தெரிவு செய்து அணிந்து கொண்டாள். அக்கோலத்தில் துளசியை பார்க்கும்போது தேவலோகத்திலிருந்து தேவதை ஒன்று இறங்கிவந்தது போலவே

இருந்தது. தனது தோழிகள் பட்டாளத்துடன் படகுக்காரில் ஏறிக் கொண்டு செம்பருத்தி சொன்ன அடையாளங்களை மனதில் பதிய வைத்துக்கொண்டு சிற்பியின் வீட்டுக்கு சென்றாள்.

கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் ஓர் சிறிய வீடு. சமையல் அறை உட்பட மூன்று அறைகளைக் கொண்டிருந்தது. நடுவில் ஓர் கூடம். கிணற்றை அண்டி ஓர் சிறுதோட்டம். அமைதி குடி கொண்டிருந்த அந்த வீட்டில் நடுக்கூடத்தில் ஓர் அழகான வாலிபன் றேடியோவில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த ஓர் சினிமாப் பாடலைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தான்.

கண்ணன் பிறந்ததும் சிறைச்சாலை - அந்த
காந்தி இருந்ததும் சிறைச்சாலை
சிறைச்சாலை ஒரு கோவில்
திரும்பி வந்தவன் குருநாதன்

இப்பாடலின் வரிகளை ரசித்துக் கொண்டிருந்தான் அந்த வாலிபன். இந்த பாடலுக்கும் அவன் வாழ்க்கைக்கும் ஓர் தெடர்பு இருப்பதை பாடல் நினைவூட்டிக்கொண்டிருந்தது வாசலில் கேட்ட சத்தத்தைத் தொடர்ந்து, கட்டிலிலிருந்து எழும்பி உட்கார்ந்து கொண்டான் அந்த வாலிபன். "வாருங்கள் வாருங்கள்" என்று அன்புடன் வரவேற்ற அந்த வாலிபன், செம்பருத்தி என்று குரல் கொடுத்தான். சமையல் அறையிலிருந்து செம்பருத்தியும் ஓடிவந்து துளசியையும் தோழிகளையும் வரவேற்றாள்.

உங்கள் கற்பனை வளம் மிகவும் பிரமாதம். எழுத்து நடை அபூர்வம். நீங்கள் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட ஓர் கலைஞன் அல்ல, நீங்கள் ஓர் பிறவிக் கலைஞன் என்று பல்வேறு வார்த்தைகளால் புகழ்ந்த துளசி, உங்கள் சொந்தப்பெயர் என்ன? என்று கேட்டபோது "அற்புதன்" என்று அமைதியுடன் கூறினான்

அந்த வாலிபன். அற்புதனின் பேச்சு மட்டும் அவர்களைக் கவரவில்லை, அவனின் அழகும் கன்னியர் கூட்டத்தைக் கவர்ந்து இழுத்ததால் துளசியைப் பார்த்து தோழியர் கண் சிமிட்டுவதும் அவள் தொடையில் செல்லமாகக் கிள்ளுவதும், அவள் காதுக்குள் குசுகுசுப்பதும் துளசிக்கு எரிச்சலையூட்டினாலும் அதில் ஓர் இன்பம் இருப்பதை துளசி உணர்ந்து கொண்டாள்.

செம்பருத்தி கொடுத்த தேநீரை உறிஞ்சிக்கொண்டு துளசியும் தோழியரும் இருந்த போது, அருகிலுள்ள அறைக்குள் "லொக்கு லொக்கு" என இருமிக்கொண்டு "தம்பி அற்புதன்" என்று தேய்ந்து போன குரலில் முனகும், ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"அக்கா" என்று அழைத்துக்கொண்டு அவர்களை விட்டு அடுத்த அறைக்குள் சென்றான் அற்புதன். சிறிது நேரத்தின் பின்னர் திரும்பி வந்த அற்புதன், செம்பருத்தி அக்காவுக்கு தேநீர் போட்டுக்கொடு என்று கூறிவிட்டு அமைதியுடன் உட்கார்ந்து விட்டான்.

அற்புதனின் குடும்பப் பின்னணியை அறியும் ஆவலுடன் அவனை ஏறிட்டு நோக்கினாள் துளசி. அதை உணர்ந்து கொண்ட அற்புதன் துளசியைப் பார்த்து முறுவலித்துவிட்டு, குடும்பத்தின் சோகத்தை வெளிப்படுத்தினான்.

அடுத்த அறையில் படுத்திருப்பவர் எனது அக்கா, அவள் பெயர் **சிவப்பிரியா**. அவள் நடமாடமுடியாத நோயாளி என்பதுடன், ஓர் குஸ்டரோகியுமாவாள். அவளைக் குளிப்பாட்டி துப்பரவு செய்து பராமரிக்க ஆணாகிய என்னால் முடியாது என்பதனால், அவளின் பள்ளித்தோழியாகிய செம்பருத்தி இங்கு வேலைக்காக தங்கியுள்ளதுடன், எனக்கும் உதவியாக உள்ளாள். மேலும் அவளுக்கு ஓவியத்தின் மீது உள்ள ஆற்றலும் திறமையும்,

அக்காவை கவர்ந்துள்ளது. நாங்கள் ஒவ்வொருவரும் அன்பாகவும் பாசமாகவும் உள்ளோம் என்று சுருக்கமாக கூறினான்.

துளசிக்கு அற்புதன் மீதும், அவன் குடும்பத்தின் மீதும், ஓர் உரிமை இருப்பது போன்ற உணர்வில் தன்னையும் அறியாது, அற்புதன் அனுமதியும் பெறாது, அற்புதனின் அக்கா சிவப்பிரியா தங்கியிருந்த அறைக்குள் சென்றாள்.

துளசி தனது உடம்பில் அடித்திருந்த சென்டின் மணத்தையும் மீறி சிவப்பிரியாவின் உடம்பிலிருந்து வந்த சீழ் மணம், அவளின் குடலைக்குமட்டிக் கொண்டு வந்தது. இராமநாதனின் செல்வப்புதல்வி அருவருப்புடன் முகத்தை சுளித்த வண்ணம், அந்த அறையை நோட்டமிட்டாள். அற்புதன் எழுதிய எழுத்தாக்கத்தின் சிதறல்கள், துண்டுக்காகிதங்கள், அறைக்குள் சிதறிக்கிடந்தது. ஒப்பனைக்காக சிலவார்த்தைகள் பேசிவிட்டு அறையிலிருந்து வேகமாக வெளியே வந்தாள் துளசி.

துளசியின் முகத்தை ஏறிட்டு நோக்கினான் அற்புதன். அக்காவின் அறைக்குள் அதிகநேரம் செலவிடுவது தெரிகிறது? என்றாள் துளசி. ஆமாம், எனது எழுத்தாக்கம் படைப்புக்கள் அனைத்தையும் அக்காவின் இறுதி அபிப்பிராயத்தை பெற்ற பின்னர் தான், பிரசுரத்துக்காக அனுப்பிவைப்பேன். அக்கா மிகவும் திறமைசாலி ,பெருமையுடன் கூறினான் அற்புதன். இருந்தாலும் அக்காவின் அறையில் அதிக நேரம் தங்குவது பொருத்தமில்லை. ஏனெனில் அப்படியான ஓர் நோயாளி அவர். அதற்காகத்தான் சொல்கிறேன் என்று கூறிய துளசி அற்புதனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள்.

துளசி அற்புதன் சந்திப்புக்கள் அடிக்கடி இடம்பெற்றது. அதில் நெருக்கம் ஏற்படுவதை சிவப்பிரியாவும் செம்பருத்தியும் உணர்ந்து கொள்ள தவறவில்லை. அன்றைய தினமும் அற்புதனும் துளசியும் கதைத்துக்கொண்டிருந்த போது, அடுத்த அறைக்குள் இருந்து முனகல் சத்தம் பலமாகக் கேட்டது.

அற்புதன் எழுந்து அறைக்குள் சென்று திரும்பி வந்து, அக்கா உங்களை வரும்படி அழைக்கிறார் என்று கூறினான் துளசியிடம்.

இந்த அழைப்பை எதிர்கொள்ள விரும்பாத துளசி, மிகுந்த அருவருப்புடன் சிவப்பிரியாவின் அறைக்குள் சென்றபோது, தனது கையை சிரமப்பட்டு தூக்கி அருகிலிருந்த கதிரையில் அமரும்படி சைகை செய்தாள். முகத்தை சுளித்துக்கொண்டு, விருப்பமின்றி அமர்ந்தாள் துளசி.

துளசி நீ அற்புதனைக் காதலிக்கிறாய் அல்லவா? அது எனக்கு நன்கு தெரியும். அவனைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? இக் கேள்வியை துளசி சிறிதும் எதிர்பார்க்கவில்லை?. என்ன பதில் சொல்வதென்று துளசிக்கு தெரியவில்லை!.

மௌனம் புன்னகையாகி, புன்னகை ஆனந்தமாகி, வாய் நிறைந்த சிரிப்புடன் "ஆம்" என்று அழுத்தமாக கூறினாள் துளசி. எனது "**அடுத்த கேள்வி மிக முக்கியமானது**" என்ற பீடிகையுடன் சிவப்பிரியா தொடர்ந்தாள்.

நீ அற்புதனைக் கண்டதன் பின் காதலித்தாயா? அல்லது அதற்கு முன் அவன் எழுத்தாற்றலைக் கண்டு அதில் மனதைப்

பறி கொடுத்தாயா? அற்புதனை எனக்கு யாரென்றே தெரியாது?. அவருக்கு எத்தனை வயது இருக்கும் என்று கூட எனக்கு தெரியாது?. அவர் எழுத்துக்களை விரும்பி படித்த பின்னர் அவரின் எழுத்துகளின் மீது தான். எனக்கு காதல் வந்தது. அவ்வளவு தூரம் அவரது எழுத்தாற்றல் உள்ளது. அதை எப்போது படிப்பேன்? என்று நான் எதிர்பார்ப்பேன். அதை ஒரு வெறி என்று கூட கூறலாம் என்று கூறினாள் துளசி.சிவப்பிரியா சைகை செய்ததும் அறையை விட்டுக் கிளம்பினாள் துளசி. அற்புதன் அறைக்கு வந்த துளசி எதுவுமே பேசாது, மிகச்சந்தோசத்துடன் வீட்டுக்கு சென்றாள்.

நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தை அசைபோட்ட வண்ணம் துளசியின் படகுக்கார் அற்புதன் வீட்டை நோக்கிப் புறப்பட்டது. வீடு மிகவும் அமைதியாக இருந்ததுடன் ஏதேவொரு சோகம் கப்பியிருந்ததையும், துளசி உணர்ந்து கொண்டாள். செம்பருத்தியின் கண்களிலிருந்தும், அற்புதன் கண்களிலிருந்தும், கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. துளசியைக் கண்ட செம்பருத்தி கட்டிப்பிடித்துக் கொண்டு, நேற்றைய தினம் உங்களை அழைத்துக் கதைத்த அக்கா சிவப்பிரியா, சிறிது நேரத்தில் எங்களைக் கூப்பிட்டு மகிழ்ச்சியுடன் கதைத்தா, கதைத்துக்கொண்டிருக்கும் போதே "அவரின் உயிர் உடலைவிட்டு பிரிந்து விட்டது" என்ற செய்தியைச் சொல்லி விம்மினாள் செம்பருத்தி.

இராமநாதன் மகள் துளசியின் செலவுடனும், அயலவர் சிலரின் உதவியுடனும் சிவப்பிரியாவின் உடல் தகனம் செய்யப் பட்டது. துளசியும் கூடவே இருந்தாள், எல்லாக் காரியங்களும் எளிமையாக செய்து முடிக்கப்பட்டது. தினமும் காலையில் வரும் துளசி மாலைவரை அவர்களுடன் இருந்தபோதும், அற்புதன் எதுவுமே துளசியுடன் கதைக்கவில்லை. செம்பருத்தியின் முகத்திலும்

வெறுமை குடிகொண்டிருந்தது. அடுத்த கட்ட நகர்வாக அற்புதனைக் கரம்பிடித்துக் கொண்டு, செம்பருத்தியையும் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும்? என்ற முடிவுடன் துளசி புறப்பட்டுச் சென்றாள். அவளின் மனதில் எதிர்கால இன்பநினைவுகள் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன.

துளசி அடுத்த நாள் காலை வந்தபோது, அற்புதன் அங்கு இருக்கவில்லை. செம்பருத்தி மட்டுமே தனியே இருந்து யோசித்துக் கொண்டிருந்தாள். அற்புதன் எங்கே? என்று கேட்ட துளசியிடம் செம்பருத்தி ஓர் கடிதத்தை கொடுத்துவிட்டு அறைக்குள் சென்று விட்டாள். துளசி பரபரப்பாக கடித உறையைக் கிழித்து வாசிக்கத் தொடங்கினாள்.

அன்புக்குரிய சகோதரி துளசி,

நீங்கள் முதலில் என்னை மன்னித்துக்கொள்ளவும் இக்கடிதத்தை மிகவும் பொறுமையுடன் ஆறுதலாக வாசிக்கவும். இக்கடிதத்தில் உள்ள விடயங்கள் உன்னால் நம்பமுடியாதவையாகவும், ஆச்சரியத்தையும், ஏன்? அதிர்ச்சியைத் தருவதாகவும் இருக்கலாம். எண்ணற்ற வாசகர்களின் மனதில் குடிகொண்டுள்ள, ஏன்? நீயே இதுவரை நம்பிக்கொண்டிருக்கும் "சிற்பி" என்ற எழுத்தாளன் நானல்ல. நான் ஒரு தோட்டக்காரன். செய்யாத குற்றம் ஒன்றுக்காக தண்டிக்கப் பட்டு, பத்துவருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவன். செம்பருத்தி எனது உடன் பிறந்த தங்கை. நான் சிறை சென்று வந்ததினால் சமுதாயம் எங்களைவெறுத்து ஒதுக்கிவிட்டது.

இந்நிலையில் தாய்தந்தையற்ற எங்களை இருகரம் நீட்டி அன்புடன் அரவணைத்தவள்தான், இந்த சிவப்பிரியா என்ற குஸ்டரோகி. அவள் எங்களுடன் உடன்பிறவாது விட்டாலும், அவளை எங்கள் உடன்பிறந்த அக்காவிலும் மேலாக "தெய்வமாக" மதித்து வந்தோம். அவளுக்கு பணிவிடை செய்து வந்தோம். அவள் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டாள். இனி எங்களுக்கு இங்கு வேலையில்லை. எமக்கு ஆதரவு தருவாரும் யாரும் இல்லை? இதே சிவப்பிரியா தான் எண்ணற்ற வாசகர்களின் மனதிலும், ஏன்? உனது மனதிலும் இடம்பிடித்த "சிற்பி" என்ற எழுத்தாளர். சிவப்பிரியா என்ற தனது பெயரை "சிற்பி" எனச்சுருக்கி, தனது எழுத்தாற்றல் மூலம் வாசகர் மத்தியில் நீங்காத இடத்தைப் பிடித்தவள். குஸ்டரோகி ஆகிய தன்னால் வெளிஉலகில் பிரவேசிக்க முடியாத நிலையில், வாசகர்களை நேரடியாகச் சந்திக்க முடியாது, பேட்டிகளையும் நேர்காணல்களையும் தவிர்த்து வந்தாள். சில சந்தர்ப்பங்களில் என்னைப் பயன்படுத்திக் கொண்டாள்.

வாசகர்களின் எத்தனையோ பாராட்டுக்கள் கிடைத்தபோதும், அதில் திருப்திப்படாது நேரடியாக தனது எழுத்தாற்றலை மதிப்பீடு செய்வதற்கு, உன்னைப் பயன்படுத்திக்கொண்டாள். அற்புதனைக் கண்டதன் பின் அவனைக் காதலித்தாயா? அல்லது அவனின் எழுத் தாற்றலைக் கண்டு, அதில் மனதைப் பறிகொடுத்தாயா? என்ற கேள்விக்கு நீங்கள் அளித்த பதில் முலம், அவளின் எதிர்பார்ப்பு பூரண திருப்தியாக அமைந்து விட்டது. அந்த மனநிறைவில் நீ சென்ற ஒரு சில நிமிடத்தில் அவளின் உயிர் பிரிந்து, ஆத்மா சாந்தி அடைந்துவிட்டது.

சகோதரி துளசி

நான் உன்னிடம் ஓர் உதவியை எதிர்பார்க்கிறேன். இனி என் தங்கை செம்பருத்தியும் நானும் வாழவேண்டும்! எங்களுக்கு உதவுவார் எவருமில்லை? அதற்காக நான் ஒரு வேலைதேடி தூர இடமொன்றுக்கு செல்கிறேன். நான் வர இருவாரங்கள் கூட செல்லலாம், அது வரை செம்பருத்தியை உனது பொறுப்பில் விட்டு செல்கிறேன்.

நீ ஒரு தொழில் அதிபரின் மகள். உன் அந்தஸ்துக்கும் அறிவுக்கும் அழகுக்கும் ஏற்ற ஒரு அழகான வாலிபனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? இதுதான் எனது ஆசை. அதன்பின் உனது வீட்டில் அல்லது தோட்டத்தில் ஒரு கூலியாளர் வேலை ஒன்று கிடைக்குமாயின் நான் அதை சந்தோசமாக செய்ய காத்திருக்கிறேன்.

அன்புக்குரிய, **அற்புதன்.**

அற்புதனின் கடிதத்தை வாசித்த துளசியின் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று வடிந்து கொண்டிருந்தது. துளசி எதை நினைத்து? **எதற்காக அழுதாள்?** என்பது அவளுக்கு மட்டுமே தெரியும்.

2018ம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களமும், தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய தேசிய இலக்கிய விழா போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட சிறுகதை.

02

குறிஞ்சி வரவேற்பாளா?

குறிஞ்சி...! குறிஞ்சி...! என்னம்மா நன்றாக இருட்டி நேரம் ஏழு மணிக்கு மேல் ஆகிவிட்டது. இன்னமும் செல்வனையும் அருணையும் காணவில்லையே! அதுதானப்பா நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றாள் மகள் குறிஞ்சி.

அந்த மலை அடிவாரப்பகுதி சூனியமாக காட்சியளித்தது. சில்வண்டுகளின் இரைச்சலைத் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை. கண்பார்வை குறைந்த மலையாண்டி கவலைப்பட்டுக்கொண்டிருந்த நேரம், அப்பா... அப்பா... என்று அழைத்துக்கொண்டு செல்வனும் அருணும் வீட்டுக்குள் நுழைந்தபோது, மலையாண்டி மனதில் ஓர் ஆத்ம திருப்தி.

செல்வனும் அருணும் மலையாண்டியின் பிள்ளைகள் அல்ல, காட்டிலாகாவில் வேலைசெய்யும் உயர் உத்தியோகத்தர்கள். ஆறு மாத காலத்துக்குமுன் மலையடிவாரப்பகுதியில் சில ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அரசினால் அங்கு அனுப்பப்பட்டவர்கள். ஆரம்பத்தில் செல்வனுக்கும் அருணுக்கும் அந்தக்காட்டைப்பற்றியோ, அப்பகுதி மக்களைப் பற்றியோ, எதுவுமே தெரியாது. கிராமத்துக்குள் வந்து விசாரித்தபோது மலையாண்டியைப் பற்றி அறிந்துகொண்டனர்.

அவரை "ஆண்டி" என்று தான் எல்லோரும் அழைப்பார்கள். அவர் காட்டுமரங்கள் மூலிகைச்செடிகள், காட்டுமிருகங்கள், அவற்றின் குணாதிசயங்கள், காட்டுப்பாதைகள், காட்டின் இயல்புகள் அனைத்தையும் அணு அணுவாக நன்கு அறிந்தவர் என்பதுடன்

அவர் ஒரு மூலிகை வைத்தியர். இதனால் அவரைப்பற்றி அம்மலைக் கிராம மக்கள் அனைவரும் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

அப்படிப்பட்ட ஒருவரின் தொடர்பு அவர்களுக்கு கிடைக்கு மென அவர்கள்சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அத்துடன் அவர் வீட்டிலேயே தங்க இடம் கிடைத்ததும் அதிசயந்தான். செல்வனும் அருணும் மரியாதையுடன் ஆண்டியை "ஆண்டியப்பா... ஆண்டியப்பா" என்று அன்புடன் அழைத்ததால், அவர் செல்வனுக்கும் அருணுக்கும் அப்பாவாகிவிட்டார்.

அவருடன் இரவு நேரங்களில் கதைக்கும்போது, காடுபற்றிய மேலதிக விபரங்களையும் அறிய அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் தம்வீட்டில் தங்குவது ஆரம்பத்தில் மகள் குறிஞ்சிக்கு விருப்பமில்லாதிருந்தபோதும், அவர்களின் அணுகுமுறை பழக்கவழக்கங்கள், தன்மீது காட்டும் அன்பு என்பவற்றால் நாளடைவில் குறிஞ்சிக்கு அவர்களை நன்றாகப் பிடித்துவிட்டது. இதனால் தாமாகவே அவர்கள் சமைத்துச்சாப்பிட்ட நிலையை மாற்றி, அவர்களுக்கும் தானே உணவு சமைத்துப் பரிமாறும் நிலையை, குறிஞ்சி ஏற்படுத்திக் கொண்டாள். உடன் பிறந்த சகோதர்கள் போல இருவரும் அவளை அன்புடன் குறிஞ்சி... குறிஞ்சி... என அழைக்கும்போது, அவள் மனம் நெகிழ்ந்துவிடும். அவர்கள் வர நேரம் சற்று தாமதமானாலும், அவர்களை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பாள்.

இந்த ஆறுமாத காலத்துள் பல்வேறு விடயங்களை, செல்வனும் அருணும் ஆண்டியப்பாவும் அசைபோட்டுக்கொண்டாலும், ஆண்டியப்பாவின் மனதில் ஓர் வெறுமை குடிகொண்டிருந்ததும், அவர் மனம்விட்டு சிரிக்காது மனதில் ஏதோவொரு பாரமான

சுமையை சுமந்திருப்பதையும். இருவரும் உணர்ந்து கொண்டனர். இவர்களின் அன்றாட சம்பாசனைகளில் குறிஞ்சியும் கலந்து கொண்ட சந்தர்ப்பங்களில். இவர்களின் நகைச்சுவைகளைக் கேட்டு குறிஞ்சி தன் கள்ளமற்ற வெள்ளைச்சிரிப்பை சிரித்தாளே தவிர. ஆண்டியப்பா சிரித்ததை அவர்கள் என்றுமே காணவில்லை.

அருணை விட செல்வன் துடுக்கான பேர்வழி. மனதில் எதையும் வைத்திருக்கமாட்டாதவன். மனதில் பட்டதை துணிந்து கேட்டுவிட்டான். அப்பா உங்கள் விரக்தி நிலைக்கான காரணத்தை நாங்கள் அறியக் கூடாதா? ஆண்டியப்பா உடன் பதில் கூறவில்லை. வெளிப்படையாக கூறுவதில் கஸ்டமிருந்தால் தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள், என்று கூறினான் செல்வன். நீண்ட நேர மௌனத்தின் பின் அவர் உதடுகள் அசையத்தொடங்கியது. கண்கள் பனித்தன. சோகம் கப்பிக் கொண்டது. குரல் தளதளத்தது. வார்த்தைகள் சிறிதுசிறிதாக வெளிவரத் தொடங்கின.

கடந்த மூன்று வருடத்தின் முன், நானும் உங்களைப் போல மனம்விட்டு சிரித்து மகிழ்வடைந்தவன்தான். என்மனைவி "ராமாயி" நகைச்சுவை ததும்ப நன்றாக சிரித்துக் கதைப்பாள். எனக்கும் என்மகள் குறிஞ்சிக்கும் அவள் எந்தக் குறையும் விட்டு வைக்கவில்லை. விஷக்காய்ச்சல் நோயினால் அவள் பீடிக்கப்பட்டு அவதிப்பட்ட போது, என்மூலிகை வைத்தியத்தினால் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. அவள் எம்மைவிட்டு பிரியும் நேரம் வந்துவிட்டது. என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவள் உதடுகள் எதையோ சொல்ல முனைந்தது ஆனால் முடியவில்லை. குறிஞ்சியின் கையைப் பிடித்து எனது கைக்குள் அழுத்தினாள். முகத்தை வாஞ்சையுடன் நோக்கினாள். சிறிது நேரத்தில் அவள்

எங்களைவிட்டு பிரிந்துவிட்டாள். இதற்கு மேல் ஆண்டியப்பாவால் பேசமுடியவில்லை.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதான் குறிஞ்சி மலர் மலரும். குறிஞ்சி மலர்கள் மலர்ந்த அந்த வருடத்தில் தான் மலையாண்டிக்கும் ராமாயிக்கும் ஓர் மகள் பிறந்தாள். அதனால் அவளுக்கு குறிஞ்சி என்று பெயரிட்டனர். அடுத்த பன்னிரண்டாம் ஆண்டில்தான் குறிஞ்சியால் "குறிஞ்சி" மலரை அடையாளம் காண முடிந்தது. அப்போது அவள் பெரியவளானாள். அப்போது அவளின் தாய் ராமாயி கூறினாள், குறிஞ்சி... நீ முதலாவது குறிஞ்சிமலர் மலர்ந்த போது, நீ பிறந்தாய். இரண்டாவது குறிஞ்சிமலர் மலர்ந்த போது புத்தியறிந்து பெரியவளாகி விட்டாய். மூன்றாவது குறிஞ்சி மலர் மலரும் போது நீ திருமணம் முடித்து ஒரு சில குழந்தைகளுக்கு தாயாகிவிடுவாய்... ஆனால்...? மூன்றாவது குறிஞ்சி மலர இன்னமும் ஆறுமாதங்கள்தான் உள்ளது. ஆனால் என் மகள் குறிஞ்சியின் நிலை? ஆண்டியப்பாவின் கடைக்கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அப்பா போய்ப்படுங்கள். என்று கூறிய குறிஞ்சி, தானும் படுக்கச் சென்று விட்டாள். செல்வனும் அருணும் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர், பின்னர் படுக்கச்சென்று விட்டனர்.

சில தினங்களின் பின் ஒருநாள் செல்வன் அருணிடம் கூறினான் "அருண் நான் உன்னிடம் ஒருவிடயத்தை கதைக்க வேண்டும்". நாம் இருவரும் ஒன்றாக கதைத்து ஒருமுடிவு எடுக்க வேண்டும்? நீயும் நானும் ஒரே வயது கொண்டவர்கள்,ஒரே பாடசாலையில் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்தவர்கள் ஒரே நாளில் நியமனம் கிடைத்து ஒன்றாக உத்தியோகம் பார்ப்பவர்கள். இன்று வரை எம்மிடத்தில் எந்தக்கருத்து வேற்றுமையும் ஏற்பட்டதில்லை.

நான் இரண்டு நாட்கள் இரவு இரவாக நன்றாகச் சிந்தித்த பின்னரே, இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.

செல்வன் கூறிய முடிவு...! அருணை மலைக்கச் செய்தது. அருண் நீ இதை எதிர்பார்க்கமாட்டாய்? நம் இருவரில் ஒருவர் குறிஞ்சியைக் கட்டாயமாகத் திருமணம் செய்து கொள்ளவேண்டும். இது தான் என் முடிவு. என் முடிவை பைத்தியமானதென நீ நினைக்கலாம்? "வாழ்க்கை என்பது எமது சுயநலத்தில் மட்டுமன்றி, தியாகத்தின் அடிப்படையிலும் அமையலாம்". என் முடிவு இரண்டாவது வகையைச் சேர்ந்தது.

சிறிதுநேர மௌனத்தின் பின் அருண் கூறினான், செல்வன் சில தினங்களுக்கு முன்னர் ஆண்டியப்பா கூறிய விடயங்கள், என்னையும் சிந்திக்க வைத்தது. ஆனால் குறிஞ்சி சிறுபிள்ளை அல்ல. இருபத்தினான்கு வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் பருவப் பெண். அவள் மனதில் என்ன? என்ன? கற்பனைக் கனவுகள் உள்ளதோ? நாம் இருவரும் ஒரு முடிவுக்கு வந்தாலும், எங்கள் இருவரில் குறிஞ்சி யாரை விரும்புவாள்? ஒரு சமயம் இருவரையுமே விரும்பாது கூடப் போகலாம்? குறிஞ்சியின் மனநிலையைத் தெரிந்து கொண்ட பின், நாம் ஒரு முடிவுக்கு வரலாம். தற்போது நீ படுத்துக் கொள். இருவரும் படுத்து விட்டனர்.

செல்வனும் அருணும் தமது கடமைகளை முடித்து விடு முறையில் ஊருக்கு புறப்பட, இன்னமும் ஒருவாரம் மாத்திரமே உள்ளது. மீண்டும் இம்மலைக் கிராமத்துக்கு வந்து கடமையை பொறுப்பேற்க, இன்னமும் ஆறுமாதங்கள் செல்லும். அருணும் சேர்ந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் குறிஞ்சியிடம், செல்வன் தனது அபிப்பிராயத்தை நேரில் கேட்டுவிட்டான். குறிஞ்சி இதை சற்றும்

எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை? மௌனத்தைத் தவிர அவளிடமிருந்து எப்பதிலும் கிடைக்கவில்லை. அவளின் மௌனம் இருவருக்கும் சங்கடத்தைக் கொடுத்தது.

குறிஞ்சி நாம் இருவரில் ஒருவர் சொல்லும் பதிலைவிட, நீ முடிவு செய்து சொல்லும் பதில் தான் சிறந்தது. அதில்தான் உன் எதிர்காலம், வாழ்க்கையின் சந்தோசம் எல்லாமே தங்கியுள்ளது. எங்கள் இருவரில் ஒருவரைக் கூட உனக்குப் பிடிக்காதிருக்கலாம்? ஆனால் நிச்சயமாக உன் முடிவு எமக்குத் தேவை. கண்டிப்புடன் கூறிய செல்வன், நீயே சிந்தித்து முடிவு செய். உன்முடிவு எதுவானாலும் நாங்கள் இருவரும் ஏற்றுக்கொள்வோம் என்று கூறிவிட்டு தன்பாட்டில் சென்றுவிட்டான்.

அன்றிரவு தன் தாயார் ராமாயி படத்தையும், தம் குடும்பத்தினர் வணங்கும் காளியம்மன் படத்தையும் கும்பிட்ட குறிஞ்சி, ஒரு திடமான முடிவுக்கு வந்தாள். இருவரின் பெயரையும் ஒரு சிறு துண்டுக் காகிதத்தில் எழுதி சுருட்டி சாமிப்படங்களில் வைத்து, தாயாரை நினைத்துக் கொண்டு ஒரு துண்டை எடுப்பது?, அதில் யார் பெயர் வருகிறதோ? அதன்படி தனது சம்மதத்தைத் தெரிவிப்பது என்று. இப்போது குறிஞ்சி மனம் அமைதியடைந்தது

சில தினங்கள் கழிந்தது. அன்று பிற்பகல் செல்வனும் அருணும் புறப்படவுள்ளனர். பயணத்துக்கான சகல ஆயத்தங்களும் முடிந்தது. தம்மை ஏற்றவரும் வாகனத்தை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தனர். நன்றாக இருட்டத் தொடங்கிவிட்டது. தாங்கள் எதிர்பார்க்கும் ஜீப் வண்டி வந்தாலும், இரவில் மலைப்பாதையால் வண்டியைச் செலுத்துவது ஆபத்தானது. தமது பயணத்தைக் காலையில்

வைத்துக் கொள்ளலாமென முடிவு செய்தனர். மிகத் தூரத்தில் பொட்டுப் போன்ற இரு வெளிச்சம் . அது பெரிதாகி மலையாண்டி வீட்டை நோக்கி வந்தபோது. அது தங்களை ஏற்றிச் செல்ல வந்திருக்கும் ஜீப் வண்டிதான் என்பதைப் புரிந்து கொண்டனர். என்ன அன்ரன்? ஏன் தாமதம்? இல்லைச் சேர்..... வண்டியில் சிறு திருத்தம்..... அது தான் என்று. ஜீப்சாரதி அன்ரன் தடக்கித் தடக்கி கூறினான். உன் இரு மனைவியரிடமும் கூறி அவர்களைச் சமாளித்துவர நேரம் போய்விட்டதென்று கூறன்? செல்வன் சிரித்துக் கொண்டே அன்ரனைப் பார்த்துக் கூறினான். சரி... சரி... பரவாயில்லை...! நாளை காலையே நாம் புறப்படலாம். செல்வன் குறிஞ்சியைப் பார்த்து குறிஞ்சி... அன்ரனுக்கு ஓர் சாப்பாடு ஒழுங்கு பண்ண முடியுமா? என்று கேட்டபோது, அன்ரன் இடைமறித்து சேர்... நான் ரவுணில் இருந்து வரும் போது, ஓர் பார்சல் கட்டிக்கொண்டு வந்தேன். என்று கூறியபோது, எல்லோருக்கும் திருப்தியாக இருந்தது.

அன்று இரவு நீண்டநேரம் செல்வனும் அருணும் ஆண்டியப் பாவும் மனம் விட்டுக் கதைத்துக் கொண்டிருந்த போது, குறிஞ்சியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். ஆண்டியப்பாவின் வீடு வசதி குறைந்ததாக இருந்தமையினால் மற்றவர்களுக்குச் சிரமத்தை கெடுக்காத அன்ரன், ஜீப் வண்டிக்குள்ளேயே படுத்துவிட்டான். கும்மிருட்டு, கடும்குளிர் அனைவரும் படுக்கமுன், "உனது தளப்ப மில்லாத திடமான முடிவை காலையில் தெரிவித்துவிடு" என்பதை ஞாபகமூட்டினான் செல்வன். சிறிது நேரத்தில் அனைவரும் படுத்துவிட்டனர்.

அடுத்தநாள் அதிகாலை நான்கு மணிக்கு முன்னரே நித்திரை விட்டெழுந்த குறிஞ்சி, அனைவருக்கும் காலை உணவு தயாரித்து

விட்டாள். குறிஞ்சியின் காலை உணவை உட்கொண்ட செல்வனும் அருணும் சாரதி அன்ரனும் புறப்படத் தயாரானார்கள். குறிஞ்சியின் பதிலை இருவரும் எதிர்பார்த்தனர்? அவர்கள் முன்னால் வந்த குறிஞ்சியிடம். இதற்கு முன்னிருந்த கள்ளமற்ற வெள்ளைச் சிரிப்பை காண முடியவில்லை? இருவரிடமும் எதையோ குறிஞ்சி எதிர்பார்த்தாள்? அவள் மனதில் ஒரு ஏக்கம்? அவர்களிடமிருந்து எப்பதிலும் வரவில்லை? அவள் கண்கள் குளமாயின. இருவரையும் ஏறிட்டு நோக்கிய குறிஞ்சி, தலையைத் தாழ்த்திக்கொண்டு வீட்டுக்குள் சென்று விட்டாள்.

செல்வனும் அருணும் ஆண்டியப்பாவை நோக்கி, அப்பா நாங்கள் போட்டுவரப்போகிறோம் என்று கூறி விடைபெற்றனர். ஆண்டியப்பாவின் கண்கள் பனித்தன. பிள்ளைகளே, எனது உடல்நிலை மோசமாகி விட்டது. நீங்கள் ஆறாவது மாசம் திரும்பி வரும்போது நான் உயிருடன் இருப்பேனோ தெரியாது? நீங்கள் இங்கு வரும்போது குறிஞ்சி மலர்களும் மலர்ந்து விடும். குறிஞ்சியும் இங்குதான் இருப்பாள். உங்களை ஒரு குறையுமின்றிக் குறிஞ்சி கவனிப்பாள். "நீங்கள் போய் வாருங்கள்" அவர் கண்கள் பனித்தது.

ஜீப்வண்டி புறப்பட்டபோது வீட்டுக்குள் இருந்தபடியே செல்வனையும் அருணையும் ஏக்கத்துடன் மாறிமாறி பார்த்த குறிஞ்சியின் மனம், பதில் தெரியாத கேள்வி ஒன்றை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தது. ஜீப்வண்டி கண்ணிலிருந்து மறைந்தது. பதில் தெரியாத அப்பூதாகரமான கேள்வி, அவள் மனதில் எழுந்தபோது, இதயம் சுக்கு நூறாக வெடித்துச் சிதறியது. **நேற்று இரவு அனைவரும் உறங்கிய பின், என்னைக் கட்டியணைத்து என்னுடன் உடலுறவு கொண்டவன் யார்? செல்வனா? அருணா?** இதுதான் அவளின் கேள்வியாக இருந்தது.

அவர்கள் புறப்படும் போது என்ன பதில் கூறுவது? என்று சிந்தித்துக் கொண்டிருந்த குறிஞ்சிக்கு, அன்றிரவு நள்ளிரவில் நடந்த சம்பவம் ஒரு பதிலைக் கொடுத்துவிட்டதாக நினைத்திருந்தாள்? **அதிகாலை ஒருவர் தாமாக முன்வந்து என்னை ஏற்றுக் கொள்வார்...!** இன்னாரைத் நான் விரும்புகிறேன்? என்று பதில் கூறவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்று எதிர்பார்த்தாள் குறிஞ்சி. ஆனால் அவர்கள் எதுவுமே பேசாது புறப்பட்டபோது, பலத்த ஏமாற்றமாக இருந்தது. செல்வனோ? அருணோ? எதுவும் பேசாது தன்னைப் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்களே? இரவு அப்படி ஒரு சம்பவம் நடக்காது விட்டிருந்தால்...! காலை அம்மன் சந்நிதியில் இரு சீட்டை எழுதிப்போட்டு, அதில் ஒன்றை எடுத்து என் முடிவைச் சொல்லியிருப்பேனே? இச்சம்பவத்தால் அப்படியும் செய்ய முடியாது போய்விட்டதே...! அப்பழுக்கில்லாத அப்பாவிகள் போல் நடந்து கொண்ட இருவரில், அந்த அயோக்கியன் யார்? செல்வனா? அருணா? குறிஞ்சியின் கேள்விக்கு, யார் விடை கூறுவது? அப்பாவி குறிஞ்சியின் கேள்விக்கு ஆண்டவன் தான் பதில் கூறவேண்டும்.

மலைக்கிராமத்தை விட்டு ஜீப்வண்டி நீண்ட தூரத்தைக் கடந்து விட்டபோதும் செல்வனும் அருணும் ஒருவரோடு ஒருவர் கதைக்கவில்லை. மௌனமாகவே இருந்தனர். அவர்களின் மனதிலும் ஒரே கேள்வி தான்!. **குறிஞ்சி ஏன் பதில் கூறவில்லை?** எங்கள் இருவரில் ஒருவரையுமே, குறிஞ்சி விரும்பவில்லையா? அதையாவது கூறியிருக்கலாம் இல்லையா? ஏன் குறிஞ்சி எங்களிடம் எதுவும் பேசவில்லை? இருவரின் கேள்விகளையும் விட குறிஞ்சியின் கேள்வியே மேலோங்கியிருந்தது. குறிஞ்சியின் ஒரே கேள்வி தன்னைக் கட்டியணைத்து உறவு கொண்டவன் யார்? என்பது தான்.

ஜீப்வண்டிக்குள் செல்வனின் மனமும் அருணின் மனமும் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு அருகில் அமைதியாக எவ்வித சலனமுமின்றி ஜீப்வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான், அன்றிரவு குறிஞ்சியுடன் உறவு கொண்ட அயோக்கியனான ஜீப்வண்டியின் சாரதி அன்ரன்.

ஆமாம், அன்றிரவு குறிஞ்சியுடன் உறவு கொண்டவன் செல்வனுமல்ல, அருணுமல்ல, அயோக்கியன், அன்ரன் தான். **இந்த உண்மை அப்பாவி குறிஞ்சிக்கோ? அருணுக்கோ? செல்வனுக்கோ? எப்படித் தெரியப் போகிறது?**

இன்னும் ஆறு மாதங்கள் முடிய, செல்வனும் அருணும் மலைக்கிராமத்துக்கு வரப்போகிறார்கள்? அப்போது குறிஞ்சி மலர்களும் மலர்ந்து அவர்களை வரவேற்கக் காத்திருக்கும்...! **ஆனால் எதுவுமே அறியாத அப்பாவி குறிஞ்சி..... அவர்களை வரவேற்க காத்திருப்பாளா.....?**

எழுத்தாளன் சிந்தனை

2017 தை

3

அதே முகம்

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களை கட்டார் நாட்டில் கழித்து விட்டு இன்றுதான் தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு புகைவண்டியில் வந்து கொண்டிருக்கிறான் எல்லோராலும் செந்தில் என அழைக்கப்படும் செந்தில்நாதன். அவன் மனதில் நிறைந்த மகிழ்ச்சியும், முகத்தில் பெரிய கம்பீரமும் நிறைந்திருந்தது. தான் ஐந்து வருடங்களின் பின் சொந்த ஊருக்கு வருகிறேன் என்ற எண்ணத்தைவிட, தான் ஓர் பெறுமதி மிக்க "முழுமனிதனாக" வருகிறேன் என்ற சிந்தனையே அவன் மனதில் நிறைந்து நிற்கிறது.

சிறுவயதிலேயே தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் வாழ்ந்த செந்தில், ஓரளவு படித்திருந்தபோதும், அவனுக்கு ஒழுங்கான வேலை எதுவும் கிடைக்கவில்லை. அவனது அக்காவும் அவனும் மட்டுமே இருபிள்ளைகள். இருவருக்கிடையில் நான்கு வயது வித்தியாசம், அவனது அக்கா க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாள். அவனோ, க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தான், சித்தியடைந்திருந்தான். ஏதாவது ஒரு சிறு வேலைக்கு முயற்சி செய்தபோதும், இருவரில் ஒருவருக்கும் எந்த வேலையும் கிடைக்கவில்லை. குடும்பத்துக்கு எவ்வித வருமானமும் இல்லை. இந்நிலையில் செய்வதறியாது கஸ்டப்பட்டான் செந்தில்.

கல்யாண வயதை எட்டியுள்ள சகோதரி "மங்கைக்கு" கழுத்தில் போட ஒற்றைப்பட்டு சங்கிலி கிடையாது. தாயாருக்கு காதில் போட சிறுதோடு கிடையாது. சகோதரிக்கும் தாயாருக்கும்

அணிந்து கொள்வதற்கான, ஒழுங்கான உடைகள் இல்லை. இந் நிலையில்தான், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் செந்திலின் குடும்பம் வாழ்ந்தது. நண்பன் ஒருவனின் சிபார்சின் பேரில் ஒரு பலசரக்குக் கடையில் செந்தில் வேலை செய்தாலும், போதுமான அல்லது ஓரளவுக்கேனும் திருப்தியான, சம்பளம் அவனுக்கு கிடைக்கவில்லை. அத்துடன் காலை 7.00 மணிக்கு வேலைக்கு போகவேண்டும். மாலை 7.00மணி வரை வேலை செய்ய வேண்டும்?. இரண்டுபேர் செய்து அடங்கமுடியாத வேலையை, அவன்மட்டுமே தனித்து செய்தான். எவ்வளவு கஸ்டப்பட்டாலும், நன்றி என்ற வார்த்தையே கடை முதலாளியால், அவனுக்கு கிடைப்பதில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. செந்திலுக்கு வேலையில்லை. தொடர்ந்தும் அதே கடையில் வேலை செய்வதா? அல்லது வேலையை விட்டு விடுவதா? வேலையை விட்டுவிட்டு புதிய வேலையை எங்கே தேடுவது? இதுபோன்ற கேள்விகளை மனதிற்குள் எண்ணி அதற்கான விடையை யோசித்துக்கொண்டு, தெருவீதி வழியாக நடந்து கொண்டிருந்தான் செந்தில். அவன் பின்னால் வாகனம் ஒன்று வேகமாக வந்ததையோ... அந்த வாகனம் கோண் அடித்துக் கொண்டு வந்ததையோ, கவனித்து செவிமடுக்கும் மனநிலை அவன் மனதில் இருக்கவில்லை.

வீதியால் வந்தவர்கள் உரக்கக் கத்தியும் அவன் செவிகளில் எதுவும் விழவில்லை. ஒரு கணந்தான். வாகனத்தில் அடிபட்டு சின்னாபின்னமாகி உயிர்விடவேண்டிய செந்திலை, இருகரங்கள் இழுத்துக் காப்பாற்றியபோதும், வேகமாக வந்த வாகனம் அவனை முட்டி மோதித்தள்ளி விட்டு மறைந்து விட்டது.

வீதியின் அருகில் செந்தில் வீழ்ந்து கிடந்தபோது அவனைக் காப்பாற்ற முற்பட்ட அந்த வாலிபன் அவனைத் தன்மடிமீது கிடத்தி தண்ணீர் தெளித்த போது, செந்தில் மெல்லக் கண்களைத் திறந்து தன்னைக் காப்பாற்றிய வாலிபன், முகத்தினை வாஞ்சையுடன் பார்த்தான். அந்த முகம், சாந்தமான ஒரு புன்னகையை வீசியது. மேலும் **"உனக்கும் எனக்கும் என்றும் உறவுண்டு"** என்று சொல்வது போல இருந்தது. சிறிது நேரத்தில் மீண்டும் மயக்கநிலையை அடைந்த செந்திலை, வைத்தியசாலையில் சேர்த்து விட்டுச் சென்றுவிட்டான் அந்த வாலிபன். அந்த வாலிபனால் உயிர்தப்பிப் பிழைத்துக் கொண்ட செந்தில், மீண்டும் தனது கரடுமுரடான வாழ்க்கைப் பாதையில் பயணிக்கத் தொடங்கினான். அவன் நிலையை உணர்ந்து கொண்ட இன்னொரு நண்பன், அவனுக்கு பண உதவி புரிந்து, அவனைக் கட்டார் நாட்டுக்கு அனுப்பி வைத்தான். இவை எல்லாம் ஐந்து வருடங்களின் முன் நடந்த சம்பவங்கள்.

செல்வமும் தரித்திரமும் என்றும் ஓரிடத்தில் நிலை கொண்டிருப்பதில்லை. இது மனிதவாழ்வில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. "தரித்திரம் சொல்லுமாம், நாங்கள் ஓரிடத்தில் தரித்து நிலையாக இருக்கமாட்டோம்." **"தரித்திரோம்" "தரித்திரோம்"** என்று கூறுமாம். அதேபோலவே "செல்வம் சொல்லுமாம், நாங்கள் செல்வோம். நிலையாக இருக்கமாட்டோம்" சென்றுவிடுவோம், **"செல்வோம்" "செல்வோம்"** என்று கூறுமாம். அதில் சில விதிவிலக்குகள் இருந்தாலும் பொதுவான கொள்கை இதுவேயாகும். இதற்கமைய செந்திலின் வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்பட்டு விட்டது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் இருந்த செந்தில் அல்ல, தற்போதைய செந்தில்.

கட்டார் நாட்டில் இரவுபகல் பாராது கஸ்டப்பட்டு உழைத்ததன் காரணமாக, செந்தில் குடும்பம் வறுமையிலிருந்து முற்றாக விடுபட்டு விட்டது. புகைவண்டியில் யாழ்ப்பாணம் தனது சொந்த ஊர் நோக்கி வந்துகொண்டிருந்த செந்தில், தன்னுடன் வைத்திருந்த கைப்பையை அடிக்கடி தொட்டும் பார்த்துக்கொண்டான்.

சகோதரிக்கு நல்ல இடத்தில் ஓர் மாப்பிள்ளை கிடைத்ததும், அதையொட்டி தாயார் மிகவும் சந்தோசப்பட்டு, அந்த செய்தியை அவனுக்கு தெரிவித்து, உடனே ஊருக்கு புறப்பட்டுவரவும் என்ற தகவலைத் தெரிவித்ததைத் தொடர்ந்து, அதற்குரிய ஆயத்தங் களுடன் வந்து கொண்டிருந்தான் செந்தில்.

சீதனப்பணம் ஐந்து லட்சம் ரூபாவையும், ஏற்கனவே தாயாரின் பெயருக்கு அனுப்பி விட்டான். மேலும் மூன்று லட்சம் ரூபா ஏனைய செலவுகளுக்காகக் கொண்டு வந்த பணம், தன்னுடன் எடுத்து வந்த பையில் பத்திரமாக இருந்தது. அத்துடன் கொழும்பு வந்து அவன் நண்பனையும் அவன் மனைவியையும் கூட்டிச்சென்று, நகைக்கடையில் சகோதரிக்காக வாங்கிவந்த நெக்கிளஸ், அட்டியல், காப்பு, என்பனவும், தாயாருக்காக வாங்கிய சங்கிலி, தோடு என்பவையும் உடுபுடவைகளையும் அவன் கொண்டு வந்த பையில் இருந்தது. மீண்டும் கைப்பையை தொட்டுப் பார்த்துக் கொண்டான் செந்தில்.

சகோதரியின் விமரிசையான திருமணக்காட்சிகளை மனதில் கற்பனை பண்ணி அதில் மகிழ்வடைந்த செந்திலுக்கு, புகையிரதம் யாழ்ப்பாணம் வந்தடைந்ததையே, உணர முடியவில்லை. பயணிகள் பரபரப்புடன் தமது உடைமைகளைத் தூக்கிக் கொண்டு இறங்கிய போதுதான், தானும் இறங்கவேண்டியதை உணர்ந்து, ஒரு கையில்

நகைகள் அடங்கிய தோல் பையையும், மறுகையில் ஏனைய சாமான் பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு, பிளாட் பாரத்தில் செந்தில் கால்வைத்த போது.....! ஒரு திருடன் செந்திலின் கையிலிருந்த தோல்ப்பையைப் பறித்துக் கொண்டு வேகமாக ஓடத்தொடங்கினான். இதைச்சற்றும் எதிர்பார்க்காத செந்தில், ஐயோ.... திருடன்..... திருடன்.... என் பணம்.... நகை..... என்று அலறத் தொடங்கினான். அவன் மனக்கோட்டைகள் யாவும் ஒருசில கணப்பொழுதில் மண்கோட்டையாகி இடிந்து தவிடுபொடியாகி விட்டது.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென வடிந்து கொண்டிருந்தது. இச்சமயத்தில் யாருமே எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று நடந்தது. யாரோ ஒரு வாலிபன் வேகமாக ஓடிச்சென்று திருடனால் பறித்துச் செல்லப்பட்ட செந்திலின் தோல்ப்பையை, திருடனிடமிருந்து மீட்டு வந்ததும் அல்லாமல், திருடனையும் ஒருகையால் பிடித்து தரதரவென இழுத்து வந்து கொண்டிருந்தான். செந்திலுக்கு அருகில் வந்து அவனின் தோல்ப்பையை அவனிடம் கொடுத்துவிட்டு, அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு திருடனை, பொலீசில் ஒப்படைப்பதற்காக இழுத்துச் சென்றான். அந்த வாலிபன் செந்திலை ஏறிட்டுப்பார்த்தபோது, நன்றி கலந்த ஓர் புன்சிரிப்பை செந்தில் சிரித்த போதும், அவன்மனதில் ஓர் வியப்பு நிலை காணப்பட்டது.

அந்த வாலிபனின் முகத்தை, எங்கோ? கண்ட மாதிரியான நினைப்புதோன்றி மறைந்தது. அந்தமுகத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்தான் செந்தில். அந்தமுகம்...! அந்தமுகம்...! ஆமாம் இப்போது நினைவுக்கு வருகிறது. **அதே முகம்... அதே முகம்**...தான், கடந்த ஐந்து வருடத்துக்கு முன்னர், தான் வாகனத்தில்

அடியுண்டு விபத்துக்குட்பட்ட நிலையில், தன் உயிரைக் காப்பாற்றிய அந்த வாலிபனின் முகம் தான். **அதே முகம்**.... **அதே முகம்**... தான். என்றும் "உனக்கும் எனக்கும் உறவுண்டு" என்று கண்களால் கூறியமுகம் அதே முகந்தான்.

வீட்டுக்கு வந்து சேரும் வரை அதையே எண்ணிக் கொண்டிருந்தான் செந்தில். அந்த முகத்துக்குரிய வாலிபன் யார்? அவனின் பெயர் யாது? அவன் வீட்டு முகவரி என்ன? அவனுக்கும் எனது குடும்பத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? என்பன போன்ற பல கேள்விகள் அவன் மனதில் தோன்றி மறைந்தது. எதிர்பாராத அதிர்ச்சியினால் அந்த வாலிபனை நான் அறிய முயலவில்லையே என்ற கவலையும் அவனை வாட்டியது. "உனக்கும் எனக்கும் உறவுண்டு" என்று கண்களால் கூறிய அந்த முகத்துக்குரிய வாலிபன் யார்? இதை எண்ணிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தான் செந்தில்.

ஐந்து வருட இடைவெளியின் பின்னர் வீடுவந்து சேர்ந்த செந்திலை, அவன் தாயாரும், சகோதரி மங்கையும் கட்டிப்பிடித்து கண்ணீர்மல்க உறவாடினர். தான் கொண்டுவந்த இனிப்பு பண்டங்களைக் கொடுத்து மகிழ்ச்சி கொண்டாடிய செந்தில், அதன்பின் தாயாருக்கும் தங்கைக்கும், வாங்கிவந்த நகைகளை எடுத்துக் காட்டிப் பெருமை கொண்டாடினான், அவர்களும் மிகுந்த சந்தோசமடைந்தனர்.

அதன்பின் புகையிரத நிலையத்தில் தனது பெட்டியைப் பறிகொடுத்ததையும், அதை யாரோ ஒரு வாலிபன்? மீட்டுத் தந்ததையும் கூறிவிட்டு, அம்மா அந்த வாலிபன் இல்லாது போய் விட்டிருந்தால், என் சகோதரியின் கலியாணம் நின்று போயிருக்கும், என்பதையும், அவனை யாரென்று நான் அறிந்து அறிந்துகொள்ள

முடியவில்லையே! என்பதையும் கூறி மனவருத்தப்பட்டான். இடையில் குறுக்கிட்ட அவன் சகோதரி மங்கை கூறினாள், "அண்ணா அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம்" இத்திருட்டை முறியடித்த வாலிபரின் பெயர் விலாசத்தை அறிய விரும்புகிறோம்" அதை தெரியப்படுத்தவும், அல்லது நேரில் சந்திக்கவும் என்ற, ஒரு அறிவித்தலை பத்திரிகையில் கொடுத்தால் போதும், அல்லதுவிடின் பொலீஸ் நிலையம் சென்று திருடனை உங்களிடம் ஒப்படைத்தவர் யார்? அவரின் முகவரி என்ன? என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டால், எல்லாம் அறிந்து விடலாம் என்று கூறியபோது, செந்தில் மிகவும் சந்தோசமடைந்தான்.

மங்கை, நாளையே நான் இந்த முயற்சியில் இறங்குகிறேன். இந்த வாலிபன் யார்? என்பதை அறிய வேண்டும். அத்துடன் உனது திருமணத்துக்கு கட்டாயமாக அந்த வாலிபனுக்கு அழைப்புக் கொடுக்க வேண்டும். உன் திருமணத்தில் அவன் நிச்சயமாக பங்குகொள்ள வேண்டும்?. அவன் இல்லாது விட்டால் உன்திருமணம் நிச்சயமாக இடையில் நின்றுபோயிருக்கும்?. எனவே அவனைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சி தான் எனது முதல் வேலை, என்று கூறிவிட்டு குளியல் அறைக்கு சென்றுவிட்டான் செந்தில் குமரன்.

குளித்து முடித்துவிட்ட செந்தில் சூடாக ஒரு தேநீர் தருமாறு கேட்டு, மங்கையிடம் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கும் போது, அவன் மாமன் முறையிலுள்ள பீதாம்பரம் வீட்டுக்கு வந்தார். செந்தில்... எப்போது வந்தாய்? .உன் பிரயாணங்கள் எப்படியிருந்தது? என்று கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்த போது, எல்லாம் நன்றாக அமைந்தது. சற்று முன்னர் தான் நான் வீட்டுக்கு வந்தேன் என்று சுருக்கமாகக் கூறினான் செந்தில்.

செந்தில், நீ எதற்கும் யோசிக்க வேண்டாம், மங்கைக்கு அமைந்த இடம் மிகவும் நல்ல இடம். குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் தான். மூத்தசகோதரி திருமணம் முடித்து, பிள்ளைகளுடன் வேறு வீட்டில் வசிக்கிறார். மங்கையின் மாப்பிள்ளையின் பெயர் குமரன், வங்கி ஒன்றில் லிகிதராக கடமையாற்றுகிறார். நல்ல குணம் நடை, வெற்றிலை பாக்கு, பீடி சிகரெட், மதுபானம், போன்றவை பாவிக்கும் எந்தக் கெட்டபழக்கமும் அவனிடம் இல்லை. நான் எல்லாம் அறிந்து திருப்திப்பட்டுக் கொண்டேன். எனவே நீங்கள் யோசிக்காமல் திருமணத்துக்குரிய எல்லா வேலைகளையும் ஆரம்பிக்கலாம்.

செந்தில், நான் இப்போது அங்கிருந்து தான் வருகிறேன். நீ இன்று எப்படியும் வந்து சேர்ந்துவிடுவாய்? என்று நான் கூறியபோது, குமரன் சொன்னார்... தான் நாளைக்கு லீவில் நிற்பதாகவும், நீ வந்திருந்தால் உன்னையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வரும்படியும் அன்புடன் கேட்டுக்கொண்டார், என்று கூறினார் பீதாம்பரம்.

மாமா நாளைக்கு எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. என்று புகையிரத நிலையத்தில் நடந்த திருட்டுச் சம்பவத்தைக் கூறியபோது, மாமன் பீதாம்பரம் சொன்னார்... "செந்தில், அதை நாளை மறுதினம் பார்க்கலாம்...."

நீயும் அம்மாவும் நானும், எப்படியும் நாளை மாப்பிள்ளையைப் பார்க்கப் போகவேண்டும்? என்று கூறியபோது செந்திலால் மறுப்பு சொல்ல முடியவில்லை. தனது சம்மதத்தை மாமன் பீதாம்பரத்திடம், மகிழ்ச்சியுடன் தெரிவித்தான் செந்தில்.

அடுத்தநாள் செந்திலும், தாயாரும், மாமனும், ஓர் காரில் மாப்பிள்ளை குமரன் வீடு சென்றனர். அங்கு குமரனின் தாயும் தந்தையும் அவர்களை வரவேற்று உபசரித்தனர். குமரன் சிறு அலுவல் காரணமாக எங்கோ? சென்றுவிட்டதாகவும், சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகவும் கூறி அவர்களுடன் அன்பாக கதைத்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் புன்சிரிப்பு ஒன்றைத் தவழவிட்டவாறு, அறைக்குள் நுழைந்தான் குமரன். குமரனின் முகத்தை ஏறிட்டு நோக்கிய செந்தில், ஆச்சரியம் தாங்கமுடியாது அதிசயித்தான். அந்தமுகம்.... அதே.... முகம்....அவனால் தன்கண் களையே நம்ப முடியவில்லை? தான் காண்பது கனவா...? அல்லது நிஜம் தானா? அந்த வாலிபன் குமரனை மீண்டும் உற்றுப்பார்த்தான் செந்தில்.

அதே முகந்தான்... அவனை வாகனவிபத்திலிருந்து உயிர் பிழைக்க வைத்தமுகம்..! **அதே முகந்தான்**... தான் பறி கொடுத்த பணம், நகை அடங்கிய தோற்பையை மீட்டுத்தந்த முகம்...! அதே முகந்தான்... இன்று தன் சகோதரி மங்கைக்கு வாழ்வு கொடுக்க தயாராக இருக்கும் முகம். அதே முகந்தான் "**உனக்கும் எனக்கும் என்றும் உறவுண்டு**" என்று கண்களால் கூறிய அதே முகம்.

அதே முகம்... அதே முகம்... தனக்கும் தன் குடும்பத்துக்கும் சொந்தமாகிவிட்ட குமரனின் முகம்தான். அந்த முகத்தை அதிசயமாக மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்த செந்திலைப் பார்த்து மாமன் பீதாம்பரம் கேட்டார், என்ன செந்தில்? குமரனை உனக்கு முன்பே தெரியுமா? செந்திலால் பதில் கூற முடியவில்லை. நாக்கு தழுதழுத்தது.

எனக்கு தெரிந்தவர் மட்டுமல்ல மாமா, என் உயிரைக் காப்பாற்றியவர், ஏற்கனவே நடந்த சம்பவங்கள் அனைத்தையும் முழுமையாக கூறியபோது செந்திலின் தாயாரின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து கொண்டிருந்ததை மாமன் பீதாம்பரம் கவனிக்கத் தவறவில்லை. அதே சமயம் குமரனின் தாய் தந்தையார்களின் முகத்திலும் பெருமிதம் நிறைந்திருந்ததையும் பீதாம்பரம் கவனித்தார்.

முழுமையான மனநிறைவுடனும், கடுமையான சந்தோசத்துடனும், வீட்டுக்கு திரும்பிவந்த செந்திலிடம், அண்ணா நீ சொன்ன இடங்களுக்கு போகவில்லையா? என்று கேட்டாள் சகோதரி மங்கை.

அவளுக்கு அந்த வாலிபன் யார்? என்பதை அறிய வேண்டும்? என்ற எண்ணமே மேலாங்கியிருந்தது. அதற்கு அவசியமில்லையம்மா..! அந்த வாலிபன் வேறு யாருமில்லையம்மா..! உன் கழுத்தில் தாலிகட்டப்போகும் குமரன் என்ற உத்தமன் தானம்மா....! என்று செந்தில் கூறிய போது **மங்கையின் முகம் நாணத்தால் சிவந்து அவளின் சிகப்பு நிறத்தை மேலும் சிவப்பாக மாற்றிக் கொண்டிருந்தது.**

எழுத்தாளன் சிந்தனை
1990 சித்திரை

4

கறுக்காய் கந்தனும், கருங்குளவிக் கூடும்.

கறுக்காய் கந்தன் ஆலயம் - வடவரணி

இளவேலரின் மனம் அமைதியின்றி சிந்தனையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. பாரிய பொதுப்பணி ஒன்றை அதுவும் இறைவன் சம்பந்தப்பட்ட ஆன்மீகப் பணி ஒன்றை ஏற்று கொண்டவர்க்கு, அதனைச் செய்து முடிப்பதிலுள்ள சிரமங்கள்?, போதிய நிதி வசதியை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை?, பெரும் பிரச்சினையாக இருந்தது. ஆலய கட்டிட புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கு அவருடன் சேர்ந்து செயற்பட்ட, அவ்வூர் இளைஞர்கள் பலர் மனப்பூர்வமான ஆதரவினையும் ஒத்துழைப் பினையும் வழங்கிய போதும், நிதிவசதியை ஏற்படுத்துவதென்பது அவர்களுக்கு அப்பாற்பட்ட சக்தியாகவே இருந்தது.

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில், தென்மராட்சியின் வடக்கு எல்லை முடிவுறும் இடமான வடவரணியில், பனந்

தோப்புக்களும், வயல்பரப்புக்களும், சிறுகாடும் சூழ்ந்துள்ள பகுதியில், கறுக்காய் என அழைக்கப்படும் சிறு குறிச்சியில் அமைந்துள்ளது கறுக்காய் கந்தன் ஆலயம். ஆலயத்தை அண்டிய பகுதியில் ஓர் பெரிய "கடுக்காய் மரம்" இருந்ததாகவும், அதனால் அவ்விடம் கடுக்காய் என அழைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் அது **"காறுக்காய்"** என்று மாறியதாகவும் கூறுவார். இம்மரத்தை "காசுமரம்" என்றும் "பணம் காய்க்கும் மரம்" என்றும் அக்காலத்தில் அழைத்தனர். தாம் நினைக்கும் காரியங்கள் தடங்கலின்றி நிறைவேற வேண்டும்? என்பதற்காக சிறுதொகைப்பணத்தை சேலையில் முடிந்து, காறுக்காய கந்தனை நினைத்துக்கொண்டு, இம்மரத்தில் கட்டி தூங்கவிடுவார்கள். இதனால் தமது வேண்டுதல்கள் நிறை வேறுவதாக, அவ்வூர் மக்கள் பலரும் நம்பினர். அந்த மரத்தில் பணம் காய்த்து தூங்குவது போல் இருப்பதினால் "பணம்" காய்க்கும் மரம் என்று அழைத்தனர்.

இன்று கறுக்காய் என்ற பெயரை சொல்ல, பலர் விரும்பாத போதும் பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் பயணச்சீட்டை பெறும் போதும், ஏறும் அல்லது இறங்கும் இடத்தை சொல்லும் போதும், இந்த இடத்திற்கு இன்னொரு புதிய பெயர் சூட்டப்படாது இருப்பதினால், இன்றும் **"கறுக்காய்"** என்றே கூறவேண்டிய நிலை காணப்படுகிறது. இப்பகுதியில் அமைந்துள்ள கந்தனின் ஆலய திருப்பணி வேலைகளை ஒட்டிய சிந்தனையே இளவேலரின் மனதை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

நீங்கள் வங்கிக்குப் போகவில்லையா? என்று கேட்டுவிட்டு அவர் மனைவி தேநீரை கொடுத்த போது, அவர் தேநீரை வாங்கிக் குடித்தாலும், அவர் மனம் கந்தனின் திருப்பணி வேலைகளையே எண்ணிக் கொண்டிருந்தது.

தென்மராட்சி கிழக்குப் பகுதியின் ஊர்எல்லை முடியுமிடமான கறுக்காயிலிருந்து, சடையாலடி தாண்டி, முள்ளிச்சுடலை, முள்ளிக் காடு, சினனப்பாலம், பெரியபாலம், முதலைக்குளம் முடிய ஆயத்துச் சந்திவரை, சனநடமாட்டமற்ற ஓர் சூனியப் பிரதேசமாகும்.

இதனூடாக செல்லும் பிரயாணிகள் வழிப்பறி தொடக்கம், வேறுபல அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி இருப்பதனால், சூனியப்பிரதேசம் தொடங்குமிடமான கறுக்காயிலிருந்து, வடக்கு நோக்கி வடமராட்சிக்கு இரவில் பயணிப்பவர்கள், வல்லிபுர ஆழ்வாரை மனதில் நினைத்துக்கொண்டும், தெற்கு நோக்கி தென்மராட்சிக்கு பயணிப்பவர்கள், கறுக்காய் கந்தனை மனதில் நினைத்துக்கொண்டும், தமது பயணத்தை தொடருவார்கள். அவ்வூர் மக்களின், **"ஊர் எல்லைக் காவல் தெய்வமாக" கறுக்காய் கந்தன் காட்சி அளிக்கிறான்.** அவனின் அருள் பற்றியும், சிறப்புக்கள் பற்றியும், கூறும் பல கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு.

தேநீரை குடித்து முடித்த இளவேலரின் சிந்தனை சில தசாப்தங்கள் பின் நோக்கி செல்கிறது. அக்காலத்தில் நித்திய பூஜைகள், உற்சவகால பூஜைகள், நேர்த்திக்கடன்கள், அன்ன தானங்கள் அனைத்தும் ஒழுங்காக நடைபெற்றது.

இந்த ஆலயத்தில் தைப்பூச காலத்தில் மணவாளக் கோலமும், கந்தசஷ்டி உற்சவமும், சிறப்பாக நடைபெற்றது. "தம்பண்ணை" குழுவினரின் அனுசரனையுடன் பளை மாசாரைச் சேர்ந்த மரச்சிற்பாசிரியர் கூனாக்கானாவின் (கு.கந்தசாமி) கைவண்ணத்தில் உருவான சூரனின் வாகனமொன்று, வீதி ஊர்வலமாக இவ்வாலயத்துக்கு கொண்டு வரப்பட்டதும், சூரன்போர் சிறப்பாக நடந்ததும், சித்திரா பௌர்ணமியில் பெண்கள் முள்ளு

மிருதடியில், கைகளில் சிறுவேல் (செடில்) குத்தி கற்பூரச் சட்டி களுடன் நேர்த்திக்கடனை நிறைவேற்றிய காட்சிகளும், ஆண்களின் அங்கப்பிரதட்சை, ஆட்டக்காவடிகள், சிமிழ் அம்மன் கோவிலிலிருந்து கறுக்காய் கந்தனின் ஆலயம் வரை, பூசாரி ஆழ்வாரின் கரகாட்டம், முத்துக்குமாரால் ஒழுங்கு செய்யப்பட்ட பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் அனைத்தும் இரண்டு மூன்று தசாப்த காலத்தின் முன் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மேலும் கலிகை இளைஞர்களால் கறுக்காய் ஆலயத் திலிருந்து, கலிகை கந்தன் ஆலயம் வரை, ஆட்டக்காவடிகள் எடுத்து ஆடிக்கொண்டு சென்றதையும், இவ்வாலயத்தில் இருந்து தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயம் வரை, ஆட்டக்காவடிகள் பறவைக்காவடிகள், தூக்குக்காவடிகள் எடுத்துச்செல்லும் போது அதன்பின்னால் அண்ணாவிமார் காவடிச்சிந்து பாடிச்சென்ற சம்பவம் நினைவுக்கு வருகிறது.

அக்கூட்டத்துடன் கிட்டினர், (உடுக்கர்) வேலர், கந்தப் பண்னை, மாயவன், வசிட்டர், இராசையாண்ணை, அவர்களின் உடுக்கு ஒலியுடனும், உழவு இயந்திரத்தில் கட்டி இருந்த ஒலிபெருக்கியில் பெங்களூர் ரமணியம்மாவின் "குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்" "என்னப்பனே என்னையனே" பாடல்களின் ஒலிமுழக்கத்துடனும், அக்காலத்தில் பிரசித்தி பெற்ற "பைலா" ஆட்டத்தை இளைஞர்கள் சுற்றி சுற்றி ஆடி வந்த நிகழ்ச்சிகளின் நினைவுகள், எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கிறது.

வீதி ஓரத்தில் சர்க்கரை தண்ணீர்பந்தல் போட்டு, வருவோர் போவோருக்கு தாகசாந்தி அளித்ததையும், வாகனங்களை வலுக்கட்டாயமாக வழிமறித்து அன்புடன் சர்க்கரைத் தண்ணீர்

கொடுத்ததையும், இன்றும் மறந்துவிட முடியாது. மேலும் சித்திரா பௌர்ணமி தினத்தின் இரவில் அரிச்சந்திரா, காத்தான் கூத்துக்கள் நடைபெற்றதும், ஆலய முகப்பில் சிகரம் கட்டி மின்குமிழ் வர்ண ஒளிகளில், சிறுவர் சிறுமியர் ஆடிப்பாடி குதூகலித்து அனைவரும் மகிழ்ந்ததையும் இளவேலர் மட்டுமல்ல அவ்வூர் மக்கள் எவருமே மறந்திருக்க மாட்டார்கள்.

இத்தனை சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்டிருந்த கறுக்காய் கந்தன் ஆலயம், இன்று சிதைவுற்று, சேதமடைந்து, சீரழிந்த ஓர் பாழடைந்த கட்டிடமாக காட்சியளித்துக் கொண்டிரு ப்பதுடன், திருப்பணி புனருத்தாரண வேலைகள் சீராக மேற் கொள்ளப்படாமல் இருப்பதற்கு யார் காரணம்? என்ற கேள்வி அவ்வூர் மக்கள் பலரின் மனதிலும் வேரூன்றி உள்ளது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையா? அல்லது ஆன்மீக பக்தர்களின் அக்கறையின்மையா? படித்த புத்தி சீவிகளின் பாராமுகமா? தனிப்பட்ட சிலரின் குரோத உணர்வுகளா? நிர்வாகிகளின் சீர்கேடா? இந்தக் கேள்விகளுக்கு ஆலயத்தின் நிர்வாகிகள் அங்கத்தவர்கள் உபயகாரர்கள் அனைவரும் தனித்தும், ஒருமித்தும் பொறுப்பாளிகள் ஆகின்றனர். இதற்கு காரணமான **"கர்த்தாக்களை"** கறுக்காய் கந்தன் நிச்சயமாக கவனித்துக் கொள்வாரென்று, அவ்வூர் மக்கள் அனைவரும் நம்புகின்றனர்.

தற்போது மீண்டும் இளையதலைமுறை இளைஞர்கள் பலபேரின் ஒத்துழைப்புடன், ஆலய திருப்பணி இடைநிறுத்தப்பட்ட வேலைகள் தொடர்கிறது. இப்போது ஆலயத்தில் தினமும் ஓர் அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறும் ஒவ்வொரு நாளும், ஆலயத்தின் கிழக்குப்பகுதியின்

தொன்மையான வரலாறுகள் பலவற்றை தன்னகத்தே கொண்ட **"கூழாநின்ற புலத்து"** முருகமூர்த்தி ஆலய சூழலிலிருந்து ஒர் மயிலும், மேற்குப் பகுதியிலிருந்து சூழங்கிராய் சிறுகடலேரி தாண்டி இன்னொரு மயிலும், வந்து ஆலய சூழலில் நடமாடுவதை அவதானிக்க முடிகிறது.



கிழக்குப் பகுதியிலிருந்து வந்து போகும் மயில், வட வரணியின் ஆதிமூல ஆலயமான "கூழாநின்றபுலத்து முருகமூர்த்தி" ஆலயப் பகுதியில், கொல்லைக் குளத்தருகில் அடிக்கடி நடமாடி வரும் மயிலெனவும், மேற்குப் பகுதியிலிருந்து வரும் மயில், தொண்டமணாறு **செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து** வல்லைவெளி தாண்டி, சூழங்கிராய் நீர் ஏரி ஊடாக வருவதையும், தாம் தினம் தினம் நேரில் காண்பதாக அவ்வூர் மக்கள் பலருமே கூறுகிறார்கள். இந்த மயில்கள் தினமும் வந்துபோவதால், திருப்பணிவேலைகளை மேற்கொள்ளும் இளைஞர்கள் உற்சாகத்துடனும், சந்தோசத்துடனும் தமது வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். மயில்கள் இரண்டும் தமது தலையை

ஒருபுறம் சாய்த்து அவர்களை அடிக்கடி பார்க்கும்போது, தமது வேலைகளை மயில்கள் மேற்பார்வை செய்வது போன்ற ஓர் உணர்வு அவர்கள் மத்தியில் தோன்றும். சில இளைஞர்கள் கடலை, பயறு, உழுந்து போன்ற சிறுதானியங்களை அந்த மயில்களுக்கு கொடுத்து, அவை கொறித்துக்கொறித்து உண்ணுவதைக் கண்டு மகிழ்வார்கள்.

அன்று காலை 9.00 மணியளவில் கறுக்காய் கந்தனை மனதில் எண்ணிக்கொண்டு கொடிகாமம் மக்கள் வங்கிக்கு சென்ற இளவேலர் கோவில் கணக்கின் மீதியை உறுதிப்படுத்தியபோது, வெளி நாட்டிலிருந்து ஆலயத் திருப்பணிக்காக அவ்வூர் இளைஞர்களால் போடப்பட்ட ஐந்துலட்சம் ரூபாவும், மாகாணசபை உறுப்பினரால் போடப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாவும் கணக்கில் சேர்ந்துள்ளதை அறிந்துகொண்டார். ஏற்கனவே ஊர் ஊராகச் சென்று திருப்பணி வேலைகளுக்கு சேர்த்த இரண்டரை இலட்சமும், மொத்தமாக ஒன்பதரை இலட்சம் சேர்ந்திருந்தது. அத்துடன் சேமிப்பிலிருந்த அரை இலட்சம் ரூபாவையும் சேர்த்து மொத்தமாக பத்து இலட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டு, தனது சிறிய மோட்டார் சைக்கிளில் கறுக்காய் வந்து சேர்ந்தார் இளவேலர். அவரின் மனதில் ஒரு நிறைவும் புதிய உற்சாகமும் காணப்பட்டது.

இப்பணத்தின் மூலம் திருப்பணியின் பெரும்பகுதி வேலைகள் முடிந்து விடும். எஞ்சிய வேலைகளை ஏதோ ஒரு விதத்தில் முயற்சி செய்து முடித்து விடலாம், என்னும் நம்பிக்கை இளவேலர் மனதில் நிறைந்திருந்தது. அவர் வங்கியில் பத்துஇலட்சம் ரூபா பணத்தை எடுத்ததையும், அவர் மோட்டார் சைக்கிளில் வீடு வந்து சேர்ந்ததையும் "ஒருசோடிக் கண்கள்" உற்று அவதானித்ததை இளவேலர் அறியவில்லை.

அவருக்கு தேநீர் கொண்டுவந்து கொடுத்த அவரின் மனைவி அவரைப்பார்த்து, இன்று இரவு எப்படியும் எமது வீட்டுக்கு அருகில், வேலிக்கரையின் பனையில் உள்ள, கருங்குளவிக்கூட்டை சுட்டுவிடவேண்டும். கருங்குளவிகள் கலைந்தால் என்ன நடக்கும்? என்பது உங்களுக்குத் தெரியுந்தானே? என்று கூறினாள். வேலிக்கரையிலுள்ள கட்டைப்பனை மரத்திலுள்ள பல காவோலை களை கூட்டி, கருங்குளவிகள் மண்ணினால் ஒரு பெரிய கூட்டைக் கட்டியிருந்தது. காலம் சென்ற காவோலை மட்டைகள் ஒடிந்து, எப்போதும் வீழ்ந்துவிடலாம்...! என்னும் நிலையில் இருந்தது. அப்படி வீழ்ந்தால்..! நிலைமை பாரதூரமாக அமைந்து விடும் என்பதும், இளவேலருக்கு தெரியும். சில தினங்களுக்கு முன் வந்த நாளாந்த தினசரிப் பத்திரிகை ஒன்றில் கருங்குளவிக்கூடு கலைந்து பலரைக் கொட்டியதையும், அதில் இருவர் மரணமடைந்ததையும், இருவருக்கு கண்தெரியாமல் போனதையும், செய்தியாக வெளியிட்டிருந்ததை அவர் பார்த்திருந்தார்.

சும்மா கொஞ்சம் பொறு, அவசரப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது. நீண்ட கொக்கைத்தடியொன்றில் பல காவோலைகளை ஒன்றாகச் சேர்த்துக்கட்டி, நெருப்புக்கொழுத்தி சுடவேண்டும். இன்றைக்கு வேண்டாம். நாளைக்கு சுடலாம், என்று கூறிவிட்டு தேநீரை வாங்கிக் குடித்தார் இளவேலர்.

ஏதோ ஒரு சம்பவம் நடக்கப்போவதை இளவேலரின் உள் மனம் உணர்த்திக்கொண்டிருந்தது. இனம் புரியாத உணர்வுகளுடன் இரவு 12.00 மணிவரை உறக்கமின்றி புரண்டுகொண்டிருந்தார் இளவேலர். வாகனம் ஒன்று வந்துநின்ற சத்தத்துடன், கேற்றில் சிறு சத்தமும் கேட்டதைத் தொடர்ந்து, லைற்றை போட்டுவிட்டு வீட்டின் முன் கதவைத் திறந்தார் இளவேலர்.

கதவை உதைத்து தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த மூவர், கையில் துப்பாக்கியுடன் காணப்பட்டனர். ஒருவனின் துப்பாக்கி இளவேலரின் நெஞ்சைக் குறிபார்த்துக் கொண்டிருந்தது. மற்ற இருவரும் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்து, வங்கியிலிருந்து எடுத்துவந்த பத்து இலட்சம் ரூபாவையும் தந்துவிடுமாறும், அல்லது "இருவரையும் சுட்டுவிடுவோம்" என்றும் மனைவியை மிரட்டிக கொண்டிருந்தனர்.

இளவேலர் என்ன செய்வதென்று தெரியாமல் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். அவரின் கண்களிலிருந்து நீர் பொலுபொலுவென வீழ்ந்து கொண்டிருந்தது. ஐயா இது எனது பணமல்ல, கந்தனின் திருப்பணிக்குரிய பணம். அதைக் கேட்காதீர்கள்?, எங்களைவிட்டுவிடுங்கள்? என்று அவர்களின் காலில் வீழ்ந்து குளறி அழுதார். டேய்... என்ன? கந்தனின் பணமா? கந்தனை நாங்கள் பார்த்துக்கொள்வோம், நீ எடடா, பணத்தை...! என்று திருடர்கள் மிரட்டிய போது வேறு வழியின்றி பத்து இலட்சம் ரூபா பணத்தையும் பையுடன் அவர்கள் காலடியில் வைத்தார் இளவேலர், அவரையும் அவர் மனைவியையும் அறைக்குள் தள்ளிய திருடர்கள் பணப்பையையும் எடுத்துக்கொண்டு, நாங்கள் இங்கிருந்து சென்று அரைமணித்தியாலத்தின் பின் தான், நீங்கள் மூச்சுவிட வேண்டும். இடையில் யாராவது கத்திக்குளறினால் இப்போதே சுட்டுக்கொன்றுவிடுவோம். எனக்கூறி எச்சரித்துவிட்டு பணப்பையுடன் வீட்டுமுற்றத்துக்கு வந்தனர்.

இளவேலரின் உதடுகளிலிலிருந்து "பத்துஇலட்சம்.... பத்துஇலட்சம்... கறுக்காய் கந்தனே.... கறுக்காய் கந்தனே...." என்ற வார்த்தைகள் வெளிவந்து கொண்டிருந்தது. அப்போது எங்கிருந்தோ? **மயிலின் "அகவல்" சத்தம் ஒன்று அவர் காதில்**

தெளிவாக ஒலித்தது. அதைத் தொடர்ந்து "தொப்" என்ற சத்த மொன்றும் அவர் காதில் கேட்டது. அச்சத்தத்தை தொடர்ந்து "ஐயோ.... அம்மா... ஐயோ... அம்மா..."என்ற அலறல் சத்தங்களும் கேட்டுக்கொண்டிருந்தது. "எங்களைக் காப்பாற்று... கறுக்காய் கந்தனே....!" என்ற சத்தங்களும் காற்றோடு கலந்து இளவேலர் காதில் வீழ்ந்தது. அங்கு என்ன நடந்தது? என்ன நடக்கிறது? என்பதை அறிந்து கொள்ளமுடியாது அவரும் மனைவியும் பயத்தில் உறைந்து போயிருந்தனர்.

சிறிது நேரத்தில், இளவேலரின் வீட்டைச் சுற்றி பலபேர் சூழ்ந்து விட்டனர். அயலவரின் பழக்கப்பட்ட குரல்கள் கேட்கப்பட்டதைத் தொடர்ந்து, பயத்தில் உறைந்திருந்த இளவேலரும் அவர் மனைவியும், வீட்டுமுற்றத்துக்கு வந்த போது.... அவர்கள் கண்ட காட்சி....! அவர்களால் நம்பமுடியவில்லை?.

வீட்டுமுற்றத்தில் இருவர் மயங்கிய நிலையிலும், ஒருவர் கதறித் துடித்துக்கொண்டும், இருப்பதைக் கண்டனர். கருங்குளவிக் கூட்டிலிருந்து கலைந்த கருங்குளவிகள், அவர்களின் கண், காது, மூக்கு போன்ற பல்வேறு இடங்களில் குத்தி தமது கொடுக்குகளை கழற்றியதால் விஷம் தலைக்கேறி இருவர் மயக்க நிலையிலும், மற்றவர் அலறிக் கொண்டு முனகுவதும், காணக்கூடியதாக இருந்தது. வீட்டுக்கு வெளியே ஓர் ஓட்டோவும், ஒரு மோட்டார் சைக்கிளும் நின்று கொண்டிருந்தது. அதன் அருகிலும் இருவர் மயக்க நிலையில் காணப்பட்டனர். அவர்கள் அருகில் பத்துஇலட்சம் ரூபா பெறுமதியான பணப்பை காணப்பட்டது. பணப்பையை இளவேலரின் மனைவி உடனடியாக எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் வைத்தபோது, அவரின் கண்களும் பனித்துவிட்டது.

இரவோடு இரவாக பொலீசார் அவ்விடத்துக்கு வந்து ஐவரையும் கைது செய்ததுடன், மோட்டார் சைக்கிளையும், ஓட்டோவையும் தம்முடன் எடுத்துச் சென்றனர். இரவு நடந்த சம்பவத்தை எவரும் நம்ப முடியாமல் "அதிசயமாக" எண்ணிக் கொண்டனர். இரவு அமளிதுமளியின் பின் அதிகாலை நன்றாக விடிந்தது. கருங்குளவிக்கூடு காவோலை மட்டைகளுடன் ஒடிந்து வீழ்ந்திருந்தது. கருங்குளவிகள் கலைந்து சென்ற பின் கூடு மட்டும் வெறுமனையே காணப்பட்டது.

அடுத்த நாள் திருப்பணிவேலைகள் ஆரம்பமாகியது. முன்தினம் இரவு இழந்துவிட்ட பத்துலட்சம் ரூபா மீண்டும் கிடைத்ததும் மேலும் பத்துலட்சம் ரூபா திருப்பணிநிதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து கிடைத்த செய்தியும் இளைஞர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. **சிறிது நேரத்தின் பின் வண்ணமயில்கள் இரண்டும் வந்து சேர்ந்துவிட்டன.** ஆலயத்திருப்பணி, புனருத்தாரண வேலைகள், தங்குதடையின்றி இளைஞர்களின் ஆதரவுடன் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. **இளவேலரின் மனதிலும் இளைஞர்களின் மனதிலும் "பெருநிறைவு" காணப்படுகின்றது.**

எழுத்தாளன் சிந்தனை

2019 தை

5

அந்த ஒரு நாள்..!

கடமையை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும் கனவானைப் போல தனது கடமையை முடித்துவிட்ட பூரிப்புடன் கதிரவன் கீழ்த்திசை வானை அடைந்து கொண்டிருந்தான்.

தன் போர்வைக்குள் உலகை மூடி மறைத்துத் தனது திருவிளை யாடல்களைப் புரிய இருள் தயாராகிக்கொண்டிருந்தது. இச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்திராவும் இருளோடு இருளாக எங்கோ? புறப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளின் இதயத்திலிருந்து ஏகப்பட்ட பெருமூச்சுக்கள் ஒரே சமயத்தில் வெளிப் பட்டுக்கொண்டிருந்தன. அவள் கண்களில் எதிர்காலத்தின் ஏமாற்றம் மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டது.

இதே கோலத்தில் அவளை யாராவது கண்டால் பேயோ, பிசாசோ என பயந்து ஓடிவிடுவார்கள். இதை முன்கூட்டியே அறிந்திருந்த இந்திரா, இதே நேரத்தைத் தேர்ந்தெடுத்ததையிட்டு தன்னுள் சந்தோசப்பட்டாள். யாரைக்கண்டு அவள் பயந்து ஓடிக் கொண்டிருந்தாளோ தெரியவில்லை? அவளின் ஓட்டம் இடைவிடாது தொடர்ந்துகொண்டிருந்தது. இதுதான் அவளின் கடைசி ஓட்டம்! இதைத் தடைசெய்ய யாராலும் முடியாது? அப்படித் தடைசெய்து நிறுத்தக்கூடியவர்களே அவளை ஓடும்படி விரட்டும் போது, வேறு யார்? அவளைத் தடை செய்ய முடியும்?

யாருக்காக அவள் வாழ்ந்தாளோ, அவனே அவளை ஓடும்படி விரட்டிவிட்டபோது, அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்? தனது நிலை பற்றி எடுத்துச் சொல்வதற்கு, குமார் ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருந்தால்...! அவன் ஒரு வேளை விளங்கிக்கொள்ளலாம். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தைக் குமார் கொடுக்கவில்லையே?, அவளின் முகத்தைக் கூட அவன் திரும்பிப் பார்க்கவில்லையே?, ஓரிரு வார்த்தைகளைப் பேசவேணும், சந்தர்ப்பம் கொடுத்திருந்தால்....! இந்திராவின் நிலை மாறியிருக்கலாம். அந்நிய நாட்டு சண்டை தீவிரம் அடைந்ததாலும், இடம் மாறி மாறி சண்டைகள் நடைபெற்றதாலும், இவள் தன் நிலை பற்றி போட்ட கடிதம் எதுவும் அவனுக்கு கிடைக்கவில்லை. "நான் ஒரு குழந்தைக்கு தாயாகி விட்டேன்" என்று அவள் போட்ட கடிதம் அவனுக்கு கிடைத்திருந்தால்! இந்திரா இந்த முடிவை எடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது போயிருக்கும்,

தன் மூன்று வயது மகளை முற்கூட்டியே தனது தாய் தந்தையரிடம் ஒப்படைத்துவிட்டு, இந்த விபரீதமான முடிவை எடுத்துக்கொண்ட இந்திரா தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தாள்.

வர வர அவளின் ஓட்டம் வேகமாகிக் கொண்டே வந்தது. கையில் சேலையின் தலைப்பை பிடித்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு நேரந்தான் இந்த ஓட்டம்? இன்னும் சிறிது நேரத்தில் அவளின் ஓட்டம் நின்றுவிடும்? ஆனால் அதற்கிடையில்.. யாரும் அவளை தடை செய்தால்...! முடியவே முடியாது. அந்த நேரத்தில் அங்கு யார் தான் வரப்போகிறார்கள்? சிறிது நேரத்தில் இந்திரா நினைப்பது நடந்துவிடும். அப்புறம் இந்திரா என்று அவளை யாருமே அழைக்கமுடியாது. அவளை அழைக்க வேண்டியவன் குமார் மட்டும் தான். ஆனால் அவன் தான் அவளை அடித்துத் துரத்திவிட்டானே?

அதன்பின் அவளை அவன் எப்படி அழைக்க முடியும்? அவன் ஏன் அவளை அழைக்கப்போகிறான்? அவ்வளவு மோசமான செய்கையை அல்லவா அவள் செய்துவிட்டாள்?.

குமாரின் மனத்திரையில் பல காட்சிகள் மின்னி மறைந்து கொண்டிருந்தன. சற்று நேரத்துக்கு முன் அவன் முன்னிலையில் நடந்த சம்பவம், அவன் மனதைவிட்டு அகல மறுத்தது. அவன் உதடுகள் மட்டும் வேசி,தாசி என எதை எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அவன் கண்கள் நெருப்பைக்கக்கிக் கொண்டிருந்தன. இந்திரா இந்திரா... என அவன் பற்கள் நறுநறுத்தன.

இந்திரா நீ இப்படிப்பட்டவள்! என்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்? இப்படிச் செய்வாள்..! என்று அவன் கடைசி வரையும் எதிர்பார்க்கவே இல்லை. "எத்தனை வருடங்களானாலும் உனக்காகக் காத்திருப்பேன்" என்று கூறிய அதே இந்திரா இன்று ஒரு குழந்தைக்கு தாய். இதை நினைக்கும் போது அவன் நெஞ்சம் சுக்கு நூறாக வெடித்துச்சிதறியது. எத்தனை நாட்கள் கடற் கரையிலும், பூந்தோட்டங்களிலும் இன்பமாகப் பொழுதைப் போக்கியிருப்பான் குமார். அப்போதெல்லாம் வாழ்ந்தால் உங்களுடன் தான் வாழ்வேன், இல்லையேல் மண்ணோடு மண்ணாகச் செத்து மடிவேன், என்று கூறிய அதே இந்திரா, இன்று இருக்கும் நிலை? மூன்று வயதுப் பெண் குழந்தைக்கு தாய்.

இராணுவ முகாமிலிருந்து வரும்போது, அவன் அவளுக்காக வாங்கிக்கொண்டு வந்த பண்டங்கள் யாவும் அவனைப் பார்த்து, ஏளனமாகச் சிரித்துக்கொண்டிருந்தன. இந்திராவின் திருமணத்துக் காகக் கொண்டுவந்த பொருட்கள் யாவும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. குமார் எப்போதோ இந்திராவைத் திருமணம் செய்திருப்பான்! ஆனால்... மூன்று வருடங்களுக்கு திருமணம் செய்யக்கூடாது என

இராணுவச்சட்டம் தடைசெய்து விட்டது. மூன்றுவருடங்களும் மூன்று நாட்களாகப் பறந்தோடிய பின் மறுபடியும் திருமணம் செய்ய வந்தான் குமார்? திருமண ஏற்பாடுகள் யாவும் மிக விமர்சையாக நடைபெற்றன. திருமணத்துக்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தது.. அப்புறம் அவனை யாரும் தடைசெய்ய முடியாது. ஆனால் அதற்கிடையில்...!

"அந்நியநாட்டு துருப்புக்கள்
உள்நாட்டில் நுழைந்து விட்டன,
உடனே புறப்பட்டு வரவும்"
உயர் இராணுவ அதிகாரி.

எனும் வாசகங்களை தாங்கி வந்த தந்தி, அத்திருமணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இரண்டாம் முறையும் தோல்விதான். இப்போது, மூன்றாம் முறையாக ஆவலுடன் ஓடி வந்தான் குமார். ஆனால்... அவன் கண்ட காட்சி இப்போதும் அவன் மனதைவிட்டு அகலவில்லை. இந்த முறையும் அவன் திருமணம் நடைபெறமாட்டாது. ஏன் இனி அவனுக்குத் திருமணமே நடக்காது?

கன்னிப் பெண்ணை மணந்து கனிவான வாழ்க்கையை நடத்தவேண்டிய குமார், இன்று கன்னித்தன்மையை இழந்த காரிகையை அல்லவா திருமணம் செய்ய வேண்டியுள்ளது. இதை அவன் மனம் ஏற்றுக்கொள்ளுமா? அவன் மனம் தான் ஏற்றுக் கொண்டாலும், இப்பாழும் உலகந்தான் ஏற்றுக்கொள்ளுமா? இப்பாழும் உலகம் ஏற்றுக்கொள்ளாதபடியால் தானே, இந்திராவும் அப்பாழ் மண்டபத்தை தேர்ந்தெடுத்து தன் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டாள். இந்திராவின் தாய் தந்தையர், இந்திரா பெற்றெடுத்த குழந்தை, குமாரின் தாய் தந்தையர், உறவினர்கள், அயலவர்கள் அனைவரும் திரண்டு அந்தப் பாழடைந்த மண்டபத்தின் முன்னால் குவிந்திருந்தனர். அந்த மண்டபத்தை உற்று நோக்கியபோது, ஏதோ

ஒரு மின்னல் பளிச்சிட்டது போல, ஒரு சம்பவம் குமாரின் மனக் கண்ணில் தோன்றி மறைந்தது.

எவருமே கிட்ட நெருங்கப் பயப்படும் அப்பாழடைந்த மண்டபத்தின் முன் நினைத்துப் பார்க்க முடியாத அளவு சனக்கூட்டம் நிறைந்திருந்தது. அதன் காரணம், இந்திரா அங்கே தூக்குப்போட்டு தற்கொலை செய்துவிட்டாள்! என்ற செய்தி தான், இச்செய்தியை அறிந்த குமாரின் நெஞ்சம் பதைபதைத்தது. அவன் கால்கள் அவனை அறியாமல் அப்பாழடைந்த மண்டபத்தை உள்நோக்கி நடைபோட்டன. அவன் கண்கள் அம்மண்டபத்தை ஊடுருவி நோக்கியது, அந்தநாள் அவனுக்கு நன்றாக ஞாபகத்துக்கு வந்தது. அந்த சம்பவம் மின்னல் போல் மீண்டும் மீண்டும் அவன் மனக் கண்ணில் பளிச்சிட்டது.

அன்று வெள்ளிக்கிழமை... இந்திராவும், குமாரும் முருகன் கோயிலுக்குச் சென்று தங்கள் திருமணம் இனிது தடங்கலின்றி நடைபெறவேண்டுமென முருகனைத் தரிசித்துவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

வானம் இருண்டது, மேகம் கறுத்தது. மழை வரும்போலத் தோன்றியது. மின்னல் படீர் படீர் எனத்தோன்றிப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. குமார் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது என்று, பீதியுடன் கூறிக்கொண்டாள் இந்திரா. அவளின் பயத்தை மேலும் அதிகரிக்கும் வண்ணம் பயங்கர இடிமுழக்கத்துடன் 'சோ' என்ற இரைச்சலுடன் மழை பொழிய ஆரம்பித்தது. அப்படியே இந்திராவையும் அழைத்துக்கொண்டு அருகில் இருந்த பாழடைந்த மண்டபத்துக்குள் நுழைந்தான் குமார். அச்சத்தின் மிகுதியால் குமாரை இறுக அணைத்துக்கொண்டாள் இந்திரா. அச்செயல்

குமாரின் மனதில் சலனத்தை ஏற்படுத்தி விட்டது. குமாரின் மனத்தில் காதல் போதை தலைக்கேறி விட்டது. ஒருதரம் இந்திராவை உற்று நோக்கினான். அவள் நாணத்தினால் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்.

கவிழ்ந்துவிட்ட அவளின் முகத்தை கையிலேந்திய குமார், இந்திரா... என அழைத்தான். அவள் பதில் பேசவில்லை. இந்திரா...ம்... இந்திரா... ம் இன்று நல்ல நாள் இல்லையா? ஏன் வெள்ளிக்கிழமை என்ற படியாலா? ம்....அப்போ...? அப்போ... அவன் பேச்சுத் தடைப்பட்டது.

அவன் கரங்களால் இந்திராவை இறுக அணைத்து, முத்தமிட்டான். அவன் பிடிக்குள் அவள் சிக்கிக்கொண்டாள்.

சீ... எடுங்கள் கையை, இன்னமும் திருமணம் ஆகவில்லை... அதற்குள்? அதற்குள் என்ன இந்திரா? நமது திருமணம் தான் நிச்சயிக்கப்பட்டு விட்டதே இன்னும் மூன்று நாட்கள் தானே திருமணத்துக்கு உள்ளது, அவன் முரட்டுக்கரங்கள் அவளின் இடையைச்சுற்றி வளைத்துக் கொண்டன.

குமார்... இதையெல்லாம்... அப்புறம் வைத்துக் கொள்ளுங்கள்?. கிணற்று வெள்ளத்தை ஆறு வந்தா கொண்டுபோகப் போகிறது?

இந்திராவின் சொற்கள் யாவும் புறக்குடத்தில் வார்த்த நீராயின, கடைசியில் குமாரின் எண்ணம் நிறைவேறியது. அதன்பின் இந்திராவையும் அழைத்துக்கொண்டு, வீடு வந்து சேர்ந்தான் குமார்.

மூன்று நாள் முடிந்தால் திருமணம்? அவனுக்கு எந்தவிதமான சிக்கலோ, வெட்கமோ, பயமோ இல்லாமல், இந்திராவை தன் அன்புப்பிடிக்குள் அணைத்துக்கொண்டு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்து விடுவான் குமார்?. ஆனால் அதற்குள்...

"உடனே போருக்கு புறப்பட்டு வரவும்" என்னும் வாசகங் களைக் கொண்ட உயர் அதிகாரியின் தந்தி அத் திருமணத்துக்கு, முற்றுப்புள்ளியை வைத்து விட்டது. குமார் யுத்தமுனையில் எவ்விடத்தில் நிற்கிறான்? சண்டையில் இறந்து விட்டானா? அல்லது உயிருடன் உள்ளானா? எந்த விபரமும் அறியமுடியவில்லை. இந்திராவுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது. அப்போது போருக்குப் புறப்பட்ட குமார் மூன்று வருடங்களின் பின் இப்போது தான் ஊருக்கு வந்திருக்கிறான்.

இந்நிகழ்ச்சிகள் யாவும் அவன் மனக்கண் முன் மின்னி மின்னி மறைந்தன. இப்போது குமாருக்கு யாவும் விளங்கிவிட்டன. பழைய ஞாபகங்கள் படிப்படியாக நினைவுக்கு வரத்தொடங்கின. அந்தநாள்... ஞாபகம்! மனதில் தோன்றி மறைந்தது.

அந்தநாள்... அன்று வெள்ளிக்கிழமை நடந்த சம்பவங்களும் நினைவுக்கு வரத்தொடங்கிவிட்டன. அடுத்த கணம்... மிக வேகத்துடன் பாழடைந்த மண்டபத் துக்குள் நுழைந்தான் குமார். ஆனால் அவன் கண்ட காட்சி...? இந்திரா கயிற்றில் தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் உயிர் உடலை விட்டுப் பிரிந்திருந்தது. இடுப்புச்சேலையை இறுக்கமாக வரிந்து கட்டியிருந்தாள் இந்திரா, அவள் இடுப்பில் ஒரு சிறு துண்டு காகிதம் செருகப்பட்டிருந்தது. அவசரமாக அந்தக் காகிதத்தை உருவி எடுத்த குமார் அதைப்

பரபரப்புடன் வாசிக்கத் தொடங்கினான். அதில் கீழ் கண்ட வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது.

அன்பின் குமார்!

அன்று நீங்கள் என்னை இதே இடத்தில் உங்கள் முரட்டுப்பிடிக்குள் சிக்க வைத்தீர்கள். ஆனால் இன்று நான் உங்கள் பிடியைத் உதறி தள்ளி விட்டு மேலேபோய்க் கொண்டிருக்கிறேன். எனக்கு நேர்ந்த கதியைப்போல் உங்கள் குழந்தைகளுக்கு நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எனது மணமேடையையும் பிண மேடையையும் ஒரே இடத்தில் அமைத்துத் தந்த உங்களுக்கு என் நன்றிகள்.

இப்படிக்கு,
உங்கள் மனைவி என்று,
சொல்ல முடியாத துர்ப்பாக்கியசாலி,
இந்திரா.

கடிதத்தை படித்த குமாரின் கண்கள் கண்ணீரால் நனைந்தன. தன் குழந்தையைத் தேடிய குமாரின் கண்கள், உறவினர் அரவணைப்பில் இருந்த குழந்தையை தன் கரங்களினால் பிரித்தெடுத்து, வாரி அணைத்துக் கொண்டபோதும், அவன் உதடுகள் இந்திரா... இந்திரா... என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது. **எதுவுமே தெரியாத அப்பெண் குழந்தையும் அம்மா... அம்மா... என்று அழுதுகொண்டிருந்தது**

கற்பகம் சஞ்சிகை
1992 மார்கழி

6
குருநாதன் கொள்கை

1965ம் ஆண்டு காலப்பகுதி, அக்காலப்பகுதிக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் சாதிவெறி தலைவிரித்து தாண்டவமாடியது. தொழிலின் அடிப்படையில் வாழ்ந்து வந்த மக்களை அத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தனியான பெயரில் அழைத்து வந்த "யாழ்ப்பாண தமிழ் மக்கள்" அச்சமூகங்களை ஒரு சாதியினராக உருவாக்கியிருந்தனர்.

சமூகங்களை மிகக்குறைந்த, குறைந்த, நடுத்தர, உயர்தர வகுப்பினராகப் பிரித்து வைத்திருந்தனர். மிகக்குறைந்த, குறைந்த, நடுத்தர வர்க்கத்தினர், தமக்குக் கீழ் பணிபுரிய வேண்டும்! என்ற தர்மீகக் கொள்கைகளை, உயர்ந்த வர்க்கம் என்று கருதப்பட்டவர்கள் நடைமுறைப்படுத்தினர். அவர்கள் பொருளாதார ரீதியாகவோ, கல்வி அறிவு பெற்றவர்களாகவோ வளர்ந்து வருவதை இவர்கள் சிறிதும் விருப்பவில்லை. தங்களைப் பெரும்பான்மை இனம் என்றும், மற்றவர்களை சிறுபான்மை இனத்தவர் என்றும் அழைத்தனர்.

அவர்கள் தம்முடன் சரிசமமாக உட்கார்ந்து தேநீர் அருந்துவதோ, உணவு உண்பதோ, தடைசெய்யப்பட்டிருந்தது. ஆலயங்களின் உட்புறம் சென்று "**ஆண்டவனை வழிபாடு செய்வது கூட**" தடைசெய்யப்பட்டிருந்தது. நகரப்புறங்களில் இந்நிலை குறைவாகக்காணப்பட்டாலும், கிராமங்களில் மிகவலுவாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. குறைந்த சமூகத்தில் உள்ளவர்கள் கூடிய சமூகத்தில் உள்ளவர்களைத் திருமணம் செய்ய முடியாத நிலையில், புனிதமான காதல் உணர்வுகளும் முளையிலேயே

கிள்ளி எறியப்பட்டது. தெய்வீக உணர்வுகளும், காதல் உணர்வுகளும் சாதியத்துக்கு அடுத்தபடியில் தான் வைக்கப்பட்டிருந்தது.

இந்த அநியாயங்களைப் பொறுக்கமுடியாத நகரப்புற, கிராமமப்புற கல்வியறிவு கொண்ட இளைஞர்கள், கொதித்து எழுந்து சமூகவிடுதலைக்காகப் போராடினார்கள். அவர்களுடன், சமூக அக்கறை கொண்ட பலர் இணைந்து கொண்டனர். ஆலயங்களில் தேநீர் உணவுக்கடைகளில் அத்துமீறிய பிரவேசம், உள்நுழைதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றது. இதன்போது துப்பாக்கி, கத்தி, பொல்லு, வாள் போன்ற ஆயுதங்கள் பாவிக்கப்பட்டு பல்வேறு கலவரங்கள் அடிக்கடி இடம்பெற்றதையும், இதில் பல உயிர்கள் பலியாகியதையும், யாழ்ப்பாண மக்கள் இன்னமும் மறந்து விடமுடியாத நிலையில் உள்ளனர். நல்லூர் கந்தனின் தேர் எரிக்கப்பட்டது, பிரபல தேநீர் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டது, வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டது, கண்ட கண்ட இடங்களி லெல்லாம் இரு சமூகத்தவரும் கைகலப்பில் ஈடுபட்டது யாவும், பலரும் அறிந்த விடயங்கள். யாழ்மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இந்நிலை பரவலாகக் காணப்பட்டபோதும், வடமராட்சியில் நெல்லியடிப்பகுதியிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற பகுதியிலும், கூடுதலாக காணப்பட்டது.

அக்காலப்பகுதியில் முற்போக்கு எண்ணங்களும், சமூக சிந்தனைகளும் கொண்டோர் குறைவாகவே காணப்பட்டனர். அதுவும் தென்மராட்சியில் அரிதாகவே காணப்பட்டனர் அவர்களில், தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் வாழ்ந்த எல்லோருக்கும் நன்கு தெரிந்த **"ஜயாக்குட்டி"அண்ணன்** என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சிறுபான்மை இனத்தைச் சேராத, இ.போ.ச.சாரதியும், பாட்டாளி வர்க்கத்தின் பங்காளியும், தொழிற்

சங்கவாதியுமான "**வேலு**" என்ற சமூகத்தொண்டன் சிறுபான்மை இனத்தவருக்கு தனது ஆதரவினை வழங்கியிருந்தார். அவருக்கு மறைமுகமான அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் அவர் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை. அவரின் கூடுதலான நட்பும், அனுதாபமும் சிறுபான்மை இனத்தவரிடமேதான் இருந்தது. இவற்றை அக்காலத்தில் நேரடியாகப் பலர் கண்டு பெருமைப்பட்டனர். இன்று அவர் அமரராகி விட்டபோதும், அவரின் சமத்துவக் கொள்கைகள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவரின் வாழ்க்கைமுறை சமுதாயப்பற்று, சமத்துவக் கொள்கைகள் பற்றி வெளிப் படுத்துவதற்கு எதிர்காலத்தில் **அவரைப் பற்றிய ஓர் வரலாற்று நூலை வெளியிட வேண்டிய அவசியமும் தேவைப்பாடும் இருந்தபோதும்** இச்சிறுகதை மூலமாவது அவர் குறித்த சில விடயங்களை வெளிப்படுத்தியமை, இந்த சிறுகதைக்கு பொருத்தமானதாகவும், பெருமை சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரபல சமூகஎழுத்தாளர் "டானியல்" அவர்களால் எழுதப்பட்ட "**பஞ்சமர்**" என்ற நூலில் ஐயாக்குட்டி அண்ணனின் சமூகசிந்தனைகள் எழுத்துவடிவில் இடம்பெற்றிருப்பதை இன்றும், நாங்கள் பார்த்து வாசிக்கக் கூடியதாக உள்ளது. அவரின் சமத்துவக்கொள்கைகள், நசுக்கப்பட்ட, நலிவுற்ற சமூகங்களுக்கு ஒரு வலிமையை ஏற்படுத்தியது. அவரைப்போன்ற முன்னோடிகளின் ஆதரவு, இன்னும் பல சமூகமுன்னோடிகள் ஆதரவு, இளைஞர்களின் விழிப்புணர்வு, அனைத்தும் ஒன்று சேர்ந்து அன்றைய காலகட்டத்தில் சாதிவெறியை ஓரளவு தணித்திருந்தது.

அக்காலத்தில் கட்டாய ஆலயப் பிரவேசங்களும், தேநீர்க் கடை பிரவேசங்களும், சிறுபான்மை இனத்தவரால் மேற் கொள்ளப் பட்டது. இவை சாதி வெறியை தகர்ப்பதற்கு காரணம் ஆகவும்

அமைந்தது. அக்காலத்தில் துப்பாக்கிகள் பெரிதாக இருக்கவில்லை, "கள்ளத்துவக்கு" என்றுசொல்லி அழைக்கப்பட்ட, நாட்டுத்துப்பாக்கி இருந்தது. அவை சாதிக்கலவரங்களின் போது சிறுபான்மை இனத்தவரால் பாவிக்கப்பட்டது. அத்துடன் "**பம்ஸ்**" என்று அழைக் கப்பட்ட, பெரும் தேசம் விளைவிக்கக் கூடிய உள்நாட்டு "எறி வெடிகள்" கன்பொல்லை சிறுபான்மை இனத்தவரால் உற்பத்தி செய்யப்பட்டு, கலவரங்களின் போது பாவிக்கப்பட்டது. இதனால் இருபகுதியிலும் பலர் கொல்லப்பட்டனர். இவை எல்லாம் சேர்ந்து சாதிவெறிக்கலவரங்கள் ஓரளவு தணிக்க காரணமாய் அமைந்தது. "பம்ஸ்" தயாரிக்கும் போது, ஏற்பட்ட வெடிவிபத்தில் பலர் கைகளை இழந்தனர். சிலர் உயிரையும் இழந்தனர். உயிரிழந்த சிறுபான்மை இனத்தவரான **அந்த சமூக முன்னோடிகளைக் கௌரவித்து** "கன்பொல்லை" கிராம மக்கள் அவர்களின் உருவங்களைக் கல்லில் செதுக்கி "**சிலைகளாக**" வைத்துள்ளனர். அந்தச் சிலைகளை நெல்லியடி "**இராசகிராமத்தில்**" இன்றும் பார்க்கக்கூடியதாக உள்ளது.

அக்காலத்தில் கலப்புத் திருமணங்கள் பெரிதாக நடை பெறவில்லை. அப்படி நடைபெற்றால் நிச்சயமாக, இரு இனத்தவர்கள் மத்தியிலும், கலவரங்கள் ஏற்பட்டு ஒருசிலர் பலியாகும் நிலை நிச்சயமாக ஏற்படும். சாவகச்சேரியில் ஆபரணக்கடை வைத்திருந்த பிரபலம் ஒருவரின் மகளை, சரசாலையைச் சேர்ந்த சிறுபான்மை இனத்து "**பொன்ராசா**" என்ற வாலிபன் திருமணம் செய்தபோது, பலத்த எதிர்ப்புக்கள் தோன்றியதும், சிறிது காலத்தின் பின்னர் பொன்ராசாவின் தகப்பன் சுட்டுக்கொல்லப்பட்டதும், பலரும் அறிந்த விடயம், இதனால் கலப்புத் திருமணங்களை செய்ய பல இளைஞர்கள் பயப்பட்டனர். இருப்பினும் இதைஎல்லாம் மீறி ஆங்காங்கே பல கலப்புத் திருமணங்கள் "காதல் உணர்வுடன்" நடைபெற்றது.

சாதிவெறியையும் சாதியத்தையும் முற்றாக அழித்தொழிக் கக்கூடிய **ஒரே ஒரு ஆயுதமாகக், கலப்புத் திருமணம் ஒன்று தான், அன்றும் சரி, இன்றும் சரி, இருந்து கொண்டிருக்கிறது.** அக்காலத்தில் இது முற்றாக உணரப்பட்டபோதும், அதன் பின் விளைவுகள் பலத்தசேதங்களை உருவாக்கக் கூடியதாகவும், பல உயிர்களைப் பலி கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. இதனால் பல இளைஞர்கள் கலப்புத் திருமணத்துக்கு தயக்கம் காட்டினர். இருந்தபோதும், இரு பகுதியினரில் சம்மதங்கள் இல்லாமல் "காதல்" என்ற பெயருடனும், உணர்வுடனும், பல திருமணங்கள் பரவலாக நடந்து கொண்டிருந்தது.

தென்மராட்சியில் சரசாலை பொன்ராசாவின் திருமணத்தின் பின்னர், உயர்வகுப்பைச் சேர்ந்த **சிதம்பரநாதன்** என்பவர், அதே இடமான வடவரணி கறுக்காயைச் சேர்ந்த "**மணி**" என்று அழைக்கப்பட்ட கன்னியைத் திருமணம் செய்துகொண்டார். எதிர்ப்புக்களின் மத்தியிலும் பலர் அதை வரவேற்றனர். அவர்கள் பல பிள்ளைகளைப் பெற்று சந்தோஷமாக இருந்தனர்.

இதன் பின்னர் "**சிவகுருநாதன்**" என்பவர் தனது ஊரான, கொடிகாமத்தைச் சேர்ந்த **ஜெயதேவி** என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவர் நீதவான் உடையார் என்போரின் பரம்பரையைச் சேர்ந்தவர். உயர்ந்த குலத்தைச் சேர்ந்த அவரின் குடும்பம் அக்கிராமத்தில் உச்சநிலையிலும், அந்தஸ்திலும், கூடியதாக விளங்கியது. சிவகுருநாதன் யாழ்ப்பாணத்தின் பிரபலமான கல்லூரியாகிய "சென்ஜோன்ஸ்" கல்லூரியல் படித்தவர். ஆங்கில அறிவும் தமிழ் அறிவும் நிரம்பியவர். அத்துடன் கொழும்பில் சிலோன் "டுபாய்க்கோ" கம்பனியில் பணியாற்றியவர். இதனால் சிங்கள மொழியையும் நன்கு அறிந்திருந்தார். டுபாக்கோ கம்பனியால்

பணியாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்ட போது, இவரின் பெயரும் அதற்குள் அகப்பட்டு, இவர் வேலையை இழந்து, கொடிகாமத்தில் வந்து தனது குடும்பத்தினருடன் நிரந்தரமாக தங்கி வாழ்ந்தார்.

சமத்துவக் கொள்கைகளைக் கொண்ட சிவகுருநாதன் எல்லோருடனும் சாதிமத இன வேறுபாடின்றி பழகினார். இவரை எல்லோரும் அன்புடன் "**குரு**" என்று அழைத்தனர். இவர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஜெயதேவியை திருமணம் செய்தமையினால், குடும்பத்தவரினால் புறந்தள்ளப்பட்டு, ஒதுக்கி விடப்பட்டார். ஆனால் அவரின் குடும்பம் படித்தபண்புள்ள குடும்பமாக இருந்தமையினால், அடிதடி சண்டைகளோ இனக்கலவரமோ இடம்பெறவில்லை.

உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள் இத்திருமணத்தை விரும்பாது, ஜெயதேவியை விட்டு விட்டு, வருமாறும், சிவகுருநாதனை வெளிநாடு அனுப்பி விடுவதாகவும் பல்வேறு உறுதிமொழிகள் கூறியபோதும், அவரின் நெருக்கமான சினேகிதர் மூலம் புத்திமதிகூறிய போதும் சிவகுருநாதன் மறுத்துவிட்டார்.

நான் கையால் தொட்டு மணம் முடித்த, ஜெயதேவியை கைவிட்டு எக்காலத்திலும் வரமாட்டேன். எனது கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டேன். ஆண்,பெண் என்ற இரு சாதியினரைத் தவிர வேறு என்ன சாதி? அப்படி ஒன்று இருந்தால் அதை உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு அது தேவையில்லை என்று கூறிவிட்டார் சிவகுருநாதன். இதனால் அவரை எவராலும், எதுவும் செய்யமுடியவில்லை.

1970ம் ஆண்டு காலப்பகுதியில் இவரின் திருமணம் நடைபெற்ற நிலையில், முதல் முதலில் அதை வரவேற்று

மந்துவிலைச் சேர்ந்த "பனை அரசன்" (கற்பகக்காவலன்) நடாமாஸ்டர், இவருக்கும் ஜெயதேவிக்கும் விருந்துவைத்து மகிழ்ந்ததை மறந்துவிடாமல் இன்றும் நினைவில் வைத்துநண்பர்களிடம் கூறி பெருமைப்படுகிறார் குருநாதன்.

உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் தனது கவிதை ஒன்றில் குறிப்பிட்டது போல...!

சாதியாம் சாதி என்னடா தம்பி சாதி
சேரியிலை போய் பொன்னியைப் பாரடா
மூக்குண்டு முகமுண்டு முழுதாக முற்றுமுண்டு - அந்த
பூச்சண்டைக் கண்டவர்கள் புலவர்களாய் போனதுண்டு

என்ற கவிதை வரிகளின் "உட்பொருளின் வெளிப்பாடு" குருநாதன் வாழ்க்கையிலும் அவரின் கொள்கையிலும் ஒன்றுபட்டிருந்தது.

வசதியான குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த, சிவகுருநாதன் வசதிகுறைந்த சிறுபான்மை இனதைச் சேர்ந்த ஜெயதேவி குடும்பத்தில் திருமணம் முடித்தமையினால் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையிலும், வேலை எதுவும் இல்லாத நிலையிலும், கஸ்டப்பட்டநிலையிலும் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்? கௌரவமாக வாழவேண்டும், என்ற கொள்கையினால், மனைவியின் உறவினர் அக்கம் பக்கத்தவருடன் சேர்ந்து எல்லாவிதமான கூலிவேலைகளையும் செய்தார். வன்னிக்கு சென்று நெல் வயலில் அருவி வெட்டினார். வரம்பு கட்டினார். சுருக்கமாகச் சொன்னால் அவர் செய்யாத வேலைகளே இல்லை என்று கூறலாம். தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காத "குருநாதன்" பாட்டாளி வர்க்கத்தில் தானும் ஒருவனாகி தலை நிமிர்ந்து வாழ்ந்தான்.

கொள்கை மாறாத குருநாதனுக்கும் ஜெயதேவிக்கும் பல பிள்ளைகள் பிறந்தன. ஒரு பிள்ளையை தேச விடுதலைக்காகத் தியாகம் செய்தபோதும், அவரின் ஏனைய பிள்ளைகள் படித்து அரச உத்தியோகம் பார்த்து, திருமணம் செய்து இன்றும், சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். பிள்ளைகளை ஆளாக்கிய பெருமை குருநாதனுக்கும் அவர் மனைவி ஜெயதேவிக்கும் மட்டுமே சொந்தம்.

இன்றும் குருநாதனும் ஜெயதேவியும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மாடி வீடுகள் அவர்களிடம் இல்லை. ஆனால் **மனிதநேயம்** இருக்கிறது. ஆணவம், அகங்காரம் அவர்களிடம் இல்லை. ஆனால் **அன்பு பாசம்** இருக்கிறது. இதைவிட அவர்களிடம் **"மனிதர்கள்"** என்ற மகத்தான பண்பும், உறவும் இருக்கிறது. இது எல்லாம் குருநாதனின் கொள்கையாகவும் இருக்கிறது. அவர்கள் அன்பாகவும் சந்தோசமாகவும் தம்மால் மற்றவர்களுக்கு செய்யக்கூடிய உதவிகளையும் செய்து நிம்மதியாக **"மனித வாழ்க்கை"** வாழுகின்றனர். சிவகுருநாதன் திருமணம் முடித்த 1970ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்து சாதியத்தை முறியடிக்க பலத்த ஆயுதமாக இருந்த "கலப்புத் திருமணத்தை" குருநாதனைப் போல், **ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஐந்து பத்து இளைஞர்கள் பின்பற்றியிருந்தால்...**" இன்று யாழ்ப்பாணத்து சாதியம் என்பது வேரோடு களையப்பட்டிருக்கும். "எல்லோரும் ஓர் குலம்" என்ற நிலையில் யாழ்ப்பாண மக்கள் வாழ்ந்திருப்பார்கள்.

பொதுமேடைகளில் ''சமத்துவம் சமவுரிமை'' பற்றி முழங்கியவர்களையும், தமிழர் என்றால் ஓரினம் என்று, அரசியல் மேடைகளில் அழகாகப் பேசியவர்களையும் விட, குருநாதனின் கொள்கைகள் மேலோங்கியிருந்ததை எவரும் மறுத்துவிடவோ,

மறந்துவிடவோ முடியாது, இதை உணர்ந்துகொண்ட தென்மராட்சி மக்கள் பலர் இன்றும் சிவகுருநாதனை மதித்து வருகின்றனர். குருநாதனின் கொள்கையும் சாதனையும் ஒரு சாதாரண சம்பவம் அல்ல, ஒருசரித்திரம் என்றுதான் பலர் எண்ண வேண்டியுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்து தமிழரின் சாதியம் முற்றாக அழிந்து விடாது இருந்தாலும் அதன் சக்தியும் வல்லமையும் குறைந்து வருகின்றமை காணப்படுகின்றது. ஆனாலும் அதன் "மூலவேர்" இன்னமும் முற்றாக அறுந்து அழிந்துவிடவில்லை. என்றே கூற வேண்டியுள்ளது.

அண்மையில் (2018ம் ஆண்டு யூன் மாதம்) வடவரணி கறுக்காய் சிமிழ் அம்மன் கோவிலில், புதிதாக அமைக்கப்பட்ட தேரை வீதியால் இழுத்து வருவதற்கு பக்தர்கள் தயாராக இருந்தபோது, அந்தப் பக்தர்களுக்குள் சிறுபான்மை இனத்தவரும் கலந்து இருந்தமையினால் "அவர்கள் தேரை இழுக்கக்கூடாது" என்று கருதிய பெரும் குடிமக்கள் அந்தத் தேரை, பாரம் தூக்கும், இழுவைச் சக்தி கொண்ட ஜெசிபி என அழைக்கப்படும் இயந்திரத்தைக் கொண்டு, வீதியால் இழுத்துச் சென்றமை, சாதியத்தின் **மூலவேர் இன்னமும் அறுந்துவிடவில்லை** என்பதற்கு, ஓர்பெரிய உதாரணமாகக் அமைந்துள்ளது. சாதியம் என்பது "எம்மால் உருவாக்கப்பட்ட ஒரு வரட்டுக் கொள்கையேயன்றி வேறொன்று மில்லை" என்பதை சிவகுருநாதனின் குடும்பத்தவர் மட்டுமல்ல ஏனைய உயர் குடும்பத்தினர் பலரும் இன்று படிப்படியாக உணரத் தொடங்கியுள்ளனர்.

குருநாதனின் கொள்கைகளை இக்கால இளைஞர்கள் பலர் படிப்படியாக உணரத் தொடங்கியுள்ளதால், **"குருநாதனின்**

கொள்கைகள் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது" அதேபோல் குருநாதனும், மனைவி ஜெயதேவியுடனும் பிள்ளை களுடனும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குருநாதன் எல்லோராலும் அன்புடன் "**குரு**" என்று அழைத்து மதிக்கப்படுகிறார். கொள்கை மாறாத **சிவகுருநாதனுக்கு "குரு" என்ற பெயர்** மிகவும் பொருத்தமானதாகவும் காணப்படுகிறது.

எழுத்தாளன் சிந்தனை
2018 ஆவணி

(7) விக்டர் நீ...!
அதிஸ்டம் இல்லாதவன்...!

நேரம் மாலை 6.00 மணியிருக்கும், "சாந்தி கபே" மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. இருபது பேருக்கு ஒரே சமயத்தில் உணவு பரிமாறக் கூடிய வகையில் அமைந்திருந்த சாந்தி கபேயில், இருவர் மட்டுமே சர்வராக வேலை செய்து வந்தனர். இருவரின் கரங்களும் இயந்திரம் போல் வேலை செய்யத்தொடங்குமாயின், இருபது பேரென்ன இருநூறு பேருக்கே உணவு பரிமாறி விடுவார்கள்.

அதில் ஒருவன் சாமி, அடுத்தவன் விக்டர், சாமிக்கு விக்டரை விட சம்பளம் அதிகமாகக் கிடைத்தது. ஆனால் விக்டருக்கு சாமியை விட வேலைதான், அதிகமாகக் கிடைத்தது. சம்பளம் குறைவாகவே கிடைத்தது. அத்தோடு இராமலிங்கத்தின் இரக்கமற்ற ஏச்சுக்களும் பேச்சுக்களும் மேலதிகமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது.

இராமலிங்கம்தான் சாந்தி கபேயின் முதலாளி. தன் ஒரே மகள் சாந்தியின் பெயரைக் கடைக்கு வைத்திருந்தாரேயன்றி "சாந்தி" "சாந்தம்" என்பவற்றை சிறிதளவு கூட, தன்னகத்தே வைத்திருக்க வில்லை. இராமலிங்கம் ஒரு பார்வை பார்த்தாரென்றால் விக்டருக்கு உடம்பெல்லாம் ஆடத்தொடங்கிவிடும். அவ்வளவிற்குப் பொல்லாதவர் இராமலிங்கம். குறைந்த சம்பளத்தில் கூடிய வேலை வாங்கும் வியாபாரத் தந்திரம் நன்கு தெரிந்தவர் இராமலிங்கம். அத்துடன் சாப்பாட்டுக்கணக்கு குறைவாக இருக்கும் நிலையிலும் கூடிய பணம் வசூலிப்பவர், தான் உயர்ந்த நிலையில் இருப்பதாகவும், மற்றவர்கள் தன் காலடிக்குக் கீழ் இருப்பதாகவும், எண்ணுபவர். ஆனால் சாந்தி

கபே உணவகத்தை நடாத்தி, எப்படியோ? பலலட்சம் ரூபாக்களைச் சேர்த்துக் கொண்ட பெரும் பணக்காரர்.

டிங்... டிங்.. டிங்... டிங்... ரீ போட்டுக் கொண்டிருந்த விக்டர் முதலாளி இராமலிங்கத்தின் அருகில் சென்று, டபிள் 44.20 என்றான். இராமலிங்கம் ஓரக் கண்ணால் விக்டரை ஒருமுறை பார்த்துக்கொண்டார். அந்தப் பார்வையின் அர்த்தம் அவனுக்கு நன்கு தெரியும். ஆட்களுக்குத் தகுந்தபடி கணக்குச்சொல்ல வேண்டுமென்பது, இராமலிங்கத்தின் கண்டிப்பான கட்டளை. விக்டர் என்ன செய்வான்? அவர்கள் இருவர் சாப்பிட்ட கணக்கே 44.20 ரூபா தான். அதைக் கூட்டிச் சொல்ல விக்டரின் மனச்சாட்சி மறுத்தது. தன் நிலைமையை நினைத்து தனக்குள்ளேயே அழுது கொண்டான் விக்டர். அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது.

விக்டர்... விக்டர்.... பதிலில்லை. காலை 5.00மணிக்கு மேலாகிவிட்டதே? இன்னுமா விக்டர் எழும்பவில்லை? சந்தேகம் வலுத்துக்கொண்டதனால்...! விக்டரின் அறைக்கதவை திறந்தாள் இராமலிங்கத்தின் ஒரே மகள் சாந்தி. அங்கே அறை வெறிச்சோடிக் கிடந்தது.

ஒருவேளை விக்டர் எனக்குத் தெரியாமல், நேரத்துடன் எழும்பி கடைக்குப் போய்விட்டானோ? இருக்காது, என்னிடம் இருந்து தேநீர் வாங்கிக் குடிக்காமல் செல்லமாட்டானே? அறையை நன்கு நோட்டமிட்டாள் சாந்தி. அவனுக்கென்று சொந்தமாக இருந்த இரண்டு சாரங்களையும், அங்கு காணவில்லை. ஒரு கிழிந்த சிறுசாக்குப்பை அங்கு காணப்பட்டது. அதற்குள் ஒரு சில கசங்கிய கடிதங்களும், பழைய சேட், ஒன்றும் அந்த சேட் பொக்கற்றுள் இளம் சிவப்பு நிறத்திலான சுவீப் டிக்கற் ஒன்றும் காணப்பட்டது.

அவன் படுத்திருந்த பாய்ச்சுருளுக்குள், ஒரு சிறுகடிதம் காணப்பட்டது. அதில் கீழ் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

அன்புமிகு சாந்திக்கு!

என் அன்புக்கடிதம், யாருமற்ற அநாதையாகிய என்னிடம் நீங்கள் காட்டிய அன்புக்கு நான் என்றுமே கடமைப் பட்டிருக்கிறேன். நான் உங்களின் கடைக்கு வேலைக்கு வந்த நாட்கள் தொடக்கம், உமது தந்தை என்மீது எரிந்து விழுந்து கொண்டிருக்கிறார். மேலும் என்னை ஓர் அதிஸ்ட மில்லாதவன் என்று குறைகூறிக் கொண்டிருக்கிறார். என்னால் உங்களின் கடையின் வியாபாரம் வீழ்ச்சி அடைந்து விட்டதாம். கடுமையான வார்த்தைகளால் திட்டுகிறார்.

இதே நிலையில், இனிமேலும் தொடர்ந்து உங்கள் கடையில் வேலை செய்வதை, என் மனச்சாட்சி விரும்ப வில்லை. நான் இந்த முடிவுக்கு வந்ததையிட்டு, என்னைக் குறை நினைக்கவேண்டாம். என் இதயச் சாந்தியை விட்டு மனச்சாந்திக்காக, எங்கோ? போகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து கொள்ளவும்.

உனது அன்பின்,

விக்டர்.

கடிதத்தைப் படித்து முடித்த சாந்தியின் கண்களிலிருந்து நீர், பொலு பொலுவென வீழ்ந்து கொண்டிருந்தது. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னர் தான் விக்டர் அந்தக் கடைக்கு வேலைக்கு வந்திருந்தான். விக்டரின் கள்ளம்,கபடமற்ற பேச்சும், அமைதியான சுபாவமும் சாந்திக்கு நன்கு பிடித்துவிட்டது. அத்தோடு விக்டரின் பரிதாப வாழ்க்கையினால், சாந்திக்கு விக்டர் மீது ஒருவகை அனுதாபம் ஏற்பட்டது.

விக்டர் நிரம்பப்படித்தவன், ஒருபட்டதாரி. இப்பரந்த உலகிலேயே தனக்கென்று யாருமில்லாத ஓர் அப்பாவி அநாதை, விதியின் சதியினால் வேலை தேடி அலைந்த விக்டருக்கு "சாந்திகபே" இரக்கம் காட்டியது. இல்லை சாந்தி இரக்கம் காட்டினாள். இதன் காரணமாக இராமலிங்கம் வீட்டிலேயே விக்டருக்கு தங்கும் வசதி கிடைத்தது.

காலை 5.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை விக்டரின் உடம்பு இயந்திரம் போல வேலை செய்யும். இந்த நேரத்தில் அவன் மனம் விட்டு சிரிப்பது கிடையாது. காரணம் இராமலிங்கத்தின் வாயிலிருந்து சிரிப்பு வராது. அப்படி வந்தாலும் அது சிரிப்பாக இராது. அடுப்பிலிருந்து வரும் நெருப்பாகவே இருக்கும். இவை எல்லாவற்றையும், தனது தலைவிதியென நினைத்து விக்டர் சமாளித்துக் கொள்வான்.

விக்டர் மனம் விட்டுச்சிரிக்கும் நேரம் அதிகாலை நான்கு மணி, அந்த நேரத்தில் சாந்தியின் கையினால் தேநீர் வாங்கிக்குடிக்கும் அதிஸ்டம் அப்போது அவனுக்கு கிடைக்கும். தினந்தோறும் எத்தனையோ பேருக்கு தேநீர் தயாரித்துக்கொடுக்கும் அவனுக்கு, காலை 4.00 மணிக்கு மட்டும் சாந்தியின் முழு அன்புடன் கலந்த தேநீர் கிடைக்கும். அப்படிக் கொடுப்பதில் அவளுக்கும் ஓர் அலாதி இன்பம். அத்தேநீரை வாங்கிக்குடிக்கும் போது விக்டர் அதைப் பெரும் பாக்கியமாகக் கருதி ருசித்துக் குடிப்பான். விக்டர் என அவள் அவனை அழைக்கும்போது கூனிக்குறுகி நிற்பான் விக்டர். அப்போது பெண்களிடம் காணப்படும் நாணம் அவனிடம் காணப்படும்.

ஆரம்பத்தில் சாந்தி அவனிடம் பழகும்போது, ஓர் அனுதாபத்துடனேயே பழகி வந்தாள். இவ்வளவு படித்தவன் காலத்தின்

கோலத்தினால், தேநீர் தயாரிக்கிறான் என்றால் பரிதாபப்படாமல் இருக்க முடியுமா? இதை நினைத்த சாந்தி அவனிடம் இரக்கம் காட்டினாள். சிறிது சிறிதாக அந்த இரக்கம் காதலாக மாறியது. விக்டரை பொறுத்தவரை அதைக் காதல் என்றுகூட சொல்ல முடியாது. இவர்களின் உறவு பற்றி இராமலிங்கத்துக்கு எதுவுமே தெரியாது. விக்டர் அதை ஓரளவு உணர்ந்து கொண்டபோதும், அதில் அதிக ஆர்வம் காட்டிக் கொள்ளவில்லை. காரணம் தனது தகுதிக்கு அப்பாற்பட்ட விடயமாக அவன் கருதினான். கோபுரத்தின் உச்சியில் இருக்கும் சாந்தி எங்கே? குப்பை மேட்டில் குடியிருக்கும் நான் எங்கே? என்று எண்ணி அக்கறை காட்டாதிருந்தான் விக்டர்.

சாந்தியைப் பொறுத்தவரை அவள் விக்டருக்காக ஏங்கித் தவித்தாள். ஆனால் விக்டரைப் பொறுத்தவரை அவன் சாந்திக்காக ஏங்கவில்லை. காரணம் சாந்தியை அவனுக்கு பிடிக்கவில்லை என்பதல்ல, அதாவது பணத்திலே புரண்டு கிடக்கும் சாந்திக்கும், பஞ்சத்திலே தவண்டு கிடக்கும் தனக்கும் எள்ளளவேனும் பொருத்தமில்லை? என்பதே அவன் நோக்கம். ஒருநாள் இது பற்றி சாந்தியிடம் வெளிப்படையாகவே கூறிவிட்டான். அதைக்கேட்ட சாந்தி சிரித்துக் கொண்டே உங்களுக்கு மீசை முளைத்திருக்கிறது தானே? என்று கேட்டாள். விக்டரால் பதில் பேச முடியவில்லை.

மீசை முளைத்திருந்தாலும், அதை ஆசையோடு வளர்க்க முடியவில்லையே? என்று சிரித்துக்கொண்டே கூறிச் சமாளித்தான் விக்டர். அவன் சிரித்த அந்த புன்னகைச் சிரிப்பு, அது ஜீவனற்றது. அதில் எந்த வலுவும் இருக்கவில்லை அதற்கு... உயிர்த்துடிப்பு சிறிதேனும் இருக்கவில்லை. தன் இதயத்தின் அடித்தளத்திலுள்ள எண்ணற்ற கவலைகளையெல்லாம் தன்னுள் அடக்கிய ஓர் தனித்துவமான சிரிப்பு. அதன் அர்த்தத்தைச் சாந்தி அறியமாட்டாள்.

பேப்பர்.... பேப்பர்.... குரல் கேட்டு வாயில் பக்கம் போன சாந்தி, அன்றைய தினசரியுடன் திரும்பி வந்தாள். செய்திகளின் தலைப்புக்களை ஒழுங்காகப் பார்த்துக்கொண்டு சென்ற சாந்திக்கு "அதிஸ்டசாலிகள்" என்னும் குட்டித் தலையங்கத்தின் கீழ் அம்மாத சுவீப் டிக்கட் முடிவுகள் வெளியாகி இருந்தது கண்ணில் பட்டது.

தனது கைப்பையினை திறந்து ஒவ்வொரு இலக்கங்களாகப் பார்த்துக் கொண்டு சென்ற சாந்தி, முடிவில் ஏமாற்றம் பிரதிபலிக்க நிமிர்ந்தாள். அவள் எடுத்திருந்த சுவீப் டிக்கட்டுக்கள் எதற்கும் பரிசு விழுந்திருக்கவில்லை. விக்டரைப்போல் தானும் அதிஸ்ட மில்லாதவளா? என நினைத்துக் கொண்டாள் சாந்தி. ஏதோ நினைவு வந்தவளாக, விக்டரின் அறைக்குள் நுழைந்தாள். அங்கு அக்கிழிந்த சாக்குப்பை அவளை அமைதியுடன் வரவேற்றது. சாந்தியின் காதுகளில் "சாந்தி நான் அதிஸ்டம்" இல்லாதவன் என்று விக்டர் கூறுவது போலிருந்தது. சற்று முற்றும் பார்த்தாள், ஒரு பிரமைதான்.

அவளின் மனக்கண் முன்னால் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அவன் சாக்குப் பையினுள் கையை விட்டுப் பார்த்தாள். விக்டர் விட்டுச்சென்ற சேட்டினுள், அந்த இளம் சிவப்பு நிறத்திலான சுவீப் டிக்கட் காணப்பட்டது. அந்தக் கசங்கிய கடிதங்களோடு சேர்ந்து காணப்பட்ட இளஞ்சிவப்பு நிறமான சுவீப்டிக்கட்டைஎடுத்து அன்றைய தினசரியுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

என்ன அதிசயம்? அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. ஆச்சரியம் தாங்க முடியவில்லை. **விக்டரின் சுவீப் டிக்கட்டுக்கு முதல் பரிசு பத்து இலட்சம் ரூபா விழுந்திருந்தது.** சாந்தியின் மனம் சந்தோசத்தால் துள்ளியது. இதைக் காட்டி விக்டர்... நீ அதிஸ்டசாலி என்று சந்தோசத்துடன் கூறலாம்... ஆனால் விக்டர் எங்கே? அவனை எங்கே தேடுவது?.

அப்பா, விக்டரை அதிஸ்டமில்லாதவன் என்று அடிக்கடி பேசினீர்களாமே..? இப்போது பார்த்தீர்களா? "விக்டரின் அதிஸ்டத்தை" என்று கூறி சுவீப் டிக்கட்டையும், தினசரியையும் அவர் முகத்தில் வீசவேண்டும் போல் தோன்றியது சாந்திக்கு, ஆனால் அடுத்த கணம் அவள் மனம்மாறிவிட்டது. விக்டர் இல்லையே? எங்கோ சென்று விட்டானே? எங்கே தேடுவது? விக்டருக்கு முதல்பரிசு பத்து லட்சம் விழுந்த சுவீப் ரிக்கற் அவளைப் பார்த்து சிரித்துக் கொண்டு இருந்தது.

விக்டரின் உருவம் அவள் மனக்கண் முன் தோன்றி சாந்தி... சாந்தி... என்று அழைப்பது போலிருந்தது. சாந்தி நான் அதிஸ்ட மில்லாதவன் என்று விக்டர் கூறுவது போல் இருந்தது சாந்தியின் கண் விழிகள் படபடத்தன. விக்டர் நீ அதிஸ்டமில்லாதவன்தான். அது உண்மைதான்

விக்டர்... உனக்கு முதல் பரிசு விழுந்தும், நீ அதை அனுபவிக்க முடியாதவனாக எங்கோ போய்விட்டாயே? உண்மையில் விக்டர்... நீ... அதிஸ்டமில்லாதவன்தான், **"விக்டர் நீ... அதிஸ்ட மில்லாதவன்..."** என அவள் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. விதியின் கொடூரத்தை சகித்துக்கொள்ள முடியாத சாந்தியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

கற்பகம்
1990 - சித்திரை

மரணிக்கும்
மண்வாசனை

⑨ மரணிக்கும் மண்வாசனை

தான் கிராமத்தில் வாழ்ந்த பசுமையான நினைவுகளை எண்ணிப்பார்க்கிறாள் வெண்ணிலா, அதை நினைக்கும் போதே அவள் மனத்தில் பெருமிதம் தோன்றி இதயம் நிரம்புகிறது.

யாழ் மாவட்டதின் தென்மராட்சிப் பிரதேசம் முடிவுறும் வடக்குப் பகுதியில் அமைந்திருந்தது. அவள் வாழ்ந்த அழகான "**வரணி**" என்ற பெயரைக் கொண்ட அக்கிராமம், அக்கிராமத்தில் பல்வேறு வளங்களும், பனைவளமும் நிரம்பி இருந்தது. தொழிலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சமூகங்கள் வாழ்ந்திருந்த போதும், ஒற்றுமையாகவும், அன்பாகவும், மனிதநேயத்துடனும் அவர்கள் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர். **"மனிதர்கள்"** என்ற **"மகத்தான உறவு"** அவர்களிடம் நிரம்பி இருந்தது. வரணியின் வடபகுதியான, **வடவரணிக் கிராமம்** உயிரோட்டத்துடன் அமைதி நிறைந்து காணப்பட்டது.

ஒருசிலர் அரச உத்தியோகம் பார்த்தார்கள், ஒரு பகுதியினர் வயல்விதைத்து தோட்டங்கள் செய்தார்கள். இன்னும் சிலர் அக்கிராமத்தில் அருகில் இணைந்திருந்த, சிறிய முள்ளிக்காட்டில் "கண்டல் விறகு" "பொற்பற்றை அலம்பல்" களையும் வெட்டி வந்து தமது தேவைக்கு பாவித்துவிட்டு மிகுதியை விற்பனை செய்தார்கள். சிலர் அருகிலுள்ள "சூளங்கிராய்" "காவற்கழி" போன்ற சிறுகடலேரிகளில் மீன்பிடித்தார்கள். பலர் பனை வளத்தை

முழுமையாகப் பயன்படுத்தி அதிலிருந்து வருமானம் பெற்றார்கள். இதனால் அக்கிராமமக்கள் பஞ்சம் பசியின்றி மிக சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

அக்கிராமத்தில் செல்லையா என்பவரின் மூத்தமகள் தான் வெண்ணிலா, வெண்ணிலா பெரிதாகப் படிக்காது விட்டாலும், சிறந்தகெட்டிக்காரி. தனது இரண்டு பெண் சகோதரிகளுடனும், கடைசித் தம்பி கண்ணனுடனும், தனது தகப்பனார் செல்லையா செய்து வரும் தோட்டவேலைகளுக்கு, ஒத்தாசையாக இருந்ததுடன், வீட்டுநிர்வாகம் முழுவதையும் அவளே கவனித்து வந்தாள். தாயார் அன்னம்மா, வெண்ணிலாவை அப்படி வளர்த்திருந்தாள்.

அக்கிராமம் முள்ளிச் சிறுகாட்டினை ஒட்டிய உவர்த் தறையாக இருந்தமையினால், சிறுதோட்டம் செய்யக்கூடிய மண்வளத்தை கொண்டிருக்கவில்லை. கிராமத்தின் முடிவில் ஒதுக்குப் புறமாக அமைந்திருந்த மயானத்தின் (சுடலை) ஒருபகுதி திடலாகவும், தோட்டம் செய்யக்கூடிய மண்வளத்தையும் கொண்டிருந்தது. அப்பகுதியில் கிராமமக்கள் தோட்டம் செய்தனர். கிராமத்தின் வடக்குப்பக்கம் சிறுகாட்டினையும், இடைப்பட்ட பரந்துபட்ட பிரதேசம் சிறுதீவுகளைப்போல மேட்டுநிலங்களையும் கொண்டிருந்தது. அந்த இடப்பகுதி "கேதா" "விதையடித்தா" என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டது. ஊரி மண் நிறைந்து காணப்பட்ட அப்பகுதி வெங்காயம், மிளகாய், புகையிலை, கத்தரி, வெண்டி, தக்காளி வளர்வதற்கு சிறந்த இடமாகக் காணப்பட்டது.

அக்கிராமத்தைச் சேர்ந்தவரகள் அந்தநிலங்களில் தமது பிரதான தோட்டத்தொழிலை மேற்கொண்டு, போதிய வருமானத்தைப் பெற்றுவந்தனர். அத்தோட்டங்கள் கிராமத்தில் இருந்து ஒரு மைல்

தொலைவில் இருந்தது. தோட்டத்தின் விளைபயிர்களான கத்தரி, மிளகாய் பழம், போன்றவற்றை ஒருமைல் தூரம் காட்டுத் தண்ணீருக்குள்ளால் நடந்து சென்று தலைச்சுமையாக, பெண்கள் சுமந்து வருவார்கள். ஒருமுறை வெண்ணிலாவும் மிளகாய் சாக்கை சுமந்துகொண்டு பெண்களுடன் வரும்போது, முன்பக்கம் பாம்பு போலவும் பின்பக்கம் மீனின் வால் போன்ற அமைப்பையும் கொண்ட "**விலாங்கு**" என அழைக்கப்படும் மீனினம் ஒன்று, அவளை நோக்கி வேகமாக தண்ணீருக்குள்ளால் வந்தபோது, அதைப் பாம்பு என நினைத்து ஐயோ பாம்பு பாம்பு..... என்னைக் கடிக்க வருகிறது என்று கத்திக்கொண்டு, தண்ணீருக்குள் வீழ்ந்ததையும் அதைப் பார்த்து மற்றப் பெண்கள் கைகொட்டி சிரித்ததையும், அவள் இன்றும் மறக்கவில்லை. அச்சிறு காட்டில் நீருக்குள் வளர்ந்திருக்கும் பொன்நிறமான "**பொற்பற்றை**" அலம்பல்களையும், கண்டல், விறகுகளையும் சும்மாடு சுற்றி தலையில் சுமந்து கொண்டு வீட்டுக்கு வருவார்கள். அதைவிற்று அந்தப்பணத்தைக் கொண்டு தன் இளையசகோதரிகள் இருவருக்கும், தான் தங்கச்சங்கிலி செய்து கொடுத்ததையும், வெண்ணிலா மறந்து விடவில்லை.

மாரிகாலத்தில் முள்ளிக் காட்டு சிறுநீர்த்தேக்கம் "சூளங்கிராய்" "காவற்கழி" போன்ற சிறுநீரேரிகளும் வெள்ளத்தில் நிறைந்துவிடும். பனையுரஞ்சி, உழுவை, விரால், கெழுத்தி, போன்ற மீன்கள் நிறைந்துவிடும் தென்னை ஈர்க்கினால் பின்னப்பட்ட கூடுகளை (இது "கெய்மீன்" கூடுகள் என அழைக்கப்படும்) தாமே இழைத்து, மீன்வரும் பாதைகளை ஈச்சம் ஓலைகளைக் கொண்டு மறித்துக்கட்டி இக்கூடுகளை இடைக்கிடை வைத்து, அதற்குள் அகப்படும் மீன்களைப் பிடித்து தமது கறித்தேவைக்கு எடுத்துக்கொண்டு, மீதியை சந்தையில் விற்பனை செய்வார்கள். சிலர் கண்டல் காட்டில் வளரும் "**பீற்சுளாத்தி**" என்னும் தடிகளை வெட்டியும்" அவை

போதாத பட்சத்தில் கிராமத்திலுள்ள கொய்யா தடிகளை வெட்டியும் கரப்பு இளைப்பார்கள். அந்தக் கரப்பை நீருக்குள் அமர்த்தி அதற்குள் அகப்படும் மீன்களைப் பிடிப்பார்கள். சிலர் சிறு வலைகளை வீசியும், சிலர் தூண்டில் போட்டும் மீனைப்பிடிப்பார்கள். **இவையாவும் அவர்களின் பருவகால தொழிலாக இருந்தது**. இதன்மூலம் பல குடும்பங்கள் உயிர்வாழ்ந்தது.

இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து, இரவில் சூள் வெளிச் சங்களை உருவாக்கி அதை எடுத்துச் செல்வார்கள். நீருக்குள் அமைதியாக இருக்கும் நண்டுகள் வெளிச்சத்தை நோக்கி ஓடிவரும்போது "மழு" என்று சொல்லப்படும் சூலம் போன்ற வடிவில் அமைந்திருக்கும் சிறிய கூரான "மண்டா" என்ற ஆயுதத்தினால் குற்றி, தம்முடன் தயாராக வைத்திருக்கும், கூடைபோன்று அமைந்திருக்கும் "பறிக்குள்" போடுவார்கள். ஒருசில மணித்தி யாலங்களில் பறிநிறைந்து விடும். தாம்பிடித்த நண்டை வீட்டுக்கு கொண்டுவந்து அவற்றை நெருப்பில் வேகவைத்து சுட்டுச் சாப்பிடுவார்கள். அவை மிகுந்த ருசியாக இருக்கும். ஒருசிலர் பனங்கள்ளையும் அருகில் வைத்திருந்து அதை சிறுகஉறிஞ்சி உறிஞ்சிக் கொண்டு, நண்டை ருசித்து சாப்பிட்டு மகிழ்வார்கள். மீதியை விற்பனை செய்வார்கள். இப்படியாக பல்வேறு இயற்கை வளங்களைக் கொண்டிருந்தது வடவரணி என்ற கிராமம். அக்கிராம மக்கள் சந்தோஷமாகவே வாழ்ந்தார்கள்.

கிராமத்தின் பெருமைகளில் மூழ்கியிருந்த வெண்ணிலா "பிள்ளை மீன் வேண்டுமா? என்று கேட்ட குரலினால் வாசல் பக்கம் பார்த்தாள்.. மணல்காடு நாகர்கோவில் பகுதியிலிருந்து தலைச்சுமையாக, கடகத்தில் மீனை எடுத்துக்கொண்டு "**சாளம்பை**" ஊடாக நடந்துவரும், கண்ணகி ஆச்சியும், செல்லமுத்து ஆச்சியும்

நின்று கொண்டிருந்தனர். வீட்டுக்குள் இருந்து ஒரு சிறுபையுடன் ஓடிவந்த சகோதரி வான்மதி - நெத்தலி, காரல், சூடை, கீரை மீன்களை நிறையவாங்கிக்கொண்டு திரும்பிவந்தபோது, அக்கா உங்களுக்கு இண்டைக்கு கொண்டாட்டம் தான், என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றாள். ஓடியல் மாவுடன் வெங்காயம், மாங்காயுடன் பச்சைமிளகாயைப் பொடி செய்து அவித்த சிறு மீன்களையும் பிசைந்து "**ஓடியல் மீன்பிட்டு**" அவித்து வெண்ணிலாவிடம் கொண்டு வந்து கொடுத்தாள் வான்மதி. அதைச்சாப்பிட்ட வெண்ணிலா அதன் சுவையை ருசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டு, தனது கணவனுக்கும் கொஞ்சம் வைக்கும்படி கூறினாள். ஓடியல்மீன்பிட்டின் சுவையை, அக்கிராம மக்கள் நன்கு அறிந்திருந்தனர். வெண்ணிலாவுக்கும் அதில் விருப்பமுண்டு.

வெண்ணிலா யாழ்ப்பாணத்தில் ஒரு வாலிபனைத் திருமணம் முடித்து அவனுடன் கனடா சென்றவள், இன்று பதினைந்து வருடங்களின் பின் கனடாவால் கணவனுடன் தாய்வீட்டுக்கு வந்திருக்கிறாள்? அவள் இக்கிராமத்தில் வாழ்ந்த போது கிராமத்தின் இயல்புகளையும், அதன் மண்வாசனையையும், அனுபவித்து வாழ்ந்தவள், எதையுமே அவளால் மறக்க முடியவில்லை? கிராமத்து மண்வாசனை அவள் நெஞ்சில் நிறைந்திருந்தது.

அவள் வாழ்ந்த காலத்தில் இக்கிராமத்தில், புதுமையான ஓர் தொழிலை பெண்கள் செய்து வந்தனர். விஞ்ஞானிகளால் அறிமுகப்படுத்தாத அதிசயமான ஓர் கைத்தொழில், அதாவது பெரும்காட்டுமரமான **"செம்மணத்தி"** என்ற மரத்திலிருந்து, அதுவும் பட்டுப்போன செம்மணத்தி மரத்தின் விறகினை உருக்கி அதிலிருந்து ஒருவகைத் தைலம் ஒன்றைத் தயாரித்தனர் இதைப் பெண்களே செய்தனர். இதை "**தருத்தைலம்**" என்று அழைத்தனர். மரத்திலிருந்து

இந்த தைலம் போன்ற எண்ணையை தயாரித்தபடியால் அக்காலத்தில் இதை **"மரஎண்ணை"** என்றும் சிலர் அழைத்தனர். இத் தருத் தைலம் யாழ்மாவட்டத்தில் **வடவரணிக் கிராம மக்களைவிட வேறு எவராலும், எப்பகுதியிலும் தயாரிக்கப்படவில்லை.** மேலும் இத்தருத்தைலத்தை விற்பனை செய்ய பருத்தித்துறைச் சந்தையில் மாத்திரம் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. இத் தருத்தைலத்தை பருத்துறை சந்தையில் அல்லது வடவரணிக்கிராமத்தில் மட்டுமே வாங்க முடியும். வேறு எங்குமே வாங்கிக்கொள்ள முடியாது. இந்த தைலத்துக்கு பெரும் கிராக்கி இருந்தது. மட்டக்களப்பிலிருந்து கூட இத்தைலத்தை முஸ்லீம் வியாபாரிகள் வாங்கிச்சென்று இந்த மரஎண்ணையான தருத்தைலத்தை போத்தலில் அடைத்து **"நீ ஒயில்"** **(TREE OIL)** என்ற ஆங்கில பெயர் சூட்டி விற்பனை செய்து, பெரும் பணம் ஈட்டினார்கள். வாராவாரம் பெரிய கொள் கலன்களைக் கொண்டுவந்து இக்கிராமத்திலிருந்து தருத் தைலத்தை பெருந்தொகையாக இங்கிருந்து வாங்கிச்சென்றனர். ஒரு மரத்தில் இதைப்பூசிவிட்டால் அல்லது குறுக்காக ஒருகோடு வரைந்து விட்டால், அதை மீறி எந்த ஒரு எறும்புகளோ, பூச்சிகளோ அந்த மரத்தில் ஏறமாட்டாது. இது அத்தைலத்தின் சிறப்பு.

இத் தருத்தைலம் இக்கிராமத்தில் மட்டுமே, அதுவும் பெண்களால் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதன் மூலம் பல குடும்பங்கள் உயிர் வாழ்ந்தது.

இதை ஒரு குடிசைக் கைத்தொழிலாக மாற்றி, இந்த தருத் தைலத்தை அப்பகுதி மக்களிடமிருந்து பணம் கொடுத்து வாங்கி, அதை மொத்தமாக கொள்வனவு செய்து, அவற்றைப் போத்தலில் அடைத்து, லேபல் ஒட்டி பருத்தித்துறை சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யாமல், வடவரணிக் கிராமத்திலேயே ஒரு

விற்பனை நிலையத்தை அமைத்து, விற்பனை செய்ய வேண்டும்? இத்தொழிலை நவீன மயப்படுத்த வேண்டுமென்ற எண்ணம், அக்கிராமத்து முற்போக்கு சிந்தனை கொண்ட முத்துக்குமாரு செல்லத்துரை மார்க்கண்டு, திரவியம், இராசேந்திரம், இரத்தினம் போன்ற பல இளைஞர்களுக்கு இருந்தபோதும், ஏனையவர்களின் ஆதரவுக்குறைவு, கொள்வனவு செய்து வாங்குவதற்கான நிதிக்கஸ்டம், வேறு சில புறக்காரணிகள், இருந்தமையினால் அம்முயற்சிகள் அக்காலத்தில் கைகூடவில்லை. பல குடும்பங்களுக்கு சோறு போட்டு உயிர்வாழ வைத்த அந்த "**அதிசயமான குடிசைக் கைத்தொழில்**" இன்று இக்கிராமத்திலிருந்து முற்றாக அடியோடு அழிந்துவிட்டது. வன்னி பெரும் காட்டிலிருந்து தருத்தைலத்தை உற்பத்தி செய்யும் செம்மணத்தி விறகைக் கொண்டு வர முடியாமையும் இதற்கு ஓர் பிரதான காரணமாக அமைந்துவிட்டது.

கிராமம் படிப்படியாக அழிந்து கொண்டிருப்பதை வெண்ணிலாவால் உணரமுடிகிறது. ஒருசில வீடுகளைத் தவிர, பல வீடுகள் பனை ஓலையினால் மேயப்பட்டிருந்தது. இன்று ஓலை வீடுகள் எதையும் காணமுடியவில்லை. கல்வீடுகள் காணப்படுகிறது. பொற்பற்றை அலம்பல்களினால் அழகாக அடைக்கப்பட்டு, வரிச்சுக்கட்டியிருந்த வேலிகள் எதையும் காணமுடியவில்லை. வேலிகளுக்கு மதில்கள் கட்டப்பட்டுவிட்டது. இப்போது முள்ளிக்காட்டுக்கு பொற்பத்தை அலம்பல் வெட்டவும், கண்டல் விறகு வெட்டவும், யாருமே போவதில்லை. விறகுக்கு பதிலாக "**காஸ்குக்கர்**" பாவிக்கத் தொடங்கிவிட்டனர். சூளங்கிராய் காவற்கழி சிறு கடலேரிக்கும் முள்ளிக்காட்டு சிறுநீர்த் தேக்கத்திற்கும் சென்று மீன் பிடிப்போர் யாருமில்லை?. தேவையான மீன்களை கொடிகாமம், வரணி, நெல்லியடி சந்தையிலும், கடைகளில் "**ரின்னில் அடைக்கப்பட்ட மீன்களையும்**" வாங்குகின்றனர். வீட்டின்

ஒதுக்குப்புறமாக வைக்கப்பட்டிருந்த அம்மியையும் குளவியையும், ஆட்டுக்கல்லையும் காணவில்லை? பதிலாக. "**கிறைண்டர்**" இருக்கிறது. வீட்டுத் தாழ்வாரத்தில் வைக்கப்பட்டிருந்த உரல் உலக்கைகளைக் கூட காணவில்லை. அரிசி **மில்லுக்கு** அடிக்கடி போய் வருகிறார்கள். சிறுபயிர்களின் மூலம் அமோக வருமானத்தை ஈட்டித்தந்த "சுடலையடித்தோட்டம்" "கேதூ" "விதையடித்தூ" தோட்டங்கள் கைவிடப்பட்டு இப்போது யாரும் அங்கே போவதில்லை. அத்தோட்டங்களிலிருந்து மிளகாய்ப்பழம், வெங்காயம் போன்றவற்றை ஏற்றி வீட்டுக்கு கொண்டுவந்த **மாட்டு வண்டில்களையும்** எங்கும் காண முடியவில்லை. **சைக்கிள்வண்டிகளை பாவனைகுட்படுத்துவோரின்** எண்ணிக்கையும் சரிபாதியாக குறைந்து விட்டதை அவதானிக்க முடிகிறது. பலர் ஆடு, மாடு கோழிகளை வளர்த்து அதன்மூலம் வருமானம் பெற்று வந்தனர். அவற்றையும் இப்போது கண்ணால் காணுவது அரிதாகிவிட்டது. இவை மட்டுமல்ல அக்கிராம மக்கள் மத்தியில் நிறைந்திருந்த **சந்தோசங்களையும் ஒற்றுமையையும்** கூடக் காண முடியவில்லை.

பட்டினத்திலிருந்து செல்லையா வீட்டுக்கு வந்திருந்த வெண்ணிலாவின் தோழி ஒருத்தியுடன் தகப்பன் பேசிக்கொண்டிருந்த போது, பிள்ளை, இது கிராமம். நீங்கள் நகரம். நகர மக்களின் **ஏட்டறிவை** விட கிராம மக்களின் **பட்டறிவு** மிக வலிமையானது. எங்கள் உழைப்புக்கள் தான் உங்களை உயிர் வாழ வைக்கிறது. உணவு உற்பத்தியும், உப உணவு உற்பத்தியும் எங்கள் மூலமாகத்தான் உங்களுக்கு கிடைக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் "**நாங்கள் சேற்றுக்குள் கால் வைத்தால்தான், உங்களால் சோற்றுக்குள் கை வைக்கமுடியும்**" என்று தகப்பன் கூறிய...! வார்த்தைகள் வெண்ணிலாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

இப்பிரதேசம் கலைஞர்கள் பலரை தன்னகத்தே கொண்டிருந்தது. இன்று அக்கலைஞர்கள் மறைந்துவிட்ட போதும் அவர்களை நினைவிற்கொள்ள எவரும் இல்லாது இருப்பதுடன் வளர்ந்துவரும் கலைஞர்களை ஊக்குவிக்க எவரும் அக்கறை காட்டாது இருப்பதைக் காணமுடிகின்றது. இப்பிரதேசத்தில் இருந்த பாரம்பரிய கலைகளும் படிப்படியாக அழிந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

வயற்பரப்புக்களைச் சொந்தமாகக் கொண்டிருந்த சில குடும்பங்கள், நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வாழ்கின்றனர். அரச தனியார்துறைகளில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களும், வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணத்தைக் கொண்டு வாழும் பல குடும்பங்களும், வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதே சமயம் பனை வளத்தையே முழுமையாக நம்பி அதைபாவித்து, அதிலிருந்து கிடைக்கும் கிழங்கு, ஒடியல், பனாட்டு, பனங்கட்டி என்பவற்றின் பயனைப்பெற்றும், பனை ஓலையைப் பயன்படுத்தி கடகம், பெட்டி, பாய், தடுக்கு, மூடல், நீற்றுப்பெட்டி, பனங்கட்டிக்குட்டான், உமல் போன்றவற்றை இளைக்கும் கைத்தொழில் முயற்சிகளிலும், பனை ஈர்க்கை பாவித்து "திரிகணை, சுளகு, உறி" போன்றவற்றை செய்வோரும், பனை மரத்திலிருந்து பனங்கள்ளையும், அதிலிருந்து பெறப்படும் பதனீரிலிருந்து (கருப்பணி) பாணி பனங்கட்டி உற்பத்தி செய்து, அதைப் பாவனைக்காகவும் வருமானத்துக்காகப் பெறுவோரும், பனங் களியைப் பிசைந்து "**பனாட்டு**" செய்வோரும் பனைவளத்தை முழுமையாகப் பாவிப்போரும் **அக்கிராமத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.**

வடபுலத்தின் பனைவளத்தை நம்பி, வாழும் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக கடந்த 45 வருட காலமாக அயராது,

தனது செயற்பாடுகளை ஆற்றி வருகின்ற பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களை எவராலும் மறக்க முடியாது உள்ளது. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட யுத்த சூழலின் போது பெருந்தொகையான பனை மரங்கள் அழிக்கப்பட்ட போதும், அவற்றை மீளக் கட்டியெழுப்பும் விடயத்திலும், பனையின் வளங்களை முழுமையாக பாவிக்க வேண்டும் என்னும் விடயத்திலும் அக்கறை கொண்டு செயற்படும், பனை அபிவிருத்தி சபையையும் மறக்க முடியாது உள்ளது. யாழ்ப்பாணத்துக் கவிஞன் ஒருவன் **ஏட்டினை புரட்டிப்பார்** என்ற தலைப்பில் பனைமரம் தன்னைப்பற்றிக் கூறுவதாக பாடிய கவிதையில்

உண்ணும் உணவுக்கும்
உழைப்புக்கும் துணை நின்றேன்
படுத்துறங்கும் வீடெல்லாம்
பலதிலுமே நானிருந்தேன்

என்ற கவிதை வரிகள் வெண்ணிலாவின் ஞாபகத்திற்கு வருகிறது. கிராமிய வளங்கள் எதுவும் பாவனைக்கு உட்படுத்தாமல் படிப்படியாக அழிந்து கொண்டிருக்கும் நிலையிலும், **யாழ்ப்பாணத்து பளைவளம்** அக்கிராமத்தில் முழுமையாக பாவிக்கப்படுவதை எண்ணி வெண்ணிலா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

கிராமத்து காற்றைச் சுவாசிக்கவேண்டும்?, கிராமத்து மண்ணின் வாசனையை நுகரவேண்டும்?, என்ற எண்ணத்துடன் சிலவாரங்கள் விடுமுறையில் கனடாவிலிருந்து பலவருடங்களின் பின், தன் கிராமத்துக்கு வந்த வெண்ணிலா சில நாட்களின் பின் திரும்பவும் கனடா செல்லத் தீர்மானித்து விட்டாள். ஏனெனில் "**கிராமம் கிராமமாக இருக்கவில்லை**. கிராமம் படிப்படியாக நகரமாக மாறிக் கொண்டிருக்கிறது" என்று கற்பனை பண்ணிக் கொண்டு பலர் வாழ்ந்து கொண்டிருந்தாலும், "அது **நகரமாக**

மாறவில்லை..! அது நரகமாக மாறிக்கொண்டிருக்கிறது" என்பதை சிலரால் மட்டுமே உணரமுடிகிறது. கிராமத்தின் இயல்புகளும், அதன் மண்வாசனையும் படிப்படியாக மரணித்துக் கொண்டிருப்பதை வெண்ணிலா உணர்ந்து கொண்டாள். கனடாவுக்கு கொண்டு செல்வதற்காக வெண்ணிலாவுக்கு, சகோதரிகளினால் கொடுக்கப்பட்ட பண்டங்களை, வெண்ணிலா அடுக்கிக் கொண்டிருந்தாள். பனங்காய் பணியாரம், பனாட்டு, பாணிப் பனாட்டு, ஒடியல்மா, பனங்கிழங்கு பனங்கட்டி என்பன நிறைந்து விட்டது. சகோதரி வான்மதியிடம், பிள்ளை குறிப்பிட்ட நிறைக்கு மேல் கொண்டுபோக முடியாது? இனிக்காணும் என்று வெண்ணிலா கூறியபோது, அவித்துக் காயவிடப்பட்ட (புழுக்கொடியல்) பனங் கிழங்கையும் கொண்டு வந்தாள் வெண்மதி.

அதைக்கண்டதும் அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. சில மதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கனடா வந்திருந்த உறவினர்கள், இவர்களுக்கு கொஞ்சம் புழுக்கொடியல் கொடுத்த போது, ஆவலுடன் அவள் அதைக்கடித்து சப்பி ருசித்துக் கொண்டிருந்தபோது, "கனடாவில் பிறந்துவளர்ந்த அவளின் மூத்த மகன்" கிட்டவந்து **"அம்மா ஏன் இந்தத் தடிகளைச் சப்பித் தின்கிறாய் உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா"** என்று கேட்டபோது, அவள் உருண்டு உருண்டு சிரித்தது ஞாபகம் வருகிறது.

இச்சமயத்தில் வெண்ணிலாவின் கணவன், கையில் சில போத்தல்களைக் கொண்டு வந்து கொடுத்து, இதையும் வை, இது போத்தலில் அடைக்கப்பட்ட யாழ்ப்பாணத்து பனங்கள். அங்குள்ள மதுப் பிரியர்களிடம் இதை நான் கொடுத்துப் பெருமைப் பட வேண்டும்? என்று கூறினான். அவள் மறுக்கவில்லை. வாங்கி வைத்தாள். அந்தப் போத்தல்களுடன் வரணி வடிசாலையில்

வடிக்கப்பட்ட "**பனம் சாராயம்**" என்ற லேபல் ஒட்டியிருந்த போத்தல் சிலவும் காணப்பட்டது. அதைப்பார்த்த வெண்ணிலா மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டாள். அவை மதுபானமாக இருந்தபோதும் பனை வளத்திலிருந்து தயாரிக்கப்பட்ட பானம் என்றும், தனது சொந்தக் கிராமத்து **வரணி பனை வடிசாலை** தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பானம் என்பதையும் எண்ணி பெருமை கொண்டாள்.

கிராமம் படிப்படியாக மரணித்துக்கொண்டிருந்தாலும், "**பனையும், பனைவளமும் மரணித்துவிடவில்லை**" என்பதை எண்ணி எண்ணி வெண்ணிலா பெருமைப்பட்டாள். கிராமத்தின் இயல்புகள் இன்னமும் அழிந்து விடவில்லை என்பதற்கு பனைவளம் ஒன்று மட்டும்தான், சாட்சி சொல்லக் கூடியதாக இருக்கிறது. வெண்ணிலா கணவனுடன் கனடாவுக்கு செல்ல ஆயுத்தமாகி விட்டாள். மீண்டும் கனடாவிலிருந்து எப்போது வருவாள்? என்பது எவருக்கும் தெரியவில்லை.

வரணிக் கிராமத்தை ஆசைதீர தன் கண்களால் பார்த்துக்கொண்ட போது அவள் கண்கள் பனிக்கத் தொடங்கியது.

கணவனுடன் கனடாவுக்கு புறப்பட்ட வெண்ணிலா குடும்பத்தை, உறவினர் பலரும் சேர்ந்து வழியனுப்பும் போது, **கட்டைப் பனை மரத்தில் ஏறிக்கொண்டிருந்த கடைசித் தம்பி கண்ணனும் கையசைத்து சந்தோசமாக வழி அனுப்பினான்.**

2019ம் ஆண்டு கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய தேசிய இலக்கிய கலைவிழாப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சிறுகதை.

9

நீண்ட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் கட்சி, தனது கொள்கைகள் மூலமும், மக்களுக்கு செய்து வந்த சேவைகளின் மூலமும், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றதுடன், மக்கள் மத்தியில் நீங்காத இடத்தையும் பெற்றுக் கொண்டது.

கடந்த தேர்தல்களிலும் அமோக ஆதரவினைப் பெற்று முன்னணியில் இருந்தபோதும், ஏனைய கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டின் மூலம், ஏனைய கட்சிகள் ஆட்சியை அமைத்துக் கொண்டமையினால், மக்கள் கட்சியால் "தனித்து நின்று" ஆட்சியை அமைத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் இவ்வருடத் தேர்தலின் போது மக்கள்கட்சி மக்களின் அமோக ஆதரவினைப் பெற்று, தனியாக ஆட்சியமைக்கும் அளவுக்கு வெற்றியீட்டியுள்ளது.

அக்கட்சியின் "கலப்பைச்" சின்னத்தினால் கவரப்பட்ட விவசாயிகளும், அதன் கொள்கையினால் கவரப்பட்ட "பாட்டாளி" வர்க்கத்தினரும், ஏனைய கட்சி உறுப்பினர்கள், தொண்டர்களும், கட்சியின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டு அக்கட்சியை முன்னணி நிலைக்கு கொண்டு வந்தனர்.

காலங்காலமாக நகர்ப்புற அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்திவந்த ஆட்சியாளர்கள், மக்கள் கட்சி ஆதரவாளர்களின் தொடர்ச்சியான போராட்டங்களாலும், கண்டன எதிர்ப்பு பிரசாரங்

களினாலும், இன்று கிராமிய அபிவிருத்தியில் கூடிய அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை வகுத்து, அதை நடைமுறைப் படுத்தியதன் காரணமாக, பல கிராமங்கள் வளர்ச்சி அடைந்து கிராமங்களின் பொருளாதாரமும் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. அக்கிராமங்களில் ஒன்றுதான் முசலி.

இக்கிராமத்தை இருப்பிடமாகக் கொண்டவர்தான் கைலை நாதர். கிராமத்தின் முன்னேற்றத்துக்காக பல்வேறு கஸ்டங்களிலும், பெரும்பங்கை ஏற்றுக்கொண்டவர் கையிலைநாதர். "**இக்கிராம மக்களின் சிரிப்பில்**" கைலைநாதருக்கும் பெரும் பங்குண்டு.

நீண்ட காலமாக வெட்டித் திருத்தப்படாதிருந்த குளங்கள், வாய்க்கால்கள் இன்று வெட்டித் திருத்தப்பட்டு, தரிசுநிலங்களாக இருந்த நிலங்கள் விளைநிலங்களாக மாறியும், கிராமத்துக்குள் குன்றும் குழியும் கரடுமுரடானதாகவும், இருந்த வீதிகள் செப்பனிடப்பட்டும் காணப்படுகிறது. கிராமத்தில் 8ம் வகுப்புவரை இருந்த "நாமகள்" பாடசாலை, க.பொ.த உயர்தர வகுப்பு வரை உயர்ந்து, "நாமகள் மகா வித்தியாலயமாக" மாறியுள்ளது. கிராமத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்துக்கு கால்நடையாக நடந்து சென்றவர்களின் நிலைமாறி, பிரதான தார்வீதி அமைக்கப்பட்டு பஸ் போக்கு வரத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், அக்கிராமத்துக்கு "**சந்தை**" ஒன்றும் அமைக்கப்பட்டு அப்பகுதி விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை அச்சந்தையில் விற்பனை செய்து, தமக்குத் தேவையான ஏனைய பொருட்களை வாங்கிச் செல்வதையும் காணும் போது கைலைநாதர் மிகவும் சந்தோசப்படுவார்.

கைலைநாதர், மக்கள் கட்சியின் பிரதான உறுப்பினர்களில் ஒருவர் என்பதுடன், கட்சியின் பிரதான தொண்டருமாவார். மக்கள் கட்சிக்காக எதையும் செய்யக்கூடிய ஒரு தியாகி. கட்சியின் கொள்கைகளில் ஊறித்திளைத்திருந்த கைலைநாதருக்கு கட்சியில் மிகுந்த செல்வாக்குண்டு.

அவர் பிறந்த முசலிக் கிராமத்துக்கு அரசினால் ஓர் தபால் நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டபோது, அக்கிராமத்தில் படித்தசிலருக்கு தபால் நிலையத்தில் வேலை வாங்கிக் கொடுப்பதற்கு கைலைநாதர் சிபார்சு செய்து, இன்றும் அவர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதைத்தொடர்ந்து பல்வேறுபட்ட விடயங்களுக்கு அரசின் ஆதரவினைப் பெறும் நோக்கில், பலர் அவரிடம் வந்து, கட்சியினூடாக சில காரியங்களை நிறைவேற்றுவதற்கு சிபார்சுகள் கேட்டபோது, அவற்றை செய்து கொடுக்க மறுத்துவிட்டார் கைலைநாதர். பலர் சிலஇலட்சம் ரூபாய்களை இனாமாகத் தருவதாக கூறிய போதும், அவற்றை வாங்காது பேசிக்கலைத்துவிட்டார் கைலைநாதர். அதனால் பலர் இவருக்கு "**ஒற்றைறோட்டு**" (ஒற்றைப் போக்கு) என்ற பெயரையும் வைத்துவிட்டனர்.

ஒரு சதம் லஞ்சம் வாங்கமாட்டார். நீதிக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமான எச்செயலையும் அவர் செய்யமாட்டார். இது அவரின் தனியான போக்கு, இத்தனைக்கும் மத்தியில், அவர் ஓர் பரம ஏழை. மனைவியும் திருமண வயதில் இரு பிள்ளைகளுமே, அவரின் சொத்தாகும். விவசாயத் திணைக்களத்தில் காவலாளியாகக் கடமை புரிந்து, தற்போது ஓய்வு நிலையில் உள்ள இவருக்கு, அந்த ஓய்வூதியத்திலிருந்து கிடைக்கும் சொற்ப தொகை மட்டுமே,

வருமானமாக இருந்தது. அதை மட்டும் வைத்து மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் தனது வாழ்க்கையை நடாத்தி வந்தார் கைலைநாதர்.

இவருடன் சேர்ந்த மக்கள் கட்சியின் தொண்டர்கள், இவரைச் சந்திப்பதற்காக இவர் வீட்டுக்கு அடிக்கடி வரும் வேளைகளில், அவர் மனைவி செண்பகம் அவர்களுக்கு தேநீர் கொடுப்பதற்கே கஸ்டப்பட்ட சந்தர்ப்பங்களை இவர் அடிக்கடி கண்டிருந்த போதும், எதுவும் செய்ய முடியாது மௌனமாக இருப்பார். இவரின் நிலை இவருடன் நெருங்கிப் பழகும், சில தொண்டர்களுக்கு மட்டுமே நன்றாகத் தெரியும்.

சில மாதங்களிற்கு முன்னர் கட்சியின் ஆண்டுவிழாக் கூட்டம் வெகுசிறப்பாக நடைபெற்றது. காணும் இடமெல்லாம் மக்கள் கட்சியின் "கலப்பை சின்னத்தின் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சில தினங்களாக அலங்கார வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் தானும் ஒருவனாக கலந்து கொண்ட கைலைநாதர், எதையோ எண்ணிச்" சிந்தித்துக்கொண்டிருந்தார்?. அடுத்தநாள் கட்சிக்கூட்டம் கட்சியின் பிரதான உறுப்பினர்கள் சமுகமளிக்கும் கூட்டம். கூட்டத்துக்கு புறப்படுவதற்கு தயாரான கைலைநாதர், தனது வேட்டியை கட்டுவதற்கு மிகவும் கஸ்டப்பட்டார். வேட்டியின் முகத்தலைப்பில் ஒரு பெரிய கிழியல். அது தைக்கப்பட்டிருந்தது. அந்த தையலை மறைப்பதற்கு வேட்டியை திருப்பி திருப்பிக் கட்டிய போதும், அந்தத் தையலை மறைத்துக்கட்ட முடியவில்லை. அது ஒன்றுதான் அவரிடம் இருந்த வேட்டியாகும். வேட்டியைக் கட்டி, அதற்குமேல் கட்சியால் கொடுக்கப்பட்ட சால்வையை நீளமாக தூங்கவிட்டு, ஆண்டுவிழா கூட்டத்தில் சமுகமளித்தார் கைலைநாதர்.

கட்சிக்கு விசுவாசமாக உழைத்துக் கொண்டிருக்கும் தொண்டர்களில் பலர் ஏழைகளாக இருந்தபோதும், அதில் "பரம ஏழையாக" இருந்தார் கைலைநாதர். கட்சியின் ஆண்டுவிழா கூட்டத்தில் முக்கியமான ஓர் தீர்மானம் நிறைவேற்றுவதற்காக முன்மொழியப்பட்டது. வருமானம் குறைந்த கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்சித்தொண்டர்களின் குடும்பத்துக்கு, மாதாந்தம் ஓர் குறிப்பிட்ட தொகையை "உதவு தொகையாக வழங்கவேண்டும்" என்பதுதான் அத்தீர்மானம். எல்லோரும் பலத்த கரகோஷம் செய்து வரவேற்ற போது, அமைதியாக அதைச் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த கைலைநாதர் எழுந்து நின்று, அதை வன்மையாகக் கண்டித்தார்.

கட்சித் தொண்டர்களின் குடும்ப நிலை ஒரு புறமாக இருக்கட்டும். ஆனால் உதவுதொகையை அவர்களின் குடும்பத்துக்கு வழங்கி கட்சிக்கு ஆதரவு தேடுவது? எவ்வகையிலும் பொருத்தமில்லை. இது கட்சித்தொண்டர்களை விலைகொடுத்து வாங்குவதற்கு ஒப்பான செயலாகும். இதன் மூலம் "நீங்கள் அவர்களை அவமானப்படுத்துகிறீர்கள்" என்று கடுமையான தொனியில் பேசி அத்தீர்மானத்தை முற்றாக நிராகரித்துவிட்டார் கைலைநாதர்.

கூட்டம் முடிய இரவு 8.00 மணியாகி விட்டது. அத்துடன் குளிர் காற்றுடன் கூடிய, பலத்தமழையும் கொட்டத்தொடங்கிவிட்டது. குளிரால் விறைத்துவிட்ட கைலைநாதரின் உடல் வெடவெட ஆடத்தொடங்கியது. நடுங்கிக்கொண்டிருந்த கைலைநாதருக்கு கடுமையான காய்ச்சலும் ஏற்பட்டுவிட்டது. அவரின் முதுமையும், உடல் தளர்ச்சியும் இதற்கு ஒரு காரணமாக அமைந்து விட்டது.

இளம் வயதுடைய அவரின் நண்பன் சிவநேசன், அவரைத் தனது காரில் ஏற்றிக்கொண்டார். குளிரைத்தாங்க முடியாது அவர் கஸ்டப்பட்டபோது, அருகில் கட்டப்பட்டிருந்த கட்சிக்கொடி ஒன்றை அறுத்து எடுத்து, அவர் உடம்பை அக்கொடியினால் இறுகப்போர்த்தி, வீட்டுக்கு கூட்டிச்சென்றார் சிவநேசன். குளிரைத் தாங்கிக் கொள்ளமுடியாது அவர் மேலும் கஸ்டப்பட்டபோது, இடைவழியில் இன்னொரு கட்சிக்கொடியையும் அறுத்தெடுத்து, அக்கொடியினால் அவரைப்போர்த்துக்கொண்டு சென்று அவரை வீட்டில் இறக்கிவிட்டார் சிவநேசன். இடையில் கதைத்துக்கொண்டு செல்லும்போது இந்தக் கட்சிக் கொடிகளுக்காக செலவிடும் பணத்தைக் கொண்டு, பல போர்வைகளை வாங்கி ஏழை மக்களுக்கு கொடுத்தால்! இந்தக் குளிருக்கு அவர்கள் போர்த்துக்கொண்டு நின்மதியாகப் படுப்பார்கள். "அது எவ்வளவு புண்ணியமாக இருக்கும்" என்று சிவநேசன் கூறிய போது, கைலைநாதர் விரக்தியுடன் சிவநேசனைப் பார்த்து முறுவலித்தார். ஏதே ஒரு குற்ற உணர்வு, அவர்மனதை உறுத்தியது.

கடந்த தேர்தலில், மக்கள் கட்சி அமோக ஆதரவினைப் பெற்று ஆட்சியமைக்கும் முன்னர், தேர்தல் கூட்டங்கள் எல்லா இடங்களிலும் தொடர்ந்து நடாத்தப்பட்டது. பிரசாரமேடைகள் "பீரங்கிக் குண்டுகள்" போல முழங்கியது. கட்சிக்கொடிகள் நாலாபுறமும் பறக்கவிடப்பட்டிருந்தன. ஏனைய கட்சிகள், மக்கள் கட்சியின் மீது பொறாமைப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களின் கட்சிகளுக்கு மக்களின் ஆதரவு குறைவாக இருந்தது. இரவு கூட்டம் முடித்துவிட்டு, அதிகாலை வந்து பார்க்கும்போது சில கட்சிக்கொடிகள் அறுக்கப்பட்டு காணமல் போயிருக்கும். இது வழமையான நடவடிக்கைகள். அது எதிர்கட்சியினரின் வேலை? என்று உணர்ந்து கொண்ட மக்கள் கட்சியின் உறுப்பினர்கள், மனதுக்குள் ஆத்திரப்படுவார்கள். யார் இக்கொடிகளை அறுத்தவர்கள்? என்பதை

எண்ணிக்கொண்டு எதையும் செய்ய முடியாமல் அமைதியாக இருப்பார்கள்.

கட்சித்தொண்டர் தணிகாசலத்துக்கு, ஒரே கொடிப்பைத்தியம். அன்றைய கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து வெல்வெற் துணியினால் 10அடி நீளமும் 06 அடி அகலத்திலும் கலப்பை சின்னத்துடன் "மக்கள் கட்சி" என்று பெயர் பொறித்த ஓர் கொடியை சந்தியில் கட்டியிருந்தார். அதற்கான முழுச் செலவையும் தானே ஏற்றிருந்தார். ஆனால் அடுத்த நாள் காலை வந்து பார்த்தபோது அக்கொடியை காணவில்லை. தணிகாசலத்துக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. பற்களை நெறுமி கடித்துக்கொண்டு சென்றுவிட்டார்

ஆண்டுவிழாக் கூட்டத்துக்கு சென்று, மழையில் நனைந்து குளிரால் நடுங்கிக்கொண்டு, வீடு சேர்ந்த கைலைநாதர், படுத்த படுக்கையாகிவிட்டார். எழும்பி நடக்கமுடியாத நோயாளியாகி விட்டார். கையிலைநாதரின் உறவினரில் ஒருவனான ஓர் இளைஞன் அவரை அடிக்கடி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும், அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படவில்லை. அப்பழுக்கற்ற விசுவாசியான மக்கள் கட்சியின் உண்மை நிறைந்த **"புனிதத்தொண்டன்"** கைலைநாதரின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக அவர் உடலை விட்டுப்பிரிந்து செல்கிறது என்பதைப் பலரும் உணர்ந்து கொண்டனர்.

சில தினங்களில் கைலைநாதரின் உயிர் அவர் உடலை விட்டு பிரிந்ததுவிட்டது. அவரின் இறுதி மரணஊர்வலம் இந்தக் கிராமத்தில் இதுவரை கண்டிராத மாபெரும் ஊர்வலமாக

அமைந்திருந்தது. கைலைநாதரின் பிரிவால் முசலிக் கிராமமே சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

எல்லா வீதிகளிலும் கலப்பைச்சின்னத்துடன் மக்கள் கட்சியின் கொடிகள் பறந்து கொண்டிருந்தது. திறந்த வாகனம் ஒன்றில் கைலைநாதரின் உடல் வளர்த்தப்பட்டு, கலப்பைச் சின்னத்தைக் கொண்ட ஓர் பெரிய கட்சிக் கொடியினால் போர்த்தி, மலர் மாலைகள் சாற்றி, அவரின் திறந்தமுகத்துடன், பல ஊர்திகள் பவனிவர, கௌரவத்துடன் அவரின் புனித உடல் எடுத்துச் செல்லப்பட்டது. இறுதி அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய பிரமுகர்கள் பலரும் கட்சித்தொண்டர்கள் பலரும் உரையாற்றும் போது, அவரின் புனிதமான கட்சித்தொண்டுகளை எடுத்துரைத்தும் புகழ்ந்தும் பேசினர். பலரின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது அதன்பின் அவரின் புகழுடல் தீயுடன் எரிந்து சாம்பலாகி காற்றோடு கலந்துவிட்டது.

தொடர்ந்து பல தினங்களாக கைலைநாதரின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்குடன் கட்சிப்பிரமுகர்களும், கட்சித்தொண்டர்களும். அவரின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தனர். பின் படிப்படியாக அவர்களின் அக்கறை குறைந்துவிட்டது.

ஆண்டுவிழா முடிவின் போது, அவரை சுகயீனத்துடன் தனது காரில் ஏற்றிச்சென்ற சிவநேசனும், பல்லாயிரம் ரூபா செலவில் வெல்வெற் துணியினால் கட்சிக்கு கொடி அமைத்துக்கொடுத்த தணிகாசலமும், இருவருமாகச் சேர்ந்து சிவநேசனின் காரில் கைலைநாதர் வீட்டுக்குச் சென்றனர். அவரின் குடும்பத்தின் வறுமை நிலையை இருவரும் நன்றாக அறிந்தவர்கள். அரிசி, மாவு, பருப்பு, கொஞ்சம் மரக்கறி வகைகளை வாங்கிக்கொண்டு, அவரின் வீட்டுக்கு

சென்ற போது, அவரின் மனைவியும் அவர் மகளும், அப் பொருட்களைக் கவலையுடனும், அதே சமயத்தில் நன்றியுடனும் வாங்கிக்கொண்டனர். அவர்களால் கொடுக்கப்பட்ட தேநீரை வாங்கிக்குடித்துக் கொண்டே அவரின் பெருமைகளையும் சிறப்புக்களையும் குடும்பத்தினருடன் அசைமீட்டுக்கொண்டனர்.

சிறிது நேரத்தில் சிறுநீர் கழிப்பதற்காக வீட்டின் பின்புறம் சென்ற தணிகாசலம், பின் கோடியில் காற்றில் காய்ந்து கொண்டிருந்த துணி ஒன்றை உற்றுப்பார்த்தார். அவரால் நம்ப முடியவில்லை...! அது அவரால் பல ஆயிரம் ரூபா செலவில் தைத்துக் கொடுக்கப்பட்ட **வெல்வெற் துணியினாலான கலப்பைச் சின்னம் கொண்ட கட்சிக்கொடி.**

திரும்பி வந்து கொண்டிருந்த தணிகாசலத்தை, கைலை நாதரின் மனைவி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். **செம்பகம் அம்மா இந்த கொடி இங்கே எப்படி?** என்று தணிகாசலம் கேட்டபோது, செண்பகத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென வடிந்து கொண்டிருந்தது. தணிகாசலமும் சிவநேசனும் செண்பகத்தை உற்றுப்பார்த்தனர். செண்பகத்தால் எதுவும் பேச முடியவில்லை?

கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்த போது, அவள் உதடுகள்மெல்ல அசையத்தொடங்கியது. தம்பி சிவநேசன், குளிரால் நடுங்கிக்கொண்டிருந்த எனது கணவரை நீங்கள் காரில் வீட்டுக்கு ஏற்றிவரும் போது, எனது கணவரின் குளிரைத் தாங்கியது, உங்களால் போர்த்தி வரப்பட்ட உங்களின் கட்சிக்கொடிதான்.கடந்த சில நாட்களாக இங்கு நிலவிய கடுங்குளிரில் அவர் அவஸ்தைப் பட்டபோதும், உயிருடன் இருக்கும் வரை, அவரின் குளிரைத்

தாங்கியது காய்ந்துகொண்டிருக்கும் இந்த வெல்வெற் துணியிலான கட்சிக் கொடிதான், மேலும் தற்போது அவரின் சுயகௌரவத்தைக் காப்பாற்றியதும், ஊர்வலமாக எடுத்துச்செல்லும்போது அவரின் உடலைப் போர்த்திச் சென்ற கட்சிக்கொடிதான். அதுமட்டுமல்ல தம்பி **எங்கள் மானத்தையும், காப்பாற்றியது உங்கள் கட்சிக் கொடிதான்,** என்று கூறி தான் கட்டியிருந்த சேலையை, வெட்கத்தை விட்டு முழங்காலளவில் தூக்கிக்காட்டிய போது! சிவநேசன் கண்களும் தணிகாசலம் கண்களும் கலங்கத் தொடங்கியது. அங்கே **செண்பகத்தின் உள்பாவாடை கட்சிக்கொடியினால் தைக்கப் பட்டிருந்தது.** கைலைநாதர் கட்டுவதற்கு பாவித்த பழைய சாரமும் கட்சிக்கொடியின் துணியினால் தைக்கப்பட்டு தாழ்வாரத்தில் காய்ந்து கொண்டிருந்தது.

உணவுக்கு மட்டுமல்ல, மாற்றிக்கட்ட உடுதுணியும் இல்லாமல் வாழ்ந்துவந்த கட்சியின் புனிதமான தொண்டனும் விசுவாசியுமான, கைலைநாதரை எண்ணும் போது..! தங்களைவிட அவர் இமயமாக உயர்ந்து நிற்பதை எண்ணி பெருமையடைகின்றனர் இருவரும்.

ஒருவரோடு ஒருவர் பேசாமல் மௌனமாக காரில் வந்து கொண்டிருக்கும் போது மௌனத்தைக் கலைப்பதற்காக சிவநேசன் தனது காரில் பொருத்தப்பட்டிருந்த வானொலியைத் திருப்பினான். "**விவசாயி**" என்ற சினிமாப் படத்தின் "விவசாயி" "விவசாயி" என்ற பாடல் வானொலியில் ஒலிக்கத் தொடங்கியது. கட்சிக் கூட்டங்களின் போது கலப்பைச் சின்னத்தின் கட்சிக் கொடிகள் பறந்தபோதும், இப்பாடலும் ஒலிபெருக்கியில் அடிக்கடி ஒலிக்கும். அதேபாடலின் இறுதிவரிகள் சிவநேசனையும்,தணிகாசலத்தையும்

சிந்திக்க வைத்தது. பாடலின் இறுதிவரிகள் கிழ்வருமாறு ஒலித்துக் கொண்டிருந்தது.

பறந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி
பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக்கொடி - அது
பஞ்சம் இல்லையென்னும் அன்னக்கொடி;

எமது நாட்டில் பஞ்சம் இல்லை? என்று சொல்லக்கூடிய "அன்னக்கொடி" பறக்குமா? என்ற சிந்தனை மனதில் எண்ணிக் கொண்டு, இருவரும் அமைதியாக பயணித்துக் கொண்டிருந்தனர். **கைலைநாதனின் நினைவுகள் அவர்களின் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது.**

எழுத்தாளன் சிந்தனை
1998 - வைகாசி

10

சிரிக்க வைக்கிறான்... ஜோக்கர்...!

மணலூர் ஓர் அழகான கிராமம், இயற்கை வளங்கள் சூழ்ந்திருந்த அக் கிராமத்து மக்கள், அந்த வளங்களை முழுமையாக பாவித்து ஓரளவு பொரு ளாதார வசதியுடனும், கல்வி அறிவுடனும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டு இருந்தனர். கிராமத்திலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் "அழகுநகர்" பட்டினம் இருந்தது. மணலூரில் நிறைவேற்ற முடியாத தேவைகளை நிறைவேற்றவும், பிள்ளைகளின் உயர் கல்விக்காகவும், மணலூர் கிராமமக்கள் அழகுநகர் பட்டணத்துடன் தொடர்புகளை வைத்து இருந்தனர். படித்த இளைஞர்கள் தமது தொழிலின் நிமித்தமும் இன்னும் வசதியான சிலர், சிறந்த வைத்திய வசதிகளைப் பெறும் நோக்குடனும் அழகு நகர் பட்டினத்துடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தனர்.

மணலூர் கிராமத்தில் பிறந்து வளர்ந்து, அங்கு வசித்துக் கொண்டிருப்பவன் தான் மயூரன். நிரம்பப் படித்தவன் சாதாரண குடும்பமொன்றில் பிறந்தவன். நகைச்சுவையாளன், தனது நண்பர்களுடன் ஏதாவது ஒரு நகைச்சுவையைச் சொல்லி "எந்நேரமும்"

சிரித்துக் கொண்டிருப்பான். சிரிப்பினூடாக பல தத்துவங்களையும் வெளிப்படுத்துவான். அவனது நண்பர்கள் தமது ஓய்வு நேரங்களை, இவனுடனேயே கழித்து மகிழ்வார்கள். திருமணம் முடித்து இரு குழந்தைகளுக்கு தந்தையான மயூரன், தன் குடும்பத்துடன் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தான். இவையெல்லாம் கடந்த நான்கு வருடங்களுக்கு முந்தியவை. இப்போது மயூரன் சிரிப்பதில்லை?, நண்பர்களுடன் கலகலப்பாகப் பேசுவதில்லை?, நகைச் சுவைகளும், தத்துவக்கதைகளும், கூறுவதில்லை. மற்றவர்கள் சிரித்தாலும், அந்தச் சிரிப்பில் கலந்து கொள்வதில்லை. எந்நேரமும், சோகத்துடனேயே காணப்படுவான். இதற்கெல்லாம் காரணம் **அவன் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத சோகமான ஒரு சம்பவம்தான்.**

ஒருநாள் இரவு அவன் மனைவிக்கும், இருபிள்ளைகளுக்கும், கடுமையான காய்ச்சல், காய்ச்சலின் வெப்பம் தாங்கமுடியாது, இரவு இரவாக துடித்தனர். இந்த இரவில் எதுவுமே செய்ய முடியாது..! நாளை விடிந்த பின் வைத்தியரிடம் சென்று உங்களுக்கு மருந்து வாங்கலாம், என்று கூறிச் சமாளித்த மயூரன், இரவு முழுவதும் உறங்காது கண்விழித்து, மனைவி பிள்ளைகளைக் கவனித்தான். அதிகாலை எழுந்து "உங்கள் அனைவரையும் அழகு நகர்பட்டினத்துக்கு அழைத்துச்செல்வது கஷ்டம்?" "நானே போய் வருத்தத்தைக்கூறி மருந்து வாங்கி வருகிறேன்" என்று கூறிவிட்டு அருகில் இருந்த கடையில் பனிஸ், பிஸ்கட் வாங்கி, தானே தேநீர் வைத்துக் கொடுத்துவிட்டு, தனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்றான் மயூரன்.

வைத்தியரிடம் சென்று நிலைமைகளைக் கூறியபோது, அவர் நன்றாக விசாரித்துவிட்டு, பயப்படத்தேவையில்லை? இது சாதாரண விஷக்காய்ச்சல்தான், இது இப்போது பரவலாக காணப்படுகிறது. இந்த மருந்தைக் கொடுங்கள் என்று கூறி, ஒருசில மருந்தையும்

கொடுத்து, இந்த மருந்துக்கு சரிவராது விட்டால் பிற்பகல் அழைத்து வாருங்கள்? என்று கூறினார். மருந்துகளை வாங்கிக் கொண்ட மயூரன் தனது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தான் வீட்டை நோக்கி.

வீடு நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த மயூரன் வீட்டைச்சுற்றி, பலர் ஒன்று கூடி நின்று கொண்டிருப்பதைக் கண்டு அதிசயத்துடனும் வியப்புடனும் பார்த்துக்கொண்டு, வீட்டின் அருகில் வந்துவிட்டான். பலர் ஓலமிட்டு அழுவதைக் கண்டான். என்ன நடந்தது? என்பதை அவனால் அனுமானிக்கமுடியவில்லை?.

தென்னை ஓலையால் வேயப்பட்டிருந்த அவனின் வீடு முற்றாக எரிந்து சாம்பலாகி இருந்தது. வீட்டு மரங்கள் வெடித்துவெடித்து இப்போதும், எரிந்துகொண்டிருந்தது. நடுவீட்டுக்குள் அவன் மனைவியும் இருகுழந்தைகளும் முற்றாக எரிந்துகருகிய நிலையில் காணப்பட்டனர். ஐயோ... ஐயோ... ஆண்டவா... ஆண்டவா... என்று பெருங்குரலில் கத்திய மயூரன், சிறிது நேரத்தில் மயக்க மடைந்து வீழ்ந்துவிட்டான். அவன் வைத்தியரிடம் செல்லும்போது, மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தேனீர்வைத்துக்கொடுப்பதற்காக அடுக்களைக்குள் மூட்டிய தீயை அணைத்துவிட மறந்ததால், அதிலிருந்து தீ பரவி, வீட்டையும் அவன் குடும்பத்தையும் அழித்து விட்டிருந்தது. மயக்கமடைந்து நிலத்தில் வீழ்ந்துவிட்ட மயூரன் கைப்பைக்குள், தாய்க்கும் பிள்ளைகளுக்கும் வாங்கிவந்த மருந்துகள் தேடுவாரற்று கிடந்தன.

இச்சம்பவம், இன்னும் அவன் மனதைவிட்டு அகலவில்லை. இச்சம்பவத்தை அவன் மனதில் எண்ணும் வேளைகளில், இப்போதும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடியும். அதில் பங்குகொள்ள யாருமே அவனோடு இருக்கமாட்டார்கள்?. மற்றவர்களை அடிக்கடி

சிரிக்கச்செய்யும் மயூரனை, இன்று எவருமே சிரிக்கச் செய்வது கஷ்மாக உள்ளது. அவன் போக்கிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. உணவைக்கூட ஒழுங்காக உண்ணமாட்டான். எந்நேரமும் எதையாவது சிந்தித்துக் கொண்டிருப்பான்.

சிலநாள் வீட்டில் இருப்பான். பலநாள் வீட்டில் இருக்க மாட்டான். அவன் எங்கு செல்கிறான்? என்ன வேலை செய்கிறான்? கிராமத்துக்கு எப்போது வருவான்? என்பது போன்ற விடயங்கள் எவருக்குமே தெரியாது. அவனைக் காணும் நண்பர்கள், மயூரன் எப்படி இருக்கிறாய்? என்று கேட்டால் எதுவும் போசாமல் முறுவலித்து விட்டு சென்றுவிடுவான். அவனுக்கு யாரைப்பற்றிய கவலையும் இல்லை. அவன் கவலைப்படுவதற்கு யார் இருக்கிறார்கள? வயது முதிர்ந்த அவனின் தாய் தந்தையரும், அவன் மனைவியின் தாய் தந்தையரும் எப்போதோ இறந்துவிட்டார்கள். இப்போது அவன் ஒரு தனிமரம். அதுவும் அவன் ஓர் பட்டமரம்.

கருவறையில் இருந்தவர்களையும், கல்லறையில் இருந்தவர்களையும் தவிர, மற்றும் அனைவரையும் சிரிக்கவைத்த மயூரன், இன்று மௌனமாகி விட்டான். அவன் மனநிலை பாதிக்கப்பட்டு விட்டதாக நண்பர்கள் பலரும் கூறினார்கள். சிலர் பரிதாபமாக அவனைப் பார்த்தனர், பலர் பைத்தியக்காரனாக அவனைப் பார்த்தனர். அவனின் நெருங்கிய நணபர்களில் ஒருவன், அழகுநகர் பட்டினத்திலுள்ள, உளவியல் மனநோய் வைத்தியர் ஒருவரிடம் அவனை அழைத்துச் சென்றான். வைத்திய நிபுணரால் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்துக்கும் தெளிவான பதிலைக் கூறினான் மயூரன்.

உளவியல் வைத்தியநிபுணர் அரவிந்தன், மயூரனின் நண்பரிடம் கூறினார் "இவருக்கு எவ்விதமான மனநோயும் இல்லை"

இவரின் வாழ்க்கையை ஆராயும் போது, இவர் நன்றாக சிரித்து வாழ்ந்தவர். இப்போது சிரிப்பதை நிறுத்திவிட்டார். இவர் நன்றாகச் சிரிக்கவேண்டும். இதை நடைமுறைப்படுத்தினால் எல்லாம் சரியாகிவிடும் என்று கூறினார். மேலும் அடுத்த கிழமை கூட்டிக் கொண்டு வாருங்கள், என்று கூறிவிட்டு இருக்கையால் எழுந்துவிட்டார்.

அம்மாதம் அழகுநகர் பட்டினத்துக்கு ஒரு "சேர்க்கஸ்" குழு வந்திருந்தது. அக்குழுவினரின் சேர்க்கஸ் விளையாட்டுக்கள் மிகவும் அபூர்வமாக இருந்தது. இதுவரை கண்டிராத அற்புத நிகழ்ச்சிகளை, அழகுநகர் கண்டு கழித்து மகிழ்ந்தது. ஒரு நிகழ்ச்சி முடிந்து அடுத்த நிகழ்ச்சி ஆரம்பிக்கும் இடைவெளி நேரத்தில், ஒரு ஜோக்கர் (நகைச் சுவையாளன்) தோன்றி, தனது அபிநயத்தின் மூலமும் சைகைகளின் மூலமும் பல்வேறு நிகழ்ச்சிகளைச் செய்து காட்டுவான். சேர்க்கஸ் நிகழ்ச்சிகளை விட ஜோக்கரின் நிகழ்ச்சிகளே அனைவரையும் கவர்ந்தது. எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ந்தனர். அவ்வளவு தூரம் ஜோக்கரின் நகைச்சுவைகள் இடம்பெற்றது. அடுத்த இடைவெளியில் ஜோக்கர் எப்போது வருவான்? என பார்வையாளர் ஆவலுடன் எதிர்பார்ப்பார்!

ஜோக்கரின் நகைச்சுவைகளைப் பார்த்து சிரிப்பதற்கு, தினமும் தனியான கூட்டம் வந்துபோய்க்கொண்டிருந்தது. இதை உளவியல் நிபுணர் அரவிந்தனும் அறிந்திருந்தார். அந்த நிகழ்ச்சியையும், சர்க்கஸ் அற்புதங்களையும் பார்த்து ரசிக்கும் நோக்குடன், அன்றைய தினம் அரவிந்தனும் அங்கு சென்றிருந்தார்.

சேர்க்கஸ் ஆரம்பிக்கும் முன்னர் திடீரென ஜோக்கர் மேடையில் தோன்றினான். அவனின் தோற்றம் அலங்கார அமைப்பு சிரிப்பையே வரவழைத்தது. தொளதொள உடை, தலையில்குஞ்சம், ராஜகிரீடம் அணிந்து மேடையில் துள்ளிக்குதித்தபோது, அனைவரும் கைகொட்டிச் சிரித்தனர். தொடர்ந்து அவனின் அபிநயங்கள் சேர்க்கஸ்சின் ஊடே இடைக்கிடை தோன்றியது. வைத்திய நிபுணர் அரவிந்தனும் அவற்றைப் பார்த்துப் பார்த்து வயிறு குலுங்கச்சிரித்தார். அவனது ஒவ்வொரு அசைவுகளும் தொடர்ந்து சிரிப்பூட்டிக் கொண்டிருந்தது.

அடுத்தவாரம் வைத்தியநிபுணர் அரவிந்தனிடம், மயூரன் சென்றபோது, வைத்தியநிபுணர் அரவிந்தன் கூறினார், மயூரன் நீயும் ஒரு காலத்தில் பலரையும் சிரிக்கவைத்து மகிழ்ந்தவன்தான் என்பதை உன் வரலாற்றின் மூலம் நான் அறிந்துகொண்டேன்." அண்மையில் எமது பட்டிணத்தில் ஓர் சேர்க்கஸ் கம்பனி வந்து நிகழ்ச்சிகளை காண்பித்துக் கொண்டிருக்கின்றனர். ஒருநாளைக்கு கட்டாயம் நீ அங்கு சென்று சேர்க்கஸ் குழுவில், அந்த ஜோக்கர் காண்பிக்கும் நிகழ்ச்சிகளை கட்டாயம் பார்க்க வேண்டும்?. அதை நீ பார்த்தால் அன்றைக்கு மட்டுமல்ல பல நாளைக்கு "விழுந்துவிழுந்து சிரிப்பாய்" அதை ஒருமுறை நீ பார்க்கவேண்டும்?, கட்டாயமாகப் போய்ப் பார். அதன்பின் உனக்கு ஒரு வருத்தமும் இருக்காது. நீ பழைய மயூரனாக இருக்கலாம் என்று கூறினார் வைத்தியர் அரவிந்தன்.

இந்த உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களையும் விட, "மனிதனால் மட்டுமே சிரிக்க முடியும்" வேறு எந்த உயிரினத்தாலும் சிரிக்க முடியாது? அதனால் தான் மனிதனால் நீண்டகாலம் வாழ முடிகிறது. சிரிப்பு ஒரு மனிதனின் ஆயுளை நீடிக்கிறது. நீயும் மனம் விட்டு சிரிக்க வேண்டும்? அதற்காக நீ அங்கு போக வேண்டும்? அதைப்பார்க்க வேண்டும் என்று அழுத்தி கூறினார் அரவிந்தன்.

மயூரன், உளவியல் வைத்திய நிபுணர் அரவிந்தன் கூறியதை, மௌனமாகக் கேட்டானே தவிர, வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. என்ன பேசாமல் நிற்கிறாய்? என்று வைத்தியர் அரவிந்தனை சற்று கண்டிப்புடன் கேட்டபோது, **அவன் உதட்டிலிருந்து ஓர் வரட்டு சிரிப்பு மாத்திரம் வெளிப்பட்டது.** என்ன சொல்லுவது? என்று தெரியாது சங்கடப்பட்டான். பின் வாயைத் திறந்து மெல்லிய குரலில் கீழ்வருமாறு கூறினான்.

"சேர்... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். சேர்..! உங்கள் அனைவரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் "**அந்த ஜோக்கரே நான்தான் சேர்**... என்னால் மற்றவர்களைச் சிரிக்கவைக்க முடிகிறதே தவிர என்னால் மனம்விட்டு சிரிக்க முடியவில்லை சேர்" என்று விரக்தியுடன் மயூரன் கூறியபோது, வைத்திய நிபுணர் அரவிந்தன் எதுவுமே பேசமுடியாது சிலையாக நின்றுகொண்டிருந்தார்.

மயூரன் தான் "அந்த ஜோக்கர் என்பது, அழகுநகர் பட்டணத்துக்கோ அல்லது மணலூர் கிராமத்துக்கோ அவன் சக நண்பர்களுக்கோ தெரிந்திருக்க வில்லை. தொடர்ந்து காண்பிக்கப் பட்டுக் கொண்டிருக்கும் சேர்க்கஸ் நிகழ்ச்சிகளில், **இப்போதும் ஜோக்கர் (மணலூர் மயூரன்) கலந்து கொண்டு மற்றவர்களைச் சிரிக்க வைக்கிறான்.**

எழுத்தாளன் சிந்தனை
1979 ஆனி

11 பெற்ற பிள்ளைகளும்...! நட்ட பிள்ளைகளும்...!

யாழ் மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பகுதியின் "**கேவில், வண்ணாங்குளம்**" என்ற கிராமம் மிகவும் அமைதியான கிராமம். இளம் சிறார்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையும், இலகுவாகப் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாத நிலைகள் இருப்பினும், அப்பகுதியின் கிராம வளங்களைப் பாவித்து, அந்த வருமானங்களைப் பெற்று அப்பகுதி மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தனர். குடியிருப்புக்களும் சனத்தொகையும் குறைவாக இருந்தமையினால், அப்பரந்த பிரதேசங்களில் மக்கள் சுதந்திரமாக நடமாடி சிரித்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

அக் கிராமத்தில்தான் கந்தையாவும், அவர் மனைவி சிங்காரமும் தமது ஆறு பிள்ளைகளுடன் அமைதியாக வாழ்ந்தனர். மூத்தமகன் குமாருடனும், ஏனைய ஐந்து பெண் குழந்தைகளுடன் அமைதியாக வாழ்ந்து வந்த நிலையில், திடீரென சிங்காரத்தின் கணவன் கந்தையா, மரணத்தைத் தழுவிக்கொண்டது அக் குடும்பத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகிவிட்டது.

ஆறு பிள்ளைகளுடன் தனிமரமாகி விட்ட சிங்காரத்தை எல்லோரும் அன்புடன் "**சிங்காரக்கா**" என்றே அழைத்தனர்.

கணவனின் இழப்பினால், மனமுடைந்திருந்த சிங்காரக்காவையும், அவளின் பிள்ளைகளையும் மிகவும் அன்புடனும் பாசத்துடனும், அவளின் **தமையன் இரத்தினமும் அவர் மனைவி செல்லம்மாவும் கண்காணித்து வந்தனர்.** அவர்களுக்கு எக்குறையையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவளின் ஏனைய சகோதரர்கள் ஐயாக்குட்டி, சின்னத்துரை, முருகு, சுந்தரமக்கா, யோகக்கா ஆகியோர் சுன்னாகத்தில் திருமணங்கள் செய்து வாழ்ந்தபோதும், சிங்காரக்காவும், தமையன் இரத்தினமும் கேவில் வண்ணாங்குளத்திலேயே வாழ்ந்து வந்தனர். இன்னொரு பெண் சகோதரி சிவக்கொழுந்து, திருமணம் முடித்து மாமுனையில் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தாள்.

தனது பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும்?. அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும்?. எனது குடும்பத்துக்கென தனியான வருமானம் இல்லை? பிள்ளைகள் படிப்பதற்கு ஒழுங்கான பாடசாலைகள் இல்லை?. இக்கிராமத்தில் பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? என்ற கேள்விகள், சிங்காரக்காவின் மனதை தினம் தினம் வாட்டிக் கொண்டிருந்தது. இவற்றைச் சிந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழியும். எவருக்கும் தெரியாமல் துடைத்து விட்டு, அமைதியாக வானத்தை அண்ணாந்து பார்ப்பாள் சிங்காரக்கா. அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்?

சிங்காரக்காவின் பிள்ளைகளின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட, சுண்ணாகத்திலிருக்கும் ஏனைய சகோதரங்கள் "அக்கா நீ பிள்ளைகளுடன் சுண்ணாகத்திற்கு வா. இங்கே நல்ல பாடசாலைகள் உண்டு. நாங்கள் உன்னையும் பிள்ளைகளையும் நன்றாகக் கவனிப்போம். நீ யோசிக்கத் தேவையில்லை என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, தனது ஆண் குழந்தை குமாருடனும் ஏனைய பெண்குழந்தைகள் ஐவருடனும் வண்ணாங்குளத்தை விட்டு

சுண்ணாகத்தில் உறவினருடன் வசிக்கத் தொடங்கினாள் சிங்காரக்கா. அவளின் தங்கை யோகத்தின் கணவர் **சிவகுரு** நன்கு படித்தவர். மானிப்பாய் வைத்தியசாலையில் உத்தியோகம் பார்த்தார். அவரின் கண்காணிப்பின் கீழ் பிள்ளைகள் அனைவரும் நன்றாகப் படித்தனர். அவர்களின் பாடசாலைச் செலவுகளைச் சமாளிப்பதற்காகவும், குடும்பச் செலவுகளைக் கொண்டு நடாத்துவதற்காகவும், அருகிலுள்ள வெங்காயம், உருளைக்கிழங்கு தோட்டங்களில் புல்லுப் பிடுங்குதல், அவற்றைக் கிண்டி எடுத்தல், போன்ற கூலி வேலைகளில் ஈடுபட்டு, அதன் மூலம் கிடைத்த சிறு வருமானத்தில் கஷ்டத்தின் மத்தியிலும், சிறப்பாகக் குடும்பத்தை நடாத்திவந்தாள் சிங்காரக்கா. மகன் குமாருக்கு பளைக் கூட்டுறவுச்சங்கத்தில் ஓர் உத்தியோகம் கிடைத்துவிட்டது. பெண் பிள்ளைகளும் வயதிற்கு வந்துவிட்டனர்.

மூத்தமகள் வசந்தா தன் விருப்பத்தின் பேரில் உடுவிலைச் சேர்ந்த வாலிபன் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டாள். அடுத்த மகள் பிறேமா, தாயார் தமயன் உறவினர்களின் சம்மதத்துடன் கொடிகாமத்தைச் சேர்ந்த "**வில்லவன்**" என்ற வாலிபனைத் திருமணம் செய்து கொண்டாள்.

வில்லவன் கூட்டுறவுத் திணைக்களத்தில் ஓர் உயர் பதவி வகித்தான். சிறிது காலத்தில் மனைவி பிறேமாவுக்கும், கூட்டுறவுச் சங்கமொன்றில் கணக்காளர் பதவி ஒன்று கிடைத்தது. இருவரும் உத்தியோகம் பார்த்தமையினால் அக்குடும்பம் ஓரளவு வசதிகளுடன் வாழ்ந்தது. வில்லவனிடத்தில் சிங்காரக்கா மிகவும் பிரியமாக இருந்தாள். அவளை அத்தை, மாமி என்று அழைக்காமல் "**அம்மா**" என்றே அன்புடன் அழைத்தான் வில்லவன். அத்தையையும் மாமியையும் அந்தப் பெயரைச் சொல்லி அழைக்காமல் "அம்மா' என்றும் அழைக்கலாம் என்ற புதிய சொல்லை, அக்குடும்பத்துக்கு மட்டுமல்ல, குடும்பத்தின் அயலவர்களுக்கும் முதலில் அறிமுகப் படுத்தியவன் வில்லவன்தான்.

ஒருமுறை மனைவி பிறேமாவும் அவனும் விடுமுறையில் சுன்னாகம் சென்ற போது, சிங்காரக்கா அங்கு இருக்கவில்லை?. அவள் தோட்டங்களுக்குக் கூலி வேலைக்கு சென்று விட்டாள். அந்நிலை வில்லவன் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சிங்காரக்கா வேலையால் வந்தவுடன் "அம்மா" இன்றிலிருந்து நீங்கள் தோட்ட வேலைக்குப் போகக்கூடாது. என்று கடுமையாக உத்தரவிட்டான் வில்லவன். தம்பி வேலைக்கு நான் போகாவிட்டால்...! எனது பிள்ளைகளை நான் எப்படி வளர்ப்பது? என்று கேட்டபோது, ஏனைய மூன்று பிள்ளைகளையும் நீங்கள் கூட்டிக் கொண்டு கொடிகாமம் வந்து என்னுடன் இருக்கலாம். மகன் குமாரும் வேலை செய்கிறார் தானே?. மகள் பிறேமாவும் வேலை செய்கிறாள் தானே? நீங்கள் அங்கு வந்தால் பிறேமாக்கும் உதவியாக இருக்கும். உங்களை நான் விட்டுவிடுவேனா? என்று கேட்டுக் கொண்டமைக் கிணங்க ஏனைய பிள்ளைகள் மூவருடனும், கொடிகாமம் வந்து சேர்ந்தாள் சிங்காரக்கா. **அவளின் வாழ்க்கை கொடிகாமத்தில் தொடர்ந்தது.**

வில்லவனும் பிறேமாவும் வேலைக்குச் செல்லுமுன்னர், பிறேமாவுடன் சேர்ந்து சமையல் வேலையில் ஈடுபடுவது, அவர்கள் வேலைக்குச் சென்ற பின் வீட்டு வேலைகளைக் கவனிப்பது, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது, போன்ற அனைத்து வேலைகளையும் சிங்காரக்கா செய்து வந்தாள். ஏனைய மூன்று பிள்ளைகளான வனிதா, திலகவதி, நித்திலா ஆகியோரும், பிறேமாவின் குடும்பத்தின் நலனில் அக்கறை கொண்டு உதவி புரிந்து ஒத்துழைத்தனர். அவர்களும் வில்லவனிடத்தில் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர். கூட்டுக் குடும்பமாக அனைவரும் மிக சந்தோசமாக வாழ்ந்தனர்.

பிறேமாவின் கணவனுக்கு, அவனால் வாங்கப்பட்ட எட்டுப் பரப்பு காணி இருந்தது. அக்காணிக்குள் சிங்காரக்காவும் அவனும் சேர்ந்து 20 இற்கும் மேற்பட்ட தென்னம்பிள்ளைகளை வைத்து, தண்ணீர் ஊற்றி வளர்த்தனர். வேலையால் வந்தவுடன் தண்ணீர் ஊற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டு, வேலையால் வீட்டுக்கு வில்லவன் வரும்போது, அத்தனை தென்னம் பிள்ளைகளுக்கும் சிங்காரக்கா தண்ணீர் இறைத்திருப்பதைக் காணுவான். ஏனம்மா? நான் வந்து நீருற்றியிருப்பேன் தானே? என்று கேட்கும் போது ஓர் புன்முறுவல் மட்டும் அவள் உதட்டில் தவளும். கடைக்குச் செல்வது, தேவையான சாமான்களை வாங்குவது, பணம் செலவழிப்பது அனைத்துப் பொறுப்புக்களும் முழுமையாக சிங்காரக்காவைச் சேர்ந்ததாகவே இருந்தது. கணவனை இழந்த காலத்திலிருந்து தன் குடும்பத்துக்காகவும், தன் சார்ந்தவர்களுக்காகவும் தன்னை மெழுகுவர்த்தியாக உருக்கிக் கொண்டிருக்கும் சிங்காரக்கா மீது, வில்லவனுக்கு ஓர் தனியான மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது.

வில்லவன் ஓர் கலைஞன். ஓர் பல்துறை எழுத்தாளன். அவனின் கலை உணர்வுகளை நன்கு மதித்து வந்த அவன் நண்பன் ஒருவன், இந்தியா சென்று வந்தபோது, ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியிலான, ஓர் அழகான பளிங்குச் சிலையிலான "தாஜ்மகால்" ஓவியச் சிற்பம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்திருந்தான். அதன் கலை அழகை வில்லவன் எந்நேரமும் பார்த்து ரசித்து மகிழ்வான். பலருக்கு காட்டியும் பெருமைப்படுவான்.

அன்றைய தினம் அவன் வேலையால் வந்து தன் அறைக்குள் சென்ற போது "தாஜ்மகாலை" அங்கு காணவில்லை? உற்றுப் பார்த்த போது சுக்கல் சுக்கலாக உடைந்த அந்தச் சிற்பம், கூட்டிக் குவியலாக அறைமூலையில் ஒதுக்கப்பட்டிருந்ததைக் கண்டான்.

கடுமையான ஆத்திரத்துடன் தலையை நிமிர்த்திய போது, அறைவாசலில் சிங்காரக்கா நடுங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டான். என்னம்மா! என்று கேட்ட போது, தம்பி... உங்கள் அறையை நான் கூட்டும் போது எனது கைதவறி அந்தத் தாஜ்மகால் சிலை வீழ்ந்து உடைந்து விட்டது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என்னைப் பேசி விடாதீர்கள் என்று தலையைக் குனிந்தவாறு தழுதழுத்த குரலில் சிங்காரக்கா சொன்ன போது, வில்லவனால் பதில் பேச முடியவில்லை. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியுடன் இருந்து விட்டான். இச்சம்பவம் நடந்து இரு வருடங்களின் பின் தான், அந்தப் பளிங்குச் சிலை "சிங்காரக்காவால் உடைக்கப்படவில்லை" என்றும், **தன் இளையமகன் புவிதாஸ் செய்த குறும்பு விளையாட்டினால்தான் உடைக்கப்பட்டது** என்பதையும், வில்லவன் அறிந்து கொண்டான். இந்த உண்மை தெரிந்தால்...! மகன் புவிதாஸ்க்கு தகப்பன் அடித்து விடுவார் எனப்பயந்து அப்பழியைத் தான் ஏற்றுக் கொண்டதையும், வில்லவன் அறிந்து கொண்டான். பேரப்பிள்ளைகளில் அளவுகடந்த பாசத்தை வைத்திருந்தாள் சிங்காரக்கா.

யுத்தசூழல் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து ஓட்டுசுட்டானில் இருந்த போது இளையமகன் புவிதாஸை கிறுதி தூக்கி வயலுக்குள் எறிந்த போது, "அவன் இறந்துவிட்டான்" என்று கருதி, சிங்காரக்கா பெரும் குரலெடுத்து அழுது, அயலில் உள்ள சனங்கள் ஓடிவந்து செத்தவீடு கொண்டாடியதையும் சிறிது நேரத்தில் மகன் புவிதாஸ் கண்விழித்ததையும், வில்லவன் தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான். ஏனைய பேரப்பிள்ளைகளிலும் பாசத்தை வைத்திருந்த போதும், நீண்ட காலமாக பிறேமா குடும்பத்துடன் இருந்து பிள்ளைகளை வளர்த்தெடுத்தமையினால், அவளின் பிள்ளைகளில் கூடிய பாசம் வைத்திருந்தாள் சிங்காரக்கா. அயலவர்களும், உறவினர்களும் சிங்காரக்காவைப் பார்த்து

"உனக்கு பிறேமா ஒன்று தான் பிள்ளையா? மற்றவர்களை நீ பெறவில்லையா?" என்று கேட்கும் போதெல்லாம்...! அதைக் கேட்டு விட்டு, அமைதியாக இருந்தாளே தவிர, அக்குடும்பத்தை விட்டு பிரியாமல் இறுதிவரை அவர்களுடனேயே வசித்தாள் சிங்காரக்கா.

தங்களை வளர்த்தெடுப்பதற்குத் தாயார் பட்ட கஸ்டங் களையும், வேதனைகளையும் தன் கணவன் வில்லவனுக்கு அடிக்கடி கூறுவாள் அவளின் மனைவி பிறேமா. ஒரு முறை பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக்கு செல்ல ஆயத்தமாகிய போது எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள் சிங்காரக்கா. தேநீரை அவர்கள் முன் வைத்து விட்டு இதில் ஒரு தேநீருக்கு இனிப்புப் போடவில்லை?. யாருக்கு அது வருகிறதோ தெரியவில்லை" என்று கூறிவிட்டு அடுக்களைக்குள் சென்று விட்டாள் தயார். ஆனால் உண்மைநிலை வேறு. தேநீருக்குப் போட இனிப்பில்லை. இப்படிச் சொல்லிக் கொடுத்தால் ஒவ்வொரு வரும் "தனது தேநீருக்குத் தான் இனிப்பில்லை" என்று நினைத்துக் கொண்டு பேசாமல் குடித்து விடுவார்கள் என்பது தான் அவளின் எண்ணம். ஆனால் அவளின் கடைசி மகள் நித்திலா தேநீரைக் குடித்துவிட்டு, இதற்குத்தான் இனிப்பில்லை? என்று கூறி மற்றவளின் தேனீரைப் பறித்ததையும், மற்றவள் நான் தரமாட்டேன் என்று கூறி விட்டதையும், பின் அடுத்தவளின் தேநீரை பறித்து எடுத்ததையும், ஒவ்வொருவரும் சண்டைகள் பிடித்து மாறிமாறி தேநீரைப் பறித்து எடுத்ததையும் பின்னர் ஒருவருமே தேநீர் குடிக்காமல் பாடசாலை சென்றதையும், இதை அடுக்களைக்குள் இருந்து தாயார் பார்த்துக்கொண்டு அழுததையும், சொல்லி பழைய சம்பவங்களை வில்லவனுக்குக் கூறும் போது, கலங்கிய கண்களுடன் அவனும் அதைக் கேட்டுக் கொண்டிருப்பான்.

வில்லவனின் போக்கு தனியானது. அவன் வசதியான குடும்பத்தில் பிறந்தவன் அல்ல. எட்டுப்பிள்ளைகளுடன் கூடிப் பிறந்த குடும்பத்தில் மூத்தவன். ஆனால் படித்தவன். தனது கடுமையான உழைப்பின் மூலம் முன்னேறிக் கொண்டிருந்தான். அவன் பிறேமாவைத் திருமணம் முடித்த போது, பிறேமாவின் தாயாரினால் அவர்களின் குடும்பச் சொத்தாக "இருந்த இரண்டு பரப்பு காணியைக் கொடுத்த போது, அம்மா நீங்கள் தோட்ட வேலை செய்து, வேர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, உங்கள் குடும்பத்துக்கென வாங்கிய காணி எனக்குத் தேவையில்லை" என்று வாங்க மறுத்தபோதும், சிங்காரக்காவின் வற்புறுத்தலின் பேரில் பெற்றுக்கொண்டு, "சரி தாருங்கள்...! உங்கள் கடைசி மகள் திருமணம் செய்யும் போது, அதை அவளின் பெயருக்குத் திருப்பி எழுதிக் கொடுக்கிறேன்" என்ற நிபந்தனையுடன் பெற்றுக்கொண்டவன் அதேபோல் கடைசி மகள் நித்திலா திருமணம் முடித்த போது அதை திருப்பி எழுதிக் கொடுத்தான். அவனின் குணம் நடை கொள்கைகள், எல்லோருக்கும் நன்கு பிடிக்கும்.

சிங்காரக்காவின் ஒன்றுவிட்ட தங்கை சின்னத்தங்கத்தின் மூத்தமகன் **பரிமளராசாவுக்கு** வில்லவனை நன்கு பிடிக்கும். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் பிரிக்க முடியாத பாசம் வைத்திருந்தனர். இருவரினதும் இணைந்த செயற்பாடுகளின் மூலம் சிங்காரக்கா குடும்பம் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தது. சிங்காரக்கா குடும்பமும், சின்னத்தங்கம் குடும்பமும் மிக நெருக்கமாக இணைந்திருந்தது. சிங்காரக்காவின் மூத்தமகன் குமாரை விட, சின்னத்தங்கத்தின் மூத்த மகன் பரிமளராசாவுக்கு வயது அதிகமாக இருந்ததால், அவனை குமார் உட்பட ஏனைய குமாரின் தங்கைமார் ஐவரும் பெரியண்ணை என்றே அழைத்தனர். வில்லவனும் பரிமளராசாவை "பெரியண்ணை" என்றே அன்புடன் அழைத்தது மட்டுமல்ல, அவன் மீது உயிரையே வைத்திருந்தான். இருவரும்

அடிக்கடி சந்திக்காமல் இருக்க மாட்டார்கள். இருவரும் ஒன்றாக சேர்ந்து இருக்காது விட்ட எந்த நிகழ்வும் அக்குடும்பத்தில் ஏற்பட்டதில்லை. பரிமளராசா வில்லவனிடத்தில் அன்பாக இருந்தது போலவே **பரிமளராசாவின் தாயார் சின்னத்தங்கமும் அவளின் பிள்ளைகளும் வில்லவனிடத்தில் அன்பாக இருந்தனர்.**

வருடங்கள் பல உருண்டோடி விட்டது. சிங்காரக்கா பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்திருந்தமையினாலும், அவளின் பெண்பிள்ளைகள் அழகாக இருந்தமையினாலும், ஒரு சில இளைஞர்கள் தாமாக முன்வந்து, ஒவ்வொரு பெண்பிள்ளைகளையும் திருமணம் செய்து கொண்டனர். அவர்கள் பல பிள்ளைகளையும் பெற்று இப்போது வசதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மூத்தமகன் குமார் குடும்பத்துடன் கனடாவில் உள்ளார். இளைய மகள் நித்திலா பிரான்சில் உள்ளாள். ஏனைய பிள்ளைகள் இவ்விடம் இருந்தாலும், அவர்களின் பிள்ளைகள் பலர் வெளிநாட்டிலேயே உள்ளனர். எல்லோருமே எக்குறையுமில்லாமல், வசதியாகவும் சந்தோசமாகவும் வாழ்கின்றனர்.

கணவனில்லாது விதைவையாக இருக்கும் நான் எவ்வித வருமானமுமின்றி எனது பெண் பிள்ளைகளை எப்படிக் கரைசேர்க்கப் போகிறேன்? அவர்கள் எப்படி வாழப்போகிறார்கள்? அவர்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது? என்பதை எந்நேரமும் சிந்தித்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த எனது தாயார், நாங்கள் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்து சந்தோஷப்படவும், பெருமைப்படவும் உயிருடன் இல்லையே...! என்று வில்லவன் மனைவி பிறேமா அடிக்கடி வில்வனுக்கு சொல்லிக் கவலைப் படுவாள். அவளின் மறைவை நினைக்கும் போது, அனைவரும்

கவலைப்பட்டு கண்ணீர் சிந்துவார். காவியமாக்கிவிட்ட சிங்காரக்கா, இன்று அனைவரின் மனதிலும் ஓவியமாக நிலைத்துவிட்டாள்.

ஆமாம், இன்று சிங்காரக்கா . . . ! உயிருடன் இல்லை. ஆனால் அவள் பெற்ற பிள்ளைகள் அனைவரும் அவளின் மனம் போலவே நன்றாகவே வாழ்கிறார்கள். அதேசமயம் சிங்காரக்காவால் கொடிகாமத்தில், மகள் பிறேமாவின் காணிக்குள், நாட்டப்பட்ட தென்னம்பிள்ளைகளும் பட்டுப்போகாமல் நன்றாகக் காய்த்துக் குலுங்குகின்றன. அத் தென்னம்பிள்ளைகள் அடிக்கடி சிங்கார க்காவின் நினைவுகளை ஞாபக மூட்டுகின்றது. சிங்காரக்கா **பெற்ற பிள்ளைகளும் சிங்காரக்காவால் நடப்பட்ட தென்னம் பிள்ளைகளும், அவளின் மனம் போலவே நன்றாக செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதை அனைவரும் காணக்கூடியதாக உள்ளது.**

கொடிகாமத்தில் மகள் பிறேமாவுடன் இருந்த காலத்தில், வீட்டுக்கு வரும் அனைவருக்கும் சிங்காரக்கா தேனீர் கொடுத்து உபசரித்தது போல, இன்று கொடிகாமம் வரும் அனைவருக்கும், சிங்காரக்கா இல்லாது விட்டாலும், மகள் பிறேமாவின் காணிக்குள் **சிங்காரக்காவால் நாட்டப்பட்ட தென்னம்பிள்ளைகள் இளநீரைக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருக்கின்றன.**

எழுத்தாளன் சிந்தனை, 2018 ஆவணி

(12) பழித்திருந்தால்...

அக்கிராமம் மிகவும் பின்தங்கிய ஓர் கிராமம் அக்கிராமத்தின் பெயர் செந்தாளம்பட்டி. போதிய போக்குவரத்து வசதிகளோ, அல்லது மாணவர்கள் கல்வி கற்பதற்கான வசதிகளுடன் கூடிய பாடசாலைகளோ, அங்கு கிடையாது. அரசியல் வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் தமது சொகுசு வாகனங்களில் அவ்விடம் வருவார்கள். அவர்களிடம் இதுபற்றி கேட்கும்போது எல்லாம் செய்துதல்லாம்.... செய்துதல்லாம்..., என்று கூறினார்களே அன்றி எதுவும் அக்கிராம மக்களுக்கு செய்து கொடுக்கவில்லை. எதிர்கால சிறார்களின் கல்வியில் அக்கறை கொண்ட அக்கிராமத்திலுள்ள பலர், அக்கிராமத்திலுள்ள பாடசாலையின் வகுப்பை உயர்தரம் வரை அதிகரித்து தரும்படியும், புதிய கட்டடம் ஒன்றை அமைத்துத் தரும்படியும் பலகோரிக்கைகளை விட்டிருந்தும், எதுவுமே செவி மடுக்கப்படவில்லை. இதனால் அரசியல்வாதிகள் மீது வெறுப்பைக் கொண்டிருந்தனர் கிராமமக்கள்.

இக்கிராமத்திலிருந்து இருபது கிலோமீற்றர் தூரத்திலுள்ள, "மருதை" பட்டிண த்திலிருந்த சண்முகசுந்தரம் என்ற தொழில்அதிபர் கல்விவளர்ச்சிக்காக பெருந்தொகையான நிதியுதவிகளையும், வேறுபல பெறுமதியான உதவிகளையும், மறுக்காமல் செய்துவருபவர், என்பதை அறிந்துகொண்ட அவ்வூர் கிராமமக்கள், தணிகாசலம் என்ற சமூகமுன்னோடி தலைமையில் ஓர் குழுவாகச் சென்று சண்முகசுந்தரத்தை நேரடியாக சந்தித்து, கிராமத்தின் தேவைப்பாட்டையும், தங்களின் எதிர்பார்ப்பினையும் எடுத்துக்கூறினார். அதற்கு தமக்கு உதவுமாறும் பணிவுடன் கேட்டுக்கொண்டனர்.

எல்லாவற்றையும் நன்றாகக்கேட்டு அறிந்துகொண்ட சண்முகசுந்தரம் அவர்களுக்கு, தேநீர் கொடுத்து உபசரித்தபின் கீழ்வருமாறு கூறினார். உங்கள் கிராமத்துப் பாடசாலைக்கு இரண்டு மாடியுடன் கூடிய ஓர் புதிய கட்டடத்தை அமைத்துத் தருகிறேன். அதற்கான தளபாட உபகரணங்களையும் வாங்கித்தருகிறேன். அரசியல்வாதிகளுடன் பேசி, பாடசாலைக்கு போதுமான ஆசிரியர் களையும் நியமனம் செய்ய ஒழுங்குகள் செய்கிறேன். அடுத்த மாதத்திலிருந்து கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் உறுதிப்படுத்திக்கூறினார். இதை எவருமே எதிர்பார்க்கவில்லை...!

அவரைச் சந்திக்கச் சென்ற தணிகாசலம் குழுவினருக்கு, ஆச்சரியம் தாங்கமுடியவில்லை! தமது காதுகள் கேட்டுக் கொண்டிருப்பது சண்முகசுந்தரத்தின் நிஜமான வார்த்தைகளைத் தானா? அல்லது தமது பிரமையா? என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை?

எங்கள் கிராமத்துப் பாடசாலைக்கு இரண்டுமாடியில் ஒரு கட்டடமா? இது ஒரு சாதாரண விடயமா? இதை அமைக்க எத்தனை கோடிரூபா செலவாகும்.....! அதை சண்முகசுந்தரத்தால் தனியே அன்பளிப்பு செய்ய முடியுமா? விடை காணமுடியாத பல கேள்விகள், அவர்களைத் திக்குமுக்காட வைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தொழில் அதிபர் சண்முகசுந்தரம் கூறியதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஆச்சர்யம் தாங்க முடியவில்லை?

என்னை உங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. **நான் உங்கள் செந்தாளம்பட்டி கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் தான்.** நான் உங்கள் கிராமத்து நல்லைநாதர் என்பவருக்கு மகனாகப் பிறந்தேன். எனது நான்கு வயதிலேயே என் தந்தை இறந்துவிட்டார்.

என் தந்தைக்கு வேறுபிள்ளைகள் எவருமே கிடையாது. நானும் எனது தாயாரும், அக்கிராமத்தில் தனித்து வசித்து வந்தோம். ஜீவனத்தைக் கொண்டு நடத்தமுடியாத நிலை. எனக்கு நான்கு வயது தான். என் தாயார் நோயாளி, நானும் எனது தாயாரும், வீடுவீடாகச் சென்று வேலைகளைச் செய்தோம். எமக்கு உதவுவார் எவரும் இல்லை?. வேலை செய்யும் வீடுகளில் தரும் உணவுகளை வாங்கி உண்டு எமது வயிற்றுப்பசியை தீர்த்தோம். இப்படிப்பல வருடங்கள் நானும் எனது தாயாரும் செந்தாளம்பட்டிக் கிராமத்திலேயே வாழ்ந்தோம். எம்மை ஒருவரின் கண்களுக்கும் தெரியவில்லை?. இந்நிலையில் எனது தாயாரால் என்னைப் பாடசாலைக்கு அனுப்பமுடியவில்லை?. நான் எப்பாடசாலையிலும் கல்வி கற்காதவன். **சுருக்கமாகச் சொன்னால் "நான் படிக்காதவன்"**.

தனது சோகக் கதையை சண்முகசுந்தரம் செல்லியபோது, அவரின் இருகண் களும் குளமாகி பொலபொலவென கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. சிறிது இடைவெளியின் பின்னர் சண்முக சுந்தரம் தொடர்ந்தார்.

எனக்கு பதினெட்டு வயது ஆகியும் எனக்கு ஒரு சிறு வேலையும் நிரந்தரமாகக் கிடைக்கவில்லை. அத்துடன் கிராமத்தில் என்வயதினை ஒத்த இளைஞர்கள் என்னைப் "**படிக்காதவன்**" "**படிக்காதவன்**" என்று குத்திக்காட்டுவதும், பொது இடங்களில் கிண்டல் அடித்துக் கேலிசெய்வதும், எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கும். இதையிட்டு எனது தாயாரும் மிகவும் வேதனைப்படுவார். இதனால் தொடர்ந்தும் செந்தாளம்பட்டிக் கிராமத்தில் வாழ முடியாத சூழ்நிலையில், நான் எனது தாயாரையும் கூட்டிக்கொண்டு மருதை பட்டிணம் வந்து சேர்ந்தேன். வேலைக்காக எல்லா இடமும் அலைந்து திரிந்தேன். கருணை உள்ளமும், தாராளமனப்பான்மையும் கொண்ட

பிரபல வர்த்தகர் ஒருவர், என் நிலையை எண்ணிப் பரிதாபப்பட்டு தனது வர்த்தக நிலையத்தில் ஒருசிறு வேலை தந்தார்.

சிறிய வேலையாக இருந்தபோதும் கண்ணியமான சம்பளத்தை ஒழுங்காகத் தந்தார். எனது தாயாருக்கும் தமது விட்டில் தமது மனைவிக்கு ஒத்தாசையாகப் பணிபுரியும் வேலையைக் கொடுத்ததுடன், தமது வீட்டின் பின்புறமாக ஓர் அறையை ஒதுக்கித்தந்து, எம்மை தங்கவும் அனுமதித்தார். **மனித உருவில் தெய்வம் இருப்பதை** அப்போது தான் நான் உணர்ந்துகொண்டேன்.

இவ்வளவு ஆதரவுகளையும் தந்த வர்த்தகர் வேல்முருகனுக்கு நன்றி செலுத்தும் வகையில், நான் மிகக்கடுமையாகவும், விசுவாசமாகவும் அவருக்காக உழைத்தேன். எனது சம்பளமும் உயர்ந்தது. அவர் என்மீது வைத்திருந்த மதிப்பும் உயர்ந்தது. பாடசாலைப்படிப்பு இல்லாது விட்டாலும், அனுபவரீதியாக நான் பல விடயங்களைக் கற்றக்கொண்டேன். எழுதவாசிக்கவும் ஓரளவு கற்றுக்கொண்டேன். காலப்போக்கில் தனது விடயங்களை நேரடியாக கவனிக்கும் பொறுப்பில் வேல்முருகன் என்னையே நியமித்து விட்டார். நானும் "எனது நிறுவனம்" என்ற எண்ணத்துடன் அவரோடு கைகோர்த்து உழைத்தேன். உழைப்பின் மகிமையால் நிறுவனம் பலகோடி ரூபாக்களை தனதாக்கிக் கொண்டது. வர்த்தகர் வேல் முருகன் நோயாளியாகி படுத்தபடுக்கையாகி விட்டபோது நானே முழுப்பொறுப்பையும் எடுத்து நிறுவனத்தை நடாத்தி வந்தேன். நேர்மையான கருணை உள்ளம் கொண்ட மனிதரான வேல்முருகன் நிறுவனத்தின் இலாபத்தில் சரிபாதியை எனக்குப் பிரித்துத் தந்தார். அவையாவும் எனது உழைப்பும் சேர்ந்து இன்று என்னை ஒரு பெரிய தொழில் அதிபரின் நிலைக்கு உயர்த்திவிட்டது. இவற்றை சுருக்கமாக கூறி முடித்த சண்முகசுந்தரம் மௌனமாகிவிட்டார்.

சண்முகசுந்தரத்தின் கதையைக் கேட்ட தணிகாசலம் குழுவினர் ஆடாது அசையாது சிலையாக நின்றனர். தனது கதையினூடே அவர் தன்னைப் படிக்காதவன்...! படிக்காதவன்...! என்று அழுத்திக் கூறிய சொற்கள் அவர்களுக்கு வேதனையளித்தது.

அன்று செந்தாளம்பட்டிக் கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது. செந்தாளம் பட்டிக்கிராமத்து பாடசாலைக்கு புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தின் திறப்புவிழா, சண்முகசுந்தரத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இரண்டுமாடிக்கட்டடம் இளம் பச்சை வர்ணம் பூசப்பபட்டு, உயரமாக அரண்மனை போன்று காட்சி அளித்துக் கொண்டிருந்தது. கிராமமக்கள் அனைவரும் மிகுந்த சந்தோசத்துடன் காணப்பட்டனர். தணிகாசலம் குழுவினர் ஓடிஓடி வேலை செய்து கொண்டிருந்தனர். ஊரிலுள்ள பிரமுகர்கள் அரசியல்வாதிகள், கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் அனைவரும் அந்த விழாவுக்கு சமுகமளித்தனர்.

சிறிது நேரத்தில் தொழில் அதிபர் சண்முகசுந்தரம் ஓர் அழகான சிறிய காரில் மனைவியுடன் வந்து இறங்கினார். மேளதாள நாதஸ்வர இசைகளுடன் அழைத்துவரப்பட்ட சண்முகசுந்தரம், விழா மண்டபத்தில் புன்முறுவலுடன் அமர்ந்திருந்தார். தணிகாசலம் தலைமையில் திறப்புவிழா கூட்டம் ஆரம்பமாகியது. சண்முக சுந்தரத்தின் வள்ளல் தன்மையையும், தாராள மனப்பான்மையையும், கிராமத்தின் மேல்கொண்ட பற்றையும், அவரால் கல்விக்கு கொடுக்கப்பட்ட மதிப்பையும் பற்றி சிறிது நேரம் புகழ்ந்து பேசிய தணிகாசலம் "இப்போது தொழில் அதிபர் சண்முகசுந்தரத்தினால் புதிய மாடிக்கட்டடம் நாடா வெட்டித்திறந்து வைக்கப்படும்" என்று கூறியவுடன், கிராமமக்கள் அனைவரும் கைகளைத்தட்டி ஆரவாரித்து மகிழ்ச்சி பொங்க, கூச்சலிட்டு மகிழ்ந்தனர். அமைதியாக

எழுந்து சென்ற சண்முகசுந்தரம் நாடாவை வெட்டி புதிய கட்டிடத்தை திறந்து விட்டு, தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.

அவரிடம் எவ்விதமான பெருமையும் இருக்கவில்லை. அவரின் மனம் கடந்தகால நினைவுகளை அசைபோட்டுக்கொண்டிருந்தது. இப்போது அவருக்கு 53 வயது, கடந்த 35 வருடத்துக்கு முன்னர், அதாவது அவருக்கு 18 வயது, அவர் தாயாருடன் செந்தாளம் பட்டியில் வாழ்ந்து கொண்டிருந்தார். படிப்பறிவு எதுவுமின்றி எந்தவேலையுமின்றி வேலைக்காக அலைந்து கொண்டிருந்தார் சண்முகசுந்தரம்.

தற்போது இருமாடிக்கட்டடம், கட்டடத் திறப்புவிழா நடைபெறும் இதே பாடசாலையில், ஒரு சிறுவேலை இருப்பதாகவும், அதிபரிடம் போய் அதுபற்றி விசாரித்து அதைக்கேட்டுப் பார்க்கும் படியும், அவன் நண்பன் கூறியதைதைத் தொடர்ந்து, அந்த வேலையைக் கேட்பதற்காக அதிபரைத் தேடிச்சென்றான் சண்முகசுந்தரம்.

அதிபரைச் சந்தித்து விசாரித்த போது இப்பாடசாலையில் ஒரு பீயோன் வேலை காலியாக இருப்பதாகவும், வகுப்பறையை கூட்ட வேண்டும், பாடசாலை தொடங்கும் நேரம், ஒவ்வொருபாடமும் முடியும் நேரம், பாடசாலை முடியும் நேரம் மணியடிக்க வேண்டும்?. வகுப்பறையை மாணவர்கள் "முறைவைத்து" தாமே கூட்டிக் கொள்வார்கள். மற்றப்படி **"மணி அடிப்பது தான் வேலை"** என்று கூறினார் அதிபர். உமக்கு சம்மதம் என்றால் எங்களிடமிருக்கும் இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தாரும், என்று கூறி, ஒரு விண்ணப்பபடிவத்தைக் கொடுத்தார் அதிபர். படிப்பறிவு எதுவுமற்ற சண்முகசுந்தரத்தினால் அப்படிவத்தை எப்படி நிரப்பி பூர்த்தி செய்யமுடியும்? ஐயா! நான் படிப்பறிவு எதுவுமற்றவன் இதை

நிரப்பித்தாருங்கள் என்று கேட்டபோது நீ கொஞ்சமும் படிக்க வில்லையா? அப்படி என்றால் உமக்கு இந்த வேலை சரிவர மாட்டாது. என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார் அதிபர், மணி அடிப்பதற்கும் படிக்க வேண்டுமா? என்று தன் மனதில் நினைத்துக்கொண்டு வேதனையுடன் திரும்பி வந்துவிட்டான் சண்முகசுந்தரம்,

அதே சண்முகசுந்தரம் தான் இப் பாடசாலைக்கு இரண்டு மாடிக்கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் என்பது, தணிகாசலம் குழுவினரைத் தவிர ஏனைய கிராம மக்கள் பலருக்கு தெரியாது. மேலும் தான் படிக்காது விட்டமையை மனதில் வைத்துக்கொண்டு கல்விவளர்ச்சிக்காக மறுக்காமல் தாராளமாக சண்முகசுந்தரம் உதவி செய்து கொண்டிருப்பதும் கிராமமக்கள் தெரிந்துகொள்ள நியாயமில்லை?.

பாடசாலைக் கட்டட திறப்பு விழாக்கூட்டத்தில் பல பிரமுகர்கள் பேசினார்கள். அரசியல்வாதிகள், கல்விமான்கள் பேசினார்கள், எல்லோரும் சண்முகசுந்தரத்தைப் பற்றியே பேசினார்கள். சண்முக சுந்தரம் படிக்கவில்லை என்பதை அறிந்து கொண்ட சிலர், தமது பேச்சின் போது அவர் படித்திருந்தால்.....படித்திருந்தால்! இன்று இன்னும் மிகப் பெரிய இடத்தில் இருந்திருப்பார்...! கொடிகட்டிப் பறந்திருப்பார்...! என்ற வார்த்தைகள் மூலம், அவரைப்புகழ்ந்து பேசினார்கள். அப்புகழ்ச்சி வார்த்தைகளைக் கேட்டு சண்முகசுந்தரம் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

அவர் சொற்பொழிவுக்காக அழைக்கப்பட்ட போது, கல்வியின் முக்கியத்துவம் பற்றி நீண்ட நேரம் பேசினார். "கல்வியைவிட பெரிய சொத்து வேறெதுவும் இருக்க முடியாது" என்பதை வலியுறுத்திக் கூறினார். ஏற்கனவே பேசியவர்கள் சண்முகசுந்தரம்

படித்திருந்தால்... படித்திருந்தால்... என்று அழுத்திக் கூறிய வார்த்தைகள் அவர்காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. தான் இப்பாடசாலையில் பீயோன் வேலைகேட்டு திரும்பி சென்றது, ஞாபகத்துக்கு வருகிறது. தனது பேச்சினூடே அதைச் சண்முக சுந்தரம் சொல்ல வேண்டும்... சொல்லவேண்டும்...! என்று தான் நினைத்தார். ஆனால் அதைச்சொல்ல அவரால் முடியவில்லை.

படித்திருந்தால்... படித்திருந்தால்...! என்ற சொல்லின் எதிரொலி அவர் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஆமாம் நான் படித்திருந்தால்..! **நான் படித்திருந்தால்...! இப்போதும், இந்தப் பாடசாலையில் மணியடித்துக் கொண்டு ஒரு பீயோனாகவே இருந்திருப்பேன்.**" என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. சண்முகசுந்தரத்துக்கு, ஆனால் அதை அவர் சொல்லவில்லை. "**நான் படித்திருந்தால்..! இன்னும் பல நண்பர்களுக்கு, வழிகாட்டியாக இருந்திருப்பேன்**" என்று சுருக்கமாக கூறி, தனது உரையை முடித்துக்கொண்டு, அனைவரிடமிருந்தும் அன்புடனும் விடைபெற்றுக் கொண்டார் சண்முகசுந்தரம். அவரின் கண்கள் செந்தாளம்பட்டிக் கிராமத்தை ஆசைதீரப் பார்த்துக்கொண்டே சென்றது.

எழுத்தாளன் சிந்தனை
1997 சித்திரை

13

கடிகாரம் 03.04.2015 Friday ஓடவில்லை

சத்தியனுக்கு அப்போது வயது பதினெட்டு. அவன் வரணி என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். அத்துடன் அவன் தாய் தகப்பனுக்கு பிறந்த எட்டுப் பிள்ளைகளில் இவனே மூத்தபிள்ளை. மிகவும் கஷ்டத்தின் மத்தியிலும் க.பொ.த. உயர்தரம் வரை படித்தவன். மேலும் படித்து உயர்கல்வி பெறக்கூடிய அறிவும், ஆற்றலும் இருந்தபோதும், குடும்ப நிதிநிலை மோசமாக இருந்தமையினால், அதற்கு மேல் அவனால் படிக்க முடியாது போய் விட்டது. "ஏதாவது தொழிற் கல்வியை மேற்கொண்டால்...! இலகுவாக வேலை கிடைத்துவிடும்" என்று பல படித்தவர்கள் ஆலோசனை சொன்னதன் காரணமாக, யாழ் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்கல்வி பயிற்சி நெறி ஒன்றை மேற்கொண்டான். தொழிற்கல்வி என்பதினால் வயது வித்தியாசம் உள்ள பல மாணவமாணவிகள் அங்கு கல்வி பயின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படிக்கும் செலவைத் தாங்க முடியாத நிலையில், கொக்குவிலில் உள்ள உறவினர் வீட்டிலிருந்து படித்து வந்தான் சத்தியன். வாரத்தில் கிடைத்த ஒன்றரை நாள் கல்லூரி விடுமுறையில் அயலில் உள்ள, கட்டட வேலை மேற்கொண்ட தொழிலாளர்களுடன் சேர்ந்து தானும் கூலிவேலைக்குச் சென்று வந்தான். இந்த விடயம் கல்லூரி மாணவமாணவிகளுக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான் சத்தியன்.

கல்லூரியில் இருவரிசையாகப் பிரிக்கப்பட்ட வகுப்பறையில் ஒருவரிசையில் ஆண்களும், மறுவரிசையில் பெண்களும் அமர்ந்திருந்த நிலையில் ஆண்களின் வரிசை முடியும் விழும்பில் சத்தியனும், பெண்களின் வரிசை முடியும் விழும்பில் சத்தியபாமா என்ற மாணவியும் அமர்ந்திருந்தனர். இடையில் மட்டும் ஒரு சிறு இடைவெளி பிரித்திருந்தது. ஒருசில நாட்களின் பின் மாணவ மாணவிகள் அனைவரும் சிரித்துப் பழகி அந்நியோன்னியமாகி விட்டனர். ஆனாலும் தனக்கு அருகிலிருந்த சத்தியபாமாவுடன் மட்டுமல்ல, வேறு எந்த மாணவியுடனும் சத்தியன் கதைத்துச் சிரிப்பதில்லை. **சத்தியபாமா என்பவள் இணுவிலைச் சேர்ந்த ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதிகளின் இளைய மகளாவாள்.**

உயர் வகுப்பு வரை ஆண்கள் பாடசாலையில் படித்தமை யாலும், கிராமியச் சூழலில் வாழ்ந்தமையினாலும், கூச்ச சுபாவம் இருந்தமையினாலும் எந்த மாணவியுடனும் சத்தியன் தானாகக் கதைப்பதில்லை.

அருகிலுள்ள சத்தியபாமா அவனிடம் பேச்சுக்கொடுப்பதுண்டு. அவளுக்கு அவனை விட ஆறு வயது அதிகமாக இருந்தது. அவளிடம் அவன் பேசும் போது "**அக்கா**" என்று தான் கூறுவான்.

அவனே குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்தமையினால், அவன் "அக்கா" என்று அன்புடன் அழைக்க அவனுக்கு யாருமே இருக்கவில்லை?. அவன் அவளை "அக்கா" என்று அழைக்கும் போது அவளிடமிருந்து ஓர் பாச உணர்வும், கண்களில் கருணையும் வெளிப்படுவதை அவன் அவதானிக்கத் தவறவில்லை.

சிறிய இடைவேளை நேரத்தில், எல்லா மாணவ மாணவிகளும், கல்லூரி கன்ரீனுக்கு சென்று தேநீர், ரீ குடிப்பார்கள். ஆனால் சத்தியன் கன்ரீன் பக்கம் போவதில்லை. சிலவேளைகளில் வகுப்பறையில் அவன் கொட்டாவி விட்டதையும் அவள் கண்டுள்ளாள். கல்லூரி தொடர்பான சில நடைமுறை விடயங்களில் அவன் நடந்து கொண்ட விதங்களிலிருந்து, அவனின் ஏழ்மை நிலையை அவள் புரிந்து கொண்டதுடன், வறிய மாணவருக்கான "உதவு தொகையும்" அவனுக்கு கிடைப்பதை அவள் அறிந்து கொண்டாள். அவனின் பரிதாப நிலை, அவனிடத்தில் அவளுக்கு ஓர் இரக்க உணர்வை "சத்தியபாமா" என்று பெயரைக் கொண்ட பாமாவுக்கு ஏற்படுத்தியது. அதேசமயம், அவன் எனது தம்பிக்கு சமமானவன், என்னை "அக்கா, அக்கா" என்று அன்புடன் அழைக்கிறான். எனக்கும் "தம்பி" என்று அழைக்க ஒருவரும் இல்லையே? என்ற உண்மைநிலையையும் உணர்த்தியது. எனவே பாமா அளவு கடந்த பாசத்தை அவன் மீது காட்டினாள்.

அன்றைய தினம் இடைவேளையின் போது ரீ குடிக்க கன்ரீன் சென்ற பாமா வரும்போது, ஒரு சில "ரொபி' களையும் வாங்கிவந்து இந்தாரும், என்று சொல்லி அவனிடம் நீட்டினாள் பாமா. முதலில் சத்தியன் மறுத்தபோதும் பின்னர் அன்புடன் அவற்றை வாங்கிக் கொண்டான்.

நாளடைவில் இருவரின் அன்பும், இறுக்கமான சகோதர உறவாக மாறிவிட்டது. அக்கா பாமாவுடன் சகோதரனாகப் பழகிய தம்பி சத்தியனுக்கு அவள் மீது ஓர் "**பக்தி**" உணர்வு ஏற்பட்டு விட்டது. அவனை விட வயதில் மூத்தவளான பாமா அடிக்கடி அவனுக்கு புத்தி கூறவும், சில விடயங்களில் அவனை உரிமையுடன் கண்டிக்கவும் தொடங்கினாள். அதேநேரம் வகுப்பில் கெட்டிக்காரனாக இருந்த சத்தியனிடம் தனக்கு விளங்காத படிப்புடன் தொடர்புடைய சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்கவும் அவள் தயங்கவில்லை. படிப்பின் மூலம் கல்வியறிவு ஒருபுறம், பாசத்தின் மூலம் **சகோதர உறவு** ஒரு புறமுமாக வளர்ந்து கொண்டிருந்தது.

ஓர் இளம்மங்கையும், ஓர் இளைஞனும் நெருக்கமாகப் பழகிக் கொண்டால்..! அது காதல்...! தான் என்று அனைவருமே கருதும் இந்த உலகத்தில் அவர்கள் சகோதரங்களாகப் பழகுகின்றோம் என்றால்...! யார் நம்பப் போகிறார்கள். யாரும் நம்பவேண்டாம் தம்பி, நீ எதற்கும் கவலைப்படாதே என்று கூறி, சத்தியனுடன் மேலும் நெருக்கமாகவும், அன்பாகவும் பழகி வந்தாள் பாமா. தங்களின் சகோதர உறவை எண்ணி எண்ணி அடிக்கடி பெருமை கொள்வான் சத்தியன்.

"அன்னை வடிவிலும் தெய்வமுண்டு
அக்கா வடிவிலும் தெய்வமுண்டு
புன்னை மரத்திலும் தெய்வமுண்டு - அதைப்
புரிந்து கொண்டவர் சிலர்தானுண்டு"

என்று யாரோ ஒரு யாழ்ப்பாணத்துக் கவிஞன் பாடிய பாடலின் வரிகள் சத்தியன் மனதில் அடிக்கடி தோன்றி மறையும். அவர்கள் இருவரையும், உடன் பிறவாத சகோதரர்கள் என்று எண்ணாமல், இருவரும் "**உடன் பிறந்த சகோதரர்கள்**" என்று மாணவ மாணவிகள் கருதத் தொடங்கினர். பல்வேறு இடங்களிலில் இருந்தும்,

பல்வேறு பின்புலங்களிலிருந்தும், ஒன்று சேர்ந்த மாணவ மாணவிகள் இது பற்றி பெரிதாகச் சிந்திக்கவில்லை. சத்தியன் வராத நாட்களில் ஏன் தம்பி வரவில்லை? என்று பாமாவைக் கேட்கவும், பாமா வராத நாட்களில் ஏன் அக்கா வரவில்லை? என்று சத்தியனைக் கேட்கவும் மாணவ மாணவிகள் வழக்கமாக்கிக் கொண்டனர்.

தனது வாழ்க்கையின் ஏழ்மைநிலை?, தான் வாராந்த விடுமுறை நாட்களில் கூலிவேலைக்குச் செல்வது? யாவும் ஒரு தாயாரிடம் சொல்வது போல் அக்கா பாமாவிடம் சொல்லி ஆறுதலடைவான் சத்தியன். சில சமயங்களில் பல நகைச் சுவைகளையும் கூறி, அக்காவுடன் சிரித்து மகிழ்வான். வகுப்பில் பாடங்கள் நடக்காத வேளைகளில் மாணவ மாணவிகள் எல்லோரும் சேர்ந்து சிரித்துக் கும்மாளமடிப்பார்கள். சிலர் சில வித்தைகளைக் காட்டி ஏனையவர்களை மகிழ வைப்பார்கள். சிலர் சில புதிர் கணக்குகளைக் செய்து காட்டி மகிழ வைப்பார்கள். அப்போது பாமாவும் சேர்ந்து எல்லோருடனும் சிரிப்பாள்.

ஒருமுறை பாமா சொன்னாள், தம்பி படிப்பில் மட்டும் கெட்டிக்காரனாக இருந்தால் காணும் என்று நினைக்கக் கூடாது?, **எல்லா விடயங்களிலும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும்! அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேற முடியும்** என்று கூறிவிட்டு நீ இவர்கள் செய்வது போல, மற்றவர்கள் அதிசயப் படுமளவுக்கு, வியப்படையுமளவுக்கு எதையும் செய்து மற்றவர்களைக் கவர மாட்டாயா? அப்படியென்றால் எனக்கும் எவ்வளவு பெருமையாக இருக்கும் என்று கூறியபோது, அவன் சிரித்துக் கொண்டே கூறினான். "அக்கா நீங்கள் ஒத்துழைத்தால்... நானும் பல காரியங்களையும் வித்தைகளையும் அவர்களைவிட சிறப்பாக செய்து காட்டுவேன்" என்று.

அடுத்த தினம் வகுப்பில் பாடம் இல்லாத போது, மாணவ மாணவிகளின் அரட்டை தொடங்கியது. சத்தியன் எழுந்து சென்று கரும்பலகை முன்சென்று, வெண்கட்டியை எடுத்து ஒரு முக்கோணம் கீறினான். அந்த முக்கோணத்தின் மூன்று மூலைகளிலும் 'க', 'மு', 'கு' என்ற எழுத்துக்களை எழுதினான். வகுப்பில் உள்ளவர் களிடம் கீழ்வருமாறு கூறினான். "நான் வகுப்புக்கு வெளியில் போகிறேன் யாராவது எழுந்து சென்று உங்கள் பென்சிலினால் ஏதாவது ஒருமூலையில் தொட்டுவிட்டு வந்து உங்கள் இருப்பிடத்தில் அமர வேண்டும்.

நான் வகுப்பிற்கு வந்து எந்த மூலையில் நீங்கள் தொட்டீர்கள்? என்று கூறுவேன் என்று கூறிவிட்டு, வகுப்புக்கு வெளியே சென்றான். திரும்பி வந்து அவர்கள் தொட்ட மூலையைச் சரியாகச் சுட்டிக் காட்டினான். பலர் அப்படி தொட்டுவிட்டு இருந்த போதும், அவன் சரியாக அந்த மூலைகளைச் சுட்டிக்காட்டினான். இன்னோர் மாணவன் எழுந்து கரும் பலகை அருகில் சென்று ஒரு மூலையிலும் தொடாமல் வந்து இருந்தான். அறைக்குள் வந்த சத்தியன் சிரித்துக் கொண்டே நீங்கள் ஒரு மூலையிலும் தொடவில்லை என்று கூறினான். அனைவரும் அவனை அதிசயத்துடன் பார்த்தனர். அக்கா பாமாவும் சொண்டுக்குள் சிரித்துக் கொண்டாள். இந்த வித்தை பலநாட்கள் தொடர்ந்தது. இந்த வித்தையின் இரகசியம் யாருக்கும் தெரிய வில்லை?. அவனுக்கும் அக்கா பாமாவுக்கும் மட்டுமே தெரியும்.

அவன் வகுப்பறைக்குள் நுழையும் போது, அக்கா பாமா கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தால், அவர்கள் தொட்டது 'க' எழுதிய மூலை என்றும், மூக்கைச் சொறிந்து கொண்டிருந்தால் அவர்கள் தொட்டது 'மு' எழுதிய மூலை என்றும், குனிந்து

கொண்டிருந்தால் அவர்கள் தொட்டது 'கு' எழுதிய மூலை என்றும், எதையுமே காட்டிக் கொள்ளாமல் பேசாமல் இருந்தால் அவர்கள் எந்த மூலையிலும் தொடவில்லை என்பதையும் சத்தியன் அறிந்து கொள்வான். இதுதான் அந்த வித்தையின் இரகசியம். அக்கா இல்லாத நாட்களில் சத்தியன் அந்த வித்தையைச் செய்துகாட்ட மாட்டான்.

இவை எல்லாம் கல்லூரி வாழ்க்கையில் நடந்த நகைச் சுவைச் சம்பவங்கள், அவனின் கல்லூரியின் சகோதரஉறவு கல்லூரியுடன் நின்றுவிடாது, அக்கா பாமா வீட்டுக்குச் செல்வது, உணவு உண்பது வரை தொடர்ந்து இறுக்கமாகியது. ஒருநாள் அக்கா பாமா உணவு பரிமாறிக்கொண்டு தம்பி என்ன வேணும்? என்று கேட்டபோது, சத்தியன் கண்கள் கலங்கத் தொடங்கியது. என்ன தம்பி? என்று கேட்ட போது சத்தியன் தழுதழுத்த குரலில் கூறத்தொடங்கினான்.

அக்கா, நான் அன்புடன் 'அக்கா, அக்கா' என்று அழைக்க எனக்கு யாருமே இல்லை. நான் வாழும் இறுதிக்காலம் வரை உங்களுக்குத் **தம்பியாக வாழவே விரும்புகிறேன்**. ஆனால் நிங்கள் திருமணம் செய்யப்போகும் கணவன் இந்த உறவை நம்புவாரா? ஏற்றுக்கொள்வாரா? அதை நினைத்து நான் பயப்படுகிறேன் என்று கூறிய போது, அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

அவள் அவன் தலையைத் தடவி விட்டு, தம்பி இதுவரை கூறாத ஓர் உண்மையை உனக்குக் கூறப்போகிறேன். "நான் ஒருவரை விரும்பியிருக்கிறேன்". அவரிடம் இது பற்றி கூறியும் இருக்கிறேன். அவருக்கு உன் குணநடை, பாசம் யாவும் நன்கு தெரியும். உனக்கு அவரைத் தெரியுமுன்னரே அவருக்கு உன்னைத் தெரிந்து விட்டது.

விரைவில் உன்னுடன் கதைப்பார். நாங்கள் பழகுவதை அவர் தடை செய்ய மாட்டார். நீ பயப்படத்தேவையில்லை. கவலைப்படவும் தேவையில்லை என்று கூறிய போது சத்தியன் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

கல்லூரி வாழ்க்கை முடிந்து விட்டது. அக்கா பாமா "தவராசா" என்பவரைத் திருமணம் முடித்து பல பிள்ளைகளையும் பெற்று விட்டா. தம்பி சத்தியனும் பிறேமா என்ற பெண்ணைத் திருமணம் செய்து நான்கு பிள்ளைகள் பிறந்து விட்டன. இரு குடும்பங்களும் மிகவும் நெருக்கமாகி விட்டதுடன், அவர்களின் பிள்ளைகளும் "மாமா", "அத்தை" உறவுகளாக இணைந்து "**அக்கா தம்பி**" உறவை வலுப்படுத்திக் கொண்டனர். மாதத்தில் ஒரு முறையாவது அக்காவும் தம்பியும் சந்தித்துக் கொள்வார்கள். கொழும்பில் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் உத்தியோகம் பார்த்த தவராசா விடுமுறையில் யாழ்ப்பாணம் வரும் போது, சத்தியனுக்கும் அறிவித்துவிட்டே வருவார். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் உயர் பதவி வகித்த சத்தியனும் அவரைச் சந்தித்து மகிழ்வான்.

அக்காளின் மூத்தமகள் சிவாஜினி மூத்தமகன் சிவதர்சன், காந்தன், ரூபன், பிரியா ஆகியோரும் சத்தியனை **மாமா மாமா** என்று அழைத்து உறவு கொண்டாடினர். அப்போதெல்லாம், அவர்களுக்குத்தான் உண்மையான இரத்த உறவைக்கொண்ட மாமனாக இல்லையேயென சத்தியன் வேதனைப்பட்டிருக்கிறான்.

அக்கா பாமாவின் இளையமகள் பிரியா வயதுக்கு வந்த போது, தலைக்கு தண்ணீர் வார்ப்பு நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வுக்கு சத்தியனும் மனைவியுடன் சமுகமளித்திருந்தான். மாமன்

தான் தண்ணீர் வார்க்க வேண்டுமென்பது சம்பிரதாயம். அப்போது, என்ன தம்பி பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு தேங்காயை உடை. தண்ணீரை வார்" என்று அக்கா பாமா உத்தரவிட்டதும், அவன் தண்ணீர் வார்த்ததும், தான் **'மாமன்'** என்ற அந்தஸ்த்தைப் பெற்றுக் கொண்டதும், அக்காவின் உறவினர்கள் அதைப்பார்த்து அதிசயப்பட்டதும் சத்தியன் மனதில் இன்றுவரை நிலைத்து நிற்கிறது. யாழ்மாவட்டத்திலிந்து இடம் பெயர்ந்து அக்கா குடும்பம் தருமபுரத்தில் இருந்தபோது சத்தியன் குடும்பம் இடம்பெயர்ந்திருந்தது அப்போது தினமும் மதியச் சாப்பாட்டை மருமகள் பிரியாவிடமிருந்து சத்தியன் வாங்கி உண்ட நிகழ்வுகளும், நினைவுகளும் அவன் மனதை விட்டு அகலவில்லை.

சத்தியனிடம் அன்பும், பாசமும் வைத்திருந்த பெரியதம்பி என செல்லமாக அழைக்கப்பட்ட அக்காவின் மூத்தமகன் சிவதர்சன் லண்டனில் தொழில் பார்த்தபோது அவனுக்குச் சொல்லி, ஓர் தரமான விலையுயர்ந்த கடிகாரத்தைத் தருவித்து, சத்தியனுக்குக் கொடுத்த போது பாமா கூறினாள், "தம்பி இதை நீ உன்கையில் எப்போதும் கட்டியிருக்க வேண்டும்". மிகவும் விலை உயர்ந்த மணிக்கூடு. தொடர்ந்து ஓடும் என்று கூறி அவனிடம் கொடுத்த போது, அதன் விலையை அவன் கேட்டவிட்டு... ஆச்சரியப்பட்டு இவ்வளவு விலை உயர்ந்த மணிக்கூடு எனக்குத் தேவையில்லை அக்கா, இதை அத்தானிடம் கொடுங்கள் என்று சொன்னபோது, அவள் சிரித்துக் கொண்டு உரிமையுடன் அவன் கையைப் பிடித்து கையில் கடிகாரத்தைக் கட்டிவிட்டு **தம்பி இது உனக்கு மிகவும் வடிவாக இருக்கிறது என்று கூறிச் சந்தோஷப்பட்டாள்.** 15 வருடங்களுக்கு முன் அக்கா பாமாவால் கொடுக்கப்பட்ட கடிகாரம் இன்று வரை ஒரு செக்கன் கூட பிந்தாமல் சரியாக ஓடிக் கொண்டிருப்பது அதிசயம் தான். அதேபோல் அவனுக்கு 18 வயதில் ஏற்பட்ட **அக்கா உறவு**

இன்று அவனுக்கு 64 வயது ஆகிவிட்ட போதும் 46 வருடங்களாகத் தொடர்வதும் அதிசயந்தான்.

இப்போது சத்தியனுக்கு 64 வயதும் அக்கா பாமாவுக்கு 70 வயதுமாகி கிழவனும் கிழவியும் ஆகிவிட்டனர். அத்துடன் அவர்கள் இருவருமே நோயாளிகளாகவும் மாறி விட்டனர். அக்கா பாமா கடுமையான நோயாளியாகி, கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள். சத்தியன் தொலைபேசியின் ஊடாக அத்தான் தவராசாவிடம் அவளின் உடல் நிலை பற்றி அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தான். அவளின் உடல்நிலை மோசமாக இருந்தபோதும், அத்தான் தவராசா அது பற்றிக் கூறாமல், "**இப்போது பரவாயில்லை**" என்று மட்டுமே கூறுவார்.

அன்று வெள்ளிக்கிழமை பி.ப 7.00 மணியளவில் சாமிப் படத்துக்கு விளக்கேற்றி கும்பிட்டு விட்டு எதேச்சையாக அக்காவால் கொடுக்கப்பட்ட தனது கடிகாரத்தைப் பார்த்த சத்தியன், அதிசயத்துடன் மீண்டும், மீண்டும் கடிகாரத்தைப் உற்றுப் பார்த்தான். **கடிகாரம் ஓடாது நின்று விட்டிருந்தது.** கடந்த 15 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்த, அக்காவால் அன்புடன் கொடுக்கப்பட்ட கடிகாரம் ஏன் ஓடவில்லை? சத்தியன் மனதில் ஒரு குழப்பம்? அக்காவுக்கு ஏதாவது நடந்து விட்டதா? அத்தானைக் கேட்க வேண்டும்? என்று எண்ணிய போது கைத்தொலைபேசி மணியடித்தது. தொலைபேசியை காதில் பொருத்தினான் சத்தியன்.

அத்தான் தவராசா தான் தொலைபேசியில் பேசினார். அவர் குரல் தழுதழுத்தது **தம்பி இன்று பி.ப 4.45 மணிக்கு அக்கா பாமா எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்து விட்டாள்...!** அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை..!

செய்தியைக் கேட்ட சத்தியன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடிக் கொண்டிருந்தது. சத்தியன் அறைக்குள் சென்று மீண்டும் ஒருமுறை அக்கா அன்புடன் தந்த கடிகாரத்தை உற்றுப் பார்த்தான். என்ன அதிசயம்... அக்கடிகாரம் பி.ப. 4.45 மணிக்கு ஓடாமல் நின்று விட்டிருந்தது. அக்காவின் மூச்சு நின்ற அதேநேரம் 4.45 மணிக்கு அக்காவால் அவனுக்குக் அன்புடன் கொடுக்கப்பட்ட கடிகாரத்தின் இயக்கமும் நின்று விட்டது. அதை எண்ணி எண்ணி மீண்டும் மீண்டும் விக்கிவிக்கி அழுது கொண்டிருந்தான் சத்தியன்.

நின்று விட்ட கடிகாரத்தைத் திருத்தி, அப்பாவின் கையில் கொடுத்தால்...! அவர் மிகசந்தோஷப்படுவார் என நினைத்து சத்தியன் கடைசி மகன் புவிதாஸ், அக்கடிகாரத்தைத் திருத்து வதற்குப் பிரபலமான பல கடைகள் ஏறிய இறங்கிய போதும், "**இதன் இயந்திரம் முற்றாகச் சேதமடைந்து விட்டது**" **இதை இனித் திருத்திக்கொள்ள முடியாது**? என்று கூறி திருத்துபவர்கள் திருப்பி விட்டதை மகன் புவிதாஸ் தகப்பனுக்கு இன்றுவரை சொல்லவேயில்லை.

ஆனால் தனது தமக்கையாரின் மூச்சு நின்று விட்ட சரியான நேரமாகிய **03.04.2015 வெள்ளிக்கிழமை பி. ப. 4.45 என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கும் அந்த ஓடாத கடிகாரத்தை** தனது அக்கா பாமாவின் ஞாபகமாக தனது பாதுகாப்பில் **இன்றும் தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கிறான் தம்பி சத்தியன்.**

எழுத்தாளன் சிந்தனை - 2018 ஆவணி

14

கண்கள் மட்டும்தான்...! காட்டுவாள்...!

சில நூற்றாண்டுக்கு முன்னர் முஸ்லீம் சாம்ராஜ்ஜியங்கள் கொடிகட்டிப் பறந்த காலம். சலீம் மன்னன் தன் அன்பு மனைவியும், பட்டத்தரசியுமான, பேகத்துடன் அரண்மனையின் அந்தப்புரத்தில் அமைந்திருந்த நந்தவனத்தில் அளவளாவிக் கொண்டிருந்தான். அன்று பூரண தினம். முழுச்சந்திரன் வானில் தோன்றி தன் ஒளிக்கதிர்களினால் இரவைப் பகலாக்கி கொண்டிருந்தான். பேகத்தின் நீண்ட கூந்தலை வருடிக்கொண்ட சலீம்... பே..க...ம் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்...! முழுநிலவின் ஒளியைக் கூட உன் முகத்திலிருந்து வீசும் ஒளி தோற்கடித்து விட்டது. உன் பூரண அழகுக்கு இணையாக இந்த உலகத்தில் வேறுயார் இருக்கிறார்கள்?. என்று காதல் மொழி பேசினான் சலீம்.

பேகத்தின் முகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. மாறாகப் பொய்க்கோபத்துடன் முகத்தை மறுபுறம் திரும்பிக் கொண்டே "**என் அழகைப் பற்றி ஒரு வார்த்தை கூட நீங்கள் பேசவேண்டாம்**" இத்துடன் எத்தனை தடவைகள் உங்களைக் கேட்டுவிட்டேன். எனது உருவத்தை ஓவியமாக வரைந்து தரும்படி?. அப்போதுதானே உங்கள் வார்த்தைகளிலுள்ள உண்மைகளை

என்னால் உணரமுடியும்? அத்துடன் எனது அழகையும் தனிப்பட்ட முறையில் என்னால் ரசிக்க முடியும். எனது ஆசையை நிறைவேற்ற நீங்கள் இதுவரை எந்த அக்கறையும் செலுத்தவில்லை?. என்று சினத்துடன் கூறினாள் பேகம். "பேகம் உனது சினத்தில் கூட எவ்வளவு அழகு மிளிர்கிறது தெரியுமா? சரி உன் ஆசையைக் கூடிய விரைவில் நிறைவேற்றுகிறேன், என்று கூறிவிட்டு அரசன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. தனது உருவத்தை படமாக வரைந்து தரும்படி மனைவி பேகம் அவனைப் பல முறை கேட்டிருந்தாள். அவன் அதில் அக்கறை கொள்ளவில்லை என்று கூறிவிடமுடியாது. அவர்களின் சம்பிரதாயங்கள் அந்த முயற்சிக்கு தடையாக இருந்தது என்பதுடன் மனிதனைப் பற்றிய கலையை நன்றாகத் தெரிந்திருந்த அதாவது "**சாமுத்திரிகா லட்சணம்**" பற்றி நன்றாக அறிந்திருந்த ஓர் ஓவியனை அவன் தேடிக்கொண்டிருந்தான். பலப்பல இடங்களில் அவன் தேடியபோதும் பொருத்தமான ஓவியன் ஒருவன் அரசனுக்கு கிடைக்கவில்லை. அடுத்த சில தினங்களின் பின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பட்ட பிரபலமான ஓவியக்கலைஞர்களின் மத்தியில் வீற்றிருந்த அரசன் தனது கருத்துக்களைக் கூறினான் .நான் உங்கள் அனைவரையும் அழைத்ததன் பிரதானமான நோக்கம் யாதெனில், உங்களிடம் ஓர் பிரதான முக்கியமான பணியை ஒப்படைக்க விரும்புகிறேன்.

அதாவது, என் மனைவியாகிய அரசி பேகத்தின் முழுமையான ஓவியத்தை நீங்கள் யாராவது ஒருவர், வரைந்து தரவேண்டும்?. அந்த ஓவியத்தை வரைவது இலகுவான காரியமல்ல?, அதில் உங்களக்குப் பல பிரச்சினைகள் ஏற்படலாம்? ஏனெனில் என்

மனைவி உங்கள் முன் முழுமையாக தோற்றமளிக்கமாட்டாள். எனவே அந்த ஓவியத்தை பூரணமாக வரைவது கஸ்டமான காரியம். எமது முஸ்லீம் கலாசாரப்படி ஓர் முஸ்லீம் பெண் தன் முழு உடம்பையும் மூடி மறைக்கும் "பர்தா" உடையையே, அணிந்திருப்பாள். அந்த உடையுடன் தான் அவள் காட்சியளிப்பாள். அவளின் முழு உருவத்தையும் நீங்கள் பார்க்கமுடியாது. அவளின் "இருகண்களை மட்டுமே" நீங்கள் பார்க்க முடியும். தன் இரு கண்களை மட்டும்தான் அவள் காட்டுவாள். அவளின் ஏனைய அங்கங்கள், உறுப்புக்கள் அனைத்தும் "**பர்தா**" உடைக்குள் மறைந்திருக்கும். அதை நீங்கள் பார்க்க முடியாது. அந்த இருகண்களை மட்டும், வைத்துக்கொண்டு அவளின் முழுமையான ஓவியத்தை நீங்கள் வரைந்து தரவேண்டும்?. இதற்கான சகல ஒழுங்குகளும் உங்களுக்குச் செய்து தரப்படும். இதற்காக நீங்கள் கேட்கும் சன்மானம் எதுவானாலும் என்னால் தரப்படும். என்று கூறினான் மன்னன் சலீம்.

இது ஒரு விஷப்பரீட்சை மிகவும் ஆபத்தான காரியம் என்பதை உணர்ந்து ஓவியர்கள் எவருமே இப்பணியை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. அரசனுக்கு இது வேதனையைக் கொடுத்தது.

ஓவியக்கலை மட்டும் தெரிந்தவர்களால் இதைச் செய்ய முடியாது?. அக்கலையுடன் ஓர் மனித உறுப்பை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய உறுப்புக்கள் எப்படி அமையப்பெற்றிருக்கும்? என்பது பற்றி முழுமையாக வெளிப்படுத்தும் "**சாமுத்திரிகா லட்சணம்**" என்னும் கலை பற்றிய பூரண ஆற்றலைத் தெரிந்து கொண்டவர்களால் மட்டுமே, இப்பணியை மேற்கொள்ள முடியும். அத்துடன் இந்நாட்டு அரசியின் ஓவியம் சற்று பிசகு ஏற்பட்டாலும் உயிராபத்து. இதனால் சாமுத்திரிகா லட்சணம் பற்றிய கலையைப்

பூரணமாக அறிந்து கொண்டவர்களும், அரசனின் கோரிக்கையை ஏற்கமுன்வரவில்லை. ஓவியர்களை அரசன் உற்றுப்பார்த்தான். இச்சமயத்தில் அரசனால் இந்தியாவின் **நாகை** பட்டினத்திலிருந்து வரவழைக்கப்பட்ட, ஓர் ஓவியன் எழுந்து "அரசே இந்தப் பொறுப்பை நான் ஏற்கிறேன்". ஆனால் "எனக்கு சிறிது கால அவகாசம் வேண்டும்". என்று பணிவன்புடன் கூறினான்.

அரசன் முகத்திலிருந்து மிகமகிழ்ச்சி ஏற்பட்டது. ஓவியனுக்கு ஏற்ற சகல ஒழுங்குகளையும் செய்து கொடுக்கும்படி மந்திரிக்கு கட்டளையிட்டு விட்டு, சந்திப்பை முடித்துக்கொண்டான். மறுநாள் "**பர்தா**" உடையிலிருந்த அரசி "பேகத்தின் இரு கண்களையும்" ஓவியன் நன்றாக உற்றுப்பார்த்தான். மீண்டும் ஒரு தடவை உற்று பார்த்த ஓவியன் மனதில் எவ்வித சலனமும் இல்லை. அதன் பின் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைநோக்கிச் சென்றான் ஓவியன்.

இரு பௌர்ணமி கடந்து விட்ட நிலையில், அரசன் தன் மனைவி பேகத்தை அன்று சந்தித்தபோது, தனது ஓவியம் பற்றி பேகம் அரசனிடம் வினவியபோதுதான் அரசனுக்கு ஞாபகம் ஏற்பட்டது, இன்னமும் பேகத்தின் ஓவியம் வரையப்படவில்லை என்பது, உடனடியாக மந்திரியை அழைத்து ஓவியனிடம் வரையக் கொடுக்கப்பட்ட ஓவியத்தின் நிலைபற்றி விசாரித்தான். மந்திரியால் ஒப்புவிக்கப்பட்ட பதில் அரசனை ஆத்திரமடைய வைத்தது. அரசே இது பற்றிச் சொல்லவே எனக்கு அச்சமாக உள்ளது. ஏனெனில் அவன் ஓவியம் வரைவது போல், எனக்கு தெரியவில்லை?. தன்னுடைய அறையிலும் அவன் இருப்பதில்லை?.

ஓடும் நதிகள், உயர்ந்த மலைகள் காடு, கரம்பைகள் என்பவற்றைப் பார்த்து கைதட்டி சிரிக்கிறான். பறவைக் கூட்டம்

என்பவற்றைப் அண்ணாந்து பார்த்து ஆச்சரியப்படுகிறான். மரநிழலின் கீழ் இருந்து அடிக்கடி தனக்குள் ஏதோ முணுமுணுக்கிறான். அவன் **ஒரு பைத்தியக்காரன் போலவே தோன்றுகிறான்.** அவன் ஒரு ஓவியனைப் போலவே தெரியவில்லை. என்று பணிவுடன் கூறினான்.

மந்திரியின் வார்த்தைகளைக் கேட்ட அரசனுக்கு, கடுமையான கோபம் ஏற்பட்டது. உடனடியாக மந்திரியையும் அழைத்துக்கொண்டு அவன் தங்கியிருந்த அறைக்குள் சென்றபோது, அறை பூட்டப்பட்டிருந்தது. பூட்டை உடைத்துக் கொண்டு அறைக்குள் சென்ற போது, பெரிய அதிசயம் ஒன்று அவர்களை வரவேற்றது.

அறையின் நடுவில் அரசி பேகத்தின் அளவில் முழுமையான ஓர் ஓவியம் தத்துரூபமாக வரையப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருந்தது. அரசி பேகம் இவர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தாள். அவள் சிரிக்கும் போது ஏற்படும் கன்னக்குழி அவள் அழகுக்கு மேலும் மெருகூட்டியது. தலை, கழுத்து, நெற்றி, முகம் அனைத்தும் எவ்வித வேறுபாடுமின்றி பேகத்தின் ஓவியத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்து. அரசி பேகம் தன்முன் "உயிருடன் நிற்பது போன்ற" மனப்பிரேமை ஒன்று அரசனுக்கு ஏற்பட்டது. அவன் முகத்தில் நம்பமுடியாத, ஆச்சரியக்குறி தென்பட்டது. மந்திரியைக் கடைக் கண்ணால் பார்த்தபோது ஒரு சத்தம் உரப்பாகக்கேட்டது.

"கண்டுபிடித்துவிட்டேன்" "கண்டுபிடித்துவிட்டேன்" என்ற சத்தத்துடன் அறையை நோக்கி வேகமாக ஓடிவந்த ஓவியன், தனது அறைக்குள் நின்ற அரசனையும் மந்திரியையும் பார்த்துவிட்டு மிரளமிரள விழித்தான். தன் அறைக்குள் அரசனும் மந்திரியும் நிற்பதை ஓவியன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு வியப்பு ஒருபக்கமும், பயம் இன்னொரு பக்கமும், ஏற்பட்டது. செய்வதறியாது

சிலைபோல் நின்றான். அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வர தயங்கியது.

சிறிது கணப்பொழுதில் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட ஓவியன், அரசே ஓவியத்தை வரையும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நான், ஒரு சில தினங்களுக்குள் இந்த ஓவியத்தை வரைந்து முடித்துவிட்டேன். ஆனால் அதை உங்களிடம் ஒப்படைக்கவில்லை?. ஏனெனில் இந்த ஓவியம் முற்றுப்பெறவில்லை. எனக்கு தெரிந்த "சாமுத்திரிகா லட்சண" கலையின் படி, இதில் ஏதோ ஓர் குறைபாடு காணப்பட்டது.

அந்தக்குறைபாடு என்ன? என்பதை என்னால் அனுமானிக்க முடியவில்லை?. அதைக் கண்டுபிடிக்க பலநாள் முயன்றேன். நித்திரையின்றி விழித்திருந்தேன். பைத்தியக்காரனைப்போல அலைந்து திரிந்தேன். அக்குறைபாடு என்ன? என்பதை என்னால் அறிந்து கொள்வது மிகவும் கஸ்டமாக இருந்தது. இதனால் ஓவியத்தை தங்களிடம் என்னால் விரைவாக தரமுடியாதிருந்தது. ஆனால் சற்றுநேரத்துக்கு முன்னர் அதைக் கண்டுபிடித்துவிட்டேன். என்று கூறிவிட்டு, தனது தூரிகையைக் கையில் எடுத்து அரசியின் முழங்காலுக்கு மேலும், தொடைக்கு கீழும், தாமரை மொட்டு வடிவத்தில் ஓர் மச்சத்தை வரைந்து விட்டு, இப்போது தான் இந்த ஓவியம் முழுமை பெற்றுள்ளது. என்று அடக்கமாக கூறினான்.

அரசன் முகத்தில் அளவிட முடியாத வியப்பு. தன் மனைவியின் தொடைக்கு கீழ் இந்த வடிவில் ஓர் மச்சம் இருப்பது எவருக்கும் தெரியாது? எனக்கு மட்டும் தானே தெரியும்? ஓவியனை வியப்புடன் நோக்கிய அரசன்? உனது கலை தெய்வீகமானது. உன் திறனை மதிப்பீடு செய்ய முடியாது?. உன்னை எந்த

வார்த்தைகளால் பாராட்டுவது? என்பது எனக்குத் தெரியவில்லை? உனக்கு என்ன சன்மானம் வேண்டும்? நீ எதுவானாலும் தயங்காது கேள்?. எதையும் தர நான் தயாராக உள்ளேன் என்று கூறினான் அரசன். அரசே! கலைஞர்கள் வெறும் பாராட்டுக்களுக்கும் சன்மானத்துக்கும் அப்பாற்பட்டவர்கள். தங்கள் கலையை தமது உயிரிலும் மேலாக மதிப்பவர்கள் எனவே தங்களின் வெகுமதிகள் பாராட்டுக்கள் ஒருபுறம் இருக்க. நான் தங்களிடம் ஒரு சிறு வேண்டுகோளை சமர்ப்பிக்க விரும்புகிறேன். அதை முதலில் நிறைவேற்றுங்கள். அதன்பின் மிகுதியை நான் உங்களிடம் கேட்கிறேன்.

நீங்கள் தானே, என் ஓவியத்தை பாராட்டுகிறீர்கள்?. நான் வரைந்த ஓவியம் எவ்வளவுக்கு சரியானது? என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்போது தான் எனக்கு பூரண திருப்தி ஏற்பட முடியும்?.

அதற்காக உங்கள் மனைவியை "பர்தா" உடையின்றி, சாதாரண உடையில் ஒரு தரம் நான் முழமையாக பார்ப்பதற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தி தந்தால்..! அது ஒன்றே எனக்கு போதுமானது! என்று கூறினான் ஓவியன். ஓவியனின் இச்சிறிய வேண்டுகோள், அரசனுக்குப் பெரிய சோதனை. முஸ்லீம் கலாசாரம் அதற்கு இடம் கொடுக்காது. ஏன் அரசி கூட இதற்குச் சம்மதமளிக்க மாட்டாள். ஓவியன் கோரிக்கை நியாயமானது. மிகவும் அற்பமானது. இக்கோரிக்கையை நான் நிறைவேற்ற முடியாதுவிடின், அரசனாக நான் இருப்பதில் அர்த்தமில்லை. கடுமையான சிந்தனைக்கு பின்னர், அரசன் தனது முடிவை ஓவியனிடம் வெளிப்படுத்தினான்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தின் போதும், நான் எனது மனைவி பேகத்தை அரண்மனையின் அந்தப்புரத்திலுள்ள நந்தவனத்தில் சந்திப்பது வழக்கம் அச்சந்தர்ப்பத்தின் போது அரசி "பர்தா" உடையில் வரமாட்டாள். சாதாரண உடையில் தான் வருவாள். நாளை மறுதினம் பௌர்ணமி. இதோ என் முத்திரை மோதிரம் அரசஉடைகள் இவற்றை அணிந்து கொண்டு. நாளை மறுதினம் அந்தப்புர நந்தவனத்திற்கு வந்துவிடு. உன்னை எவரும் தடுக்கமாட்டார்கள். நானும் என் மனைவியும் தனித்திருக்கும் போது. நீ மறைந்திருந்து அவளின் முழுமையான உருவத்தையும் கண்டு கொள்ளலாம். இதைவிட உனது வேண்டுகோளை நிறைவேற்ற வேறு எனக்கு எவ்வித மார்க்கமும் தெரியவில்லை?. என்று கூறித் அரச உடைகளையும் ஓர் முத்திரை மோதிரத்தையும் ஓவியனின் கையில் கொடுத்தான். மாபெரும் தெய்வீக கலைஞனின் எதிர்பார்ப்பைத் திருப்திப்படுத்திய மனநிறைவு அரசனிடம் ஏற்பட்டது.

அன்று பௌர்ணமி தினம் நந்தவனத்தில் அரசியை சந்தித்த அரசன், அவளை அன்புடன் அரவணைத்தான். அவளின் ஒவ்வொரு அங்கங்களையும் அன்புடன் வருடிக்கொண்டான். எப்படியாவது எங்கிருந்தாவது மறைந்திருந்து ஓவியன் பார்த்துக்கொண்டிருப்பான், என்பது அவனுக்கு தெரியும். பால்போன்ற நிலா ஒளியில் பேகத்தின் முகம் மேலும் பிரகாசமாக இருந்தது. அவளின் உடல் வனப்புக்கள் அப்பட்டமாகத் தெரிந்தன. தன் உடல் வனப்புக்களை அணு அணுவாகப் பார்த்து ரசித்தாள் பேகம். தன் அழகை எண்ணி எண்ணி தனக்குள் கர்வப்பட்டுக்கொண்டாள் அரசி பேகம். நேரம் போவது தெரியமல், அரசனுடன் நெருக்கமாகவும் அன்பாகவும் இருந்தாள். அவளுக்கு மிகவும் சந்தோஷம். தன் உருவத்தை ஓவியத்தில் முழுமையாகப் பார்த்து விட்டதால் அவள் மேலும் சந்தோஷப்பட்டாள்.

முன்னிரவைக் கடந்து விட்ட நிலையில், அரசன் பேகத்துடன் படுக்கையறைக்கு சென்றுவிட்டான். அன்றிரவுஅவன் மனத்தில் பூரணதிருப்தி குடிகொண்டிருந்தமையினால் நித்திரை அவனை அணைத்துக்கொண்டது.

மறுதினம் அதிகாலை அரசன் விழித்துக்கொண்டான். படுக்கையறைக் கதவு அவசரமாக தட்டப்படும் ஓசை அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவசரமான தேவை அல்லது மிக அவசியமான காரியங்களுக்காகவே அரசன் படுக்கை அறைக் கதவை தட்டும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதை உணர்ந்து கொண்ட அரசன் அறைக்கதவை மெல்லத் திறந்தான். பயந்து நடுங்கியவாறு நின்றிருந்த அவன் மெய்க் காவலன் கீழ்வருமாறு கூறினான்.

அரசே ஒரு மாபெரும் தவறு நடந்த விட்டது. நேற்றைய தினம் அந்தி மாலைநேரத்தில் யாரோ ஒரு திருடன் எப்படியோ? தங்கள் அரச உடைகளையும் முத்திரை மோதிரத்தையும் அபகரித்துக்கொண்டு, அரண்மணை மதிலேறி குதித்து, ஆண்கள் நுழையக்கூடாத பெண்கள் தனித்திருக்கும், அந்தப்புர நந்தவனத்துக்குள் நுழைந்து விட்டான். அந்தப்புரத்துக்குள் அனுமதியின்றி நுழையும் ஆண்களுக்கு, அரச சபையைக் கூட்டாமலே தண்டனை வழங்கலாம் என்ற நியதி இருந்தமையினால், அவனுக்கு எமது காவலர்கள் வழங்க வேண்டிய தண்டனையை வழங்கிவிட்டனர்.

அவனுடைய இருகண்களையும் குத்திக் குருடாக்கி விட்டு, அவனைப் பாதாளஅறையின் சிறையில் அடைத்து விட்டனர். சற்று

நேரத்துக்கு முன்பு தான் நாம் அறிந்து கொண்டோம். அவன் "நாகையில் இருந்து தங்களால் வரவழைக்கப்பட்ட ஓவியன்" என்று.

அரசனிடம் இச்செய்தியைக் காவலன் கூறிக்கொண்டிருக்கும். போது உதிரம் வழிந்தோடும் விழிகளுடன். "**ஏழை ஓவியனின் கரங்கள்" பாதாள அறையின் சுவர்களை வருடிக்கொண்டிருந்தன**. அவனால் இனிமேல் எந்த ஓவியத்தையும் வரைய முடியாத நிலைமட்டுமல்ல, **இன்னொரு ஓவியனால் வரையப்பட்ட ஓவியத்தைப் பார்க்கக்கூட முடியாத பரிதாபநிலை ஏற்பட்டுவிட்டது**. அபூர்வமான திறமைசாலியான ஓவியனுக்கு என்ன பரிசை வழங்கலாமென? சிந்திக்கொண்டிருந்த அரசன், காவலன் கூறிய செய்தியைக் கேட்டு கற்சிலையாக நின்றுகொண்டிருந்தான்.



தமிழருவி
மலை - 2, அருவி - 1

15

கூடைப் பறவை

மதிவதனன் ஒரு தொழில் அதிபர். நாற்பது வயதுடைய மதிவதனன் ஓர் கடுமையான உழைப்பாளியல்ல, அதிகம் படித்தவனுமல்ல. பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த சொத்துக்கள், வசதியான மனிதர்களின் சகவாசம், மற்றவர்கள் தன்னை ஒரு பெரிய மனிதனாக மதிக்கவேண்டும் என்ற எண்ணம், அனைத்தும் ஒன்ற சேர்ந்து அவனை ஒரு தொழில் அதிபராக உருவாக்கிவிட்டது. மேலும் அவன் ஒரு பெரிய இடத்தில் திருமணம் செய்து கொண்டமையினால், அவன் அந்தஸ்தும் சமுதாயத்தில் உயர்ந்து விட்டது. இன்று அவன் ஓர் தொழிலதிபர்.

பல்வேறு தேவைகளின் நிமித்தமும், தொழில் விடயங்களைக் கலந்தாலோசிக்கும் நோக்குடனும், அடிக்கடி அவன் வீட்டுக்கு பலர் வந்து போவதுண்டு. அவன் தகப்பன் ஏற்கனவே இறந்து விட்டார். வயது போன நோயாளியாகிய தயாருடனும், தன்மனைவி பிள்ளைகளுடனும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகிறான் மதிவதனன்.

பெரிய இடத்துப் பெண்ணாகவும், சிறிய எண்ணங் கொண்டவளுமான மதிவதனன் மனைவிக்கு, அவனின் வயது முதிர்ந்த நோயாளியான, அவனின் தாயாரைப் பராமரிப்பதை, அவள் பெரும் சுமையாகவே கருதினாள். அவ்வீட்டில் வேலை செய்ய பல வேலையாட்கள் இருந்தபோதும், அவளின் தாயாரைத்

தன்னுடன் வைத்திருப்பதை அவள் சிறிதும் விரும்பவில்லை. அதற்கு ஏதாவது புறக்காரணிகள் இருக்குமோ? தெரியவில்லை. அல்லது மதிவதனனின் தாயாரின் ஒருபகுதி எரிந்து கருகிய அழகற்ற பாதிமுகத்தை அவள் பார்க்க விரும்பவில்லையோ? தெரியாது. மதிவதனனின் தாயார் அங்கு இருப்பதை. அவள் முற்றிலும் விரும்பவில்லை என்பதுடன். அவளை தனது "அத்தை" யாகவும் மதிக்கவில்லை.

உங்களைப் பார்க்க தினமும் எத்தனை பெரிய மனிதர்கள் வருகின்றார்கள்?. அவர்கள் உங்கள் தாயாரின் முகத்தைப் பார்த்து விட்டு, அடுத்த பக்கம் பார்க்கிறார்கள். உங்கள் அம்மாவிடம் மனம் விட்டுக் கதைத்து சிரித்து மகிழ, அம்மாவின் வயதையொட்டிய யார் இங்கு இருக்கிறார்கள்? எவ்வித நின்மதியுமின்றி தனியே இருந்து காலத்தைக் கழிக்கவேண்டியுள்ளது என்று, அனுதாபம் கொண்டவள் போல அடிக்கடி கூறுவாள் மதிவதனன் மனைவி, எமது வீட்டிலிருந்து மூன்று மைல் தூரத்தில் தானே ஓர் ஆச்சிரமம் இருக்கிறது. அது அனாதை விடுதியல்ல, கடைசிக்காலத்தில் முதியவர்கள் தமது ஆத்மதிருப்திக்காகவும், நிம்மதிக்காகவும், ஒன்றுகூடி சந்தோசமாக இருக்கும் "ஓர் சாந்தி நிலையம்." அங்கு கூட்டிச் சென்று உங்கள் அம்மாவை விட்டுவிட்டு வந்தால்..!, அங்கு அவரின் வயதை ஒத்த பலபேர் இருப்பதினால், உங்கள் அம்மா அங்கு சந்தோசமாக இருப்பாரல்லவா? என்று அடிக்கடி ஆலோசனை வழங்குவாள் மதிவதனனின் மனைவி கோமளா.

அது அநாதை விடுதி என்று எண்ணத்தேவையில்லை. அது ஓர் ஆச்சிரமம். சாந்தி நிலையம். ஓர் குறிப்பிட்ட தொகைப் பணத்தை மாதாமாதம் அந்த ஆச்சிரமத்துக்கு நன்கொடையாக கொடுத்து விட்டால்...! அவர்கள் உங்கள் தாயாரை நன்றாக கவனிப்பார்கள்.

தனது சமவயதான ஏனைய முதியவர்கள் பலர் அங்கு இருப்பதினால், அவர்களுடன் கதைத்துக் கொண்டு இருக்கலாம் தானே? என்ற கருத்தை அடிக்கடி மதிவதனனுக்கு கூறிவந்தாள் கோமளா.

கோமளாவின் தொடர்ச்சியான தூரக மந்திரத்தை, மதிவதனன் ஓரளவு ஏற்றுக்கொண்டாலும், அவன் மனதில் ஓர் நெருடல் இருந்த வந்தது. மேற்சொன்ன முடிவை என் அம்மாவிடம் எப்படிச் சொல்வது? நான் எனது தாயாருக்கும் தந்தைக்கும் ஒரே மகன். எனது தந்தையாரும் இன்று இல்லை. என் ஒருவனையே நம்பியிருக்கும் தாயாருக்கு, இந்த முடிவை தெரிவித்தால்..! அவரின் மனம் எவ்வளவு வேதனையடையும்? என்பதை நினைத்து அவன் மனம் அமைதியின்றி தவித்தது.

அவன் மனதில் பழைய நிகழ்ச்சியொன்று மின்னி மறைந்தது. அப்போது அவனுக்கு பத்து வயது. தாயாரும் அவனும் தனித்திருந்த போது, தாயார் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தாள். மதிவதனன் அடுக்களைக்குள் விளையாடிக்கொண்டிருந்தான். அவனின் குறும்புத்தனமான விளையாட்டினால், திடீரென அடுக்களைக்குள் தீப்பற்றிக் கொண்டது. தீக்குள் அகப்பட்ட மதிவதனன் "அம்மா... அம்மா..." என்று அவலக்குரலில் கத்திய போது, தனது உயிரைத் துச்சமாக மதித்து வீட்டுக்குள் ஈரச் சேலையுடன் ஓடிவந்த தாய், அவனை இறுக அணைத்துக் கட்டிப்பிடித்தபடியே ஈரச்சேலையுடன் உருண்டு, உருண்டு, மதிவதனனை வெளியில் கொண்டு வந்து அவன் உயிரைக் காப்பாற்றியது....! அந்தக் காட்சி அவன் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது.

பின்னர் அயலவர்கள் உதவியுடன் வைத்தியசாலைக்கு மயக்கமடைந்த மதிவதனனைக் கொண்டு சென்று காப்பாற்றிய போதும், தாயாரின் முகத்தின் ஒருபகுதி எரிந்து கருகிவிட்டது. இருந்தும் உயிர்பிழைத்து விட்ட தாயார் இளமதி இன்று வரை, ஒருபகுதி கருகி எரிந்த அவலட்சணமான முகத்துடனேயே வாழ்ந்து வருகிறாள். மதிவதனனின் சந்தோஷத்தையே தனது சந்தோஷமாகக் கருதி உயிர் வாழும் தாயாரிடம் இதைச்சொன்னால்...! அதைத் தாங்கிக்கொள்வாளா? எனக்கு சிரமமாக இருக்கிறது? அதனால் உன்னை ஆச்சிரமத்தில் சேர்க்க விரும்புகிறேன் என்று, எப்படிச் சொல்வது? **இளமதி** என்ற தனது பெயரில் ஒருபகுதியை எடுத்து "**மதிவதனன்**" என்ற பெயரைத் தனக்கு சூட்டிய தனது தயாரிடம், தன் மனதில் உள்ளதை வெளியே சொல்ல மிகவும் சங்கடப்பட்டான் மதிவதனன்.

ஆனால் இப்போது தாயார் இளமதி, ஆச்சிரமத்தில் தான் வாழ்கிறாள். மனைவியின் தொடர்ச்சியான வார்த்தைப் பிரயோகங்களைத் தொடர்ந்து தன் தாயாரிடம் கதைத்த போது, "மகனே உனது சந்தோசமும் உங்கள் குடும்பத்தின் சந்தோஷமே எனது சந்தோஷம்" என்று புன்னகையுடன் கூறிய தாயாரை ஆச்சிரமத்தில் சேர்த்து விட்டான் மதிவதனன்.

ஆச்சிரமத்தில் பல விதிமுறைகள் காணப்பட்டன. அங்குள்ள வர்களின் உறவினர்கள் மாதத்தில் ஒருமுறை மட்டுமே பார்த்துப் பேசவோ, உணவுகளைப் பரிமாறவோ முடியும் இதன்படி ஒவ்வொரு மாதமும் இருபதாம் திகதி, தாயார் இளமதியை மதிவதனன் பார்வையிட்டு மகிழ்வது வழக்கமாகி விட்டது. இப்போது மதிவதனன் மனைவி கோமளா மகிழ்ச்சியுடன் இருக்கிறாள். அவன் தாயாரைப் பற்றிய எக்கதையும் பேசுவதில்லை. ஒவ்வொரு மாதமும் தாயாரைச்

சென்று பார்ப்பான். மதிவதனன் செல்லும்போது தீன் பண்டங்களை வாங்கிச் செல்வான். வரும்போது மிகவும் சந்தோஷமாக திரும்பி வருவான்.

நாளையதினம் இருபதாம் திகதி, அம்மாவைப் பார்க்கபோக வேண்டும்?. என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பா...! நான் போய் அம்மா எப்படி நலமாய் இருக்கிறீர்களா? என்று அம்மாவைக் கேட்கும் முன்னரே, மகனே நீ நலமாக இருக்கிறாயா? என்று தானே கேட்டு, என் தலையை தடவுவா..!, என்பதையெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டு, படுத்துறங்கிய மதிவதனன் நடுநிசி நேரத்தில் திடுக்கிட்டு எழுந்து கொண்டான். மகனே நான் உன்னைக் கஸ்டப்படுத்துகிறேன். ஒவ்வொருமாதமும் நீ வந்து போவது உனக்கு கஸ்டமில்லையா? என்று தாயார் கேட்டது போன்ற ஒருபிரமை அவன் மனதில் ஏற்பட்டது.

அன்று இரவு விடிந்துவிட்டது. இன்று இருபதாம் திகதி அல்லவா? நேரத்துடன் எழும்பி விட்டான் மதிவதனன். சிறு சிற்றூண்டி வகைகளையும் எடுத்துக் கொண்டு தாயார் இளமதியைப் பார்க்க காரில் சென்றான். அதற்கு முன்னர் தான் பண்ணை அமைப்பதற்கு வாங்கிய காணியை துப்பரவு செய்யும் வேலை நடந்ததால், காணியின் பற்றைகள் எரிந்து விட்டதா? என்பதைப் பார்ப்பதற்காக பண்ணை அமையவுள்ள காணியின் பக்கம் காரைத்திருப்பிக் கொண்டு அங்கு சென்றான். காடு அரைகுறையாக எரிந்திருந்தது.

காரை விட்டு இறங்கிய மதிவதனன், இனி என்ன வேலை செய்ய வேண்டும்? என்பதற்காக சுற்றுப்புறங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தான். ஓரிடத்தில் சற்று நிதானித்துப் பார்த்தபோது, ஓர் பெரிய மரத்துடன் அணைந்து கருகிய நிலையில் கரிக்

குவியலாக ஏதோ ஒரு பொருள்? அவன் கவனத்தை ஈர்ந்தது. அதை நன்றாக உற்றுப்பார்த்த மதிவதனன், தன் காலினால் பந்து அடிப்பது போல அதைத் தட்டி விட்டான். அவன் கண்களை அவனால் நம்பமுடியவில்லை. அச்சிறிய குவியலிலிருந்து காடைப் பறவை என அழைக்கப்படும் காட்டுக்கோழின் குஞ்சுகள் இரண்டு சிறு கூச்சலிட்டுக் கொண்டு மரத்தின் அடியில் பயத்தில் ஒதுங்கியது. பற்றைக்காடுகள் நெருப்பில் எரிந்தபோது, தனது இருகுஞ்சுகளையும் தனது இறக்கைக்குள் மூடிக்கொண்டு மரத்தின் அருகில் ஒதுங்கிய போது, காடைப்பறவை நெருப்பில் எரிந்து முற்றாக கருகியபோதும், அதன் குஞ்சுகள் தாயின் இறக்கையால் பாதுகாக்கப்பட்டு உயிர்பிழைத்து விட்டதை, மதிவதனன் உணர்ந்து கொண்டான். அவன் கண்கள் கலங்கிவிட்டது.

மனிதன் மட்டுமல்ல, விலங்குகள், பறவைகள் கூட தாய்மை உணர்வு கொண்டவை தான். தன் உயிரைத் தியாகம்... செய்து தன் குஞ்சுகளைக் காப்பாற்றி விட்ட காடைப்பறவையின் தியாகம்...! அவனைச் சிந்திக்க வைத்தது. தன்குஞ்சுகளைக் காப்பாற்றும் விடயத்தில் வெற்றிகொண்ட காடைப்பறவையால், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை?. பத்துவயதில் அடுக்களைக்குள் தீயில் அகப்பட்ட என்னைக் காப்பாற்றிய தாய், இன்றும் உயிருடன் உள்ளாள். காடைப்பறவைகளின் குஞ்சுகளை விட நான் எவ்வளவு அதிஸ்டசாலி?, ஆனால் நான்...! அம்மாவை ஆச்சிரமத்தில் விட்ட பெரும்பாவி, என எண்ணிக்கொண்டு **காடைக்குருவியின் இருகுஞ்சுகளையும், தன்னுடன் எடுத்துக் கொண்டு காரில் ஏறினான் மதிவதனன்.**

தாய்மையின் மகத்துவம் பற்றிப் புரிந்து கொண்ட மதிவதனனிடம், புதிய உற்சாகம் தோன்றியது. இந்த உலகத்திலே

தாய்மைக்கு நிகராக, வேறு எதுவும் இருக்க முடியாது. அதுதான் தேடமுடியாத ஒரு சொத்து. இன்றைக்கு, ஆச்சிரமத்தில் இருக்கும் எனது தாயாரை எப்படியும் இன்று வீட்டுக்கு கூட்டிச்செல்ல வேண்டும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. **"எப்படியும் எனது அம்மாவை வீட்டுக்கு கூட்டிச் செல்வேன்"** என்ற புதிய உற்சாகத் துடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும், தனது காரை வேகமாக ஓட்டிச் சென்றான் ஆச்சிரமத்திற்கு.

ஆச்சிரம வாசலின் பக்கமுள்ள கூடத்தில், பல வயது முதிர்ந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக கதைத்துக் கொண்டி ருந்தனர். காரை விட்டு இறங்கிய மதிவதனன் கூடத்துக்கு வந்தான். இருபதாம் திகதி எப்போது வரும் என்று எதிர்பார்த்து கூடத்தில் காத்திருக்கும் தாயாரை அங்கு காணவில்லை?, சற்றுமுற்றும் பார்த்தபோதும் எங்குமே அவன் தாயார் தென்படவில்லை, என்னைப் பெறறெடுத்த அன்புத் தெய்வம் எங்கே? என்று அவன் கண்கள் தேடிய போது, வயது முதிர்ந்த ஒரு மூதாட்டி அவன் அருகில் வந்து, இளமதியம்மாவின் மகன் நீங்கள் தானே? நீங்கள் வந்தால் தன்னிடம் கூட்டிவரும்படி ஆச்சிரமத்தின் நிர்வாகி கூறினார் என்று கூறி, மதிவதனனை அழைத்துச் சென்றாள் அந்த மூதாட்டி. மூதாட்டியுடன் சென்ற மதிவதனன் மனதில் பல்வேறு எண்ணங்கள் தோன்றி மறைந்துகொண்டிருந்தது. அம்மா எங்கே? என்று அவன் உள்மனதில் ஒரு கலக்கம் தோன்றிக்கொண்டிருந்தது.

நேற்றைய இரவு நடுநிசி நேரத்தில் "மகனே நான் உன்னைக் கஸ்டப்படுத்துகிறேன். ஒவ்வொரு மாதமும் நீ வந்து, போவது உனக்கு கஷ்டமில்லையா?" என்று தாயார் கேட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு, மூதாட்டியுடன் நிர்வாகியின் அறைக்குள் சென்றான் மதிவதனன். அவர் நிசப்தமாக

நின்று கொண்டிருந்தார். அவர் அருகில் இருந்த கட்டிலில் முகத்தை துணியால் மூடியவண்ணம் ஓர் உடல் காணப்பட்டது. அருகில் குத்துவிளக்கொன்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

அதனருகில் சென்ற நிர்வாகி, மூடியிருந்த துணியை சற்று விலக்கி, மதிவதனனுக்கு காட்டிய போது "அம்மா... அம்மா..." என்று உரக்கக் கத்தினான் மதிவதனன். மதிவதனனின் தாய் இளமதி அங்கு உயிரற்ற பிணமாக கிடத்தப்பட்டிருந்தாள். இக்காட்சியை சற்றும் எதிர்பார்க்காத மதிவதனன் மயக்கமடைந்து, மூச்சடைத்து விழுந்து விட்டான். **உயிருள்ள பெண்ணாக கூட்டிச் செல்லப்படவேண்டிய மதிவதனனின் தாய் இளமதி, உயிரற்ற பெண்ணாகத் தூக்கிச் செல்லப்பட்டாள் மதிவதனனின் வீட்டுக்கு.** மதிவதனனின் தாயாரின் உயிரற்ற உடலை வரவேற்பதற்கு தயாராக இருந்தவர்களினால் மதிவதனனின் மனைவி கோமளாவும் ஒருத்தியாக இருந்தாள்.

மதிவதனனும் அவன் மனைவி கோமளாவும், இப்போதும் வாழ்கிறார்கள். காடைக்குருவியின் குஞ்சுகளுக்கும் சிறகுகள் முளைத்து நன்றாக வளர்ந்து விட்டது. மதிவதனனின் தாயார் இளமதி, கோமளாவால் விரட்டியடிக்கப்பட்டு ஆச்சிரமத்திற்கு அனுப்பப்பட்டது போல், **காடைப்பறவைகளின் குஞ்சுகளை மதிவதனன் காட்டுக்கு விரட்டியடிக்கவில்லை? அவை அவன் வீட்டிலேயே, தாய் இல்லாமல் வளர்கின்றன "மதிவதனனைப் போல"**

எழுத்தாளன் சிந்தனை
2018 – காரத்திகை



16

மனிதன்* மாறுவானா?

உருவகக் கதை

மாலை நேரம் ஓர் பெரிய மரத்தின் கிளை ஒன்றின் மேல் அமர்ந்திருந்த, குயில் ஒன்று கூ...கூ..கூ... என கூவிக்கொண்டிருந்தது. அந்த மரத்தின் மறுகிளையில் காகம் ஒன்று இருந்து கா..கா..கா....என்று, சத்தமிட்டுக்கொண்டிருந்தது. குயிலின் குரல் இனிமையாக இருந்தது. ஆனால் காகத்தின் குரலோ, சற்று கரடுமுரடாக இருந்தது. மரத்தின் கீழே சிறுவர்கள் சிறுமியர்கள் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தனர். குயிலின் கூ.கூ. என்ற சத்தத்துடன், தாங்களும் சேர்ந்து கூ.கூ.. என்ற சத்தமிட, அதற்கு பதிலாக குயில் மீண்டும் கூ.கூ.. என்று சத்தமிட, சிறுவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தனர். அடுத்த கிளையில் இருந்த காகத்தை துரத்த முற்பட்டனர். காகம் கோபத்துடன் குயிலை முறைத்துப்பார்த்தது.

ஏய்... உனக்கு மகாராணி என்ற நினைப்போ? குயிலைப் பார்த்து காகம் கேட்டது? ஏன் அக்கா என்மீது எரிந்து விழுகிறாய்? ஆண்டவன் எனக்கு அழகான தோற்றத்தையும் இனிமையான

குரலையும் தந்துவிட்டார்? ஆனால் உனக்கு அழகில் குறைந்த தோற்றத்தையும், கரடுமுரடான குரலையும் தந்துவிட்டார்? அதனால் தான் சிறுவர்கள் உன்னை வெறுக்கிறார்கள். அதற்கு நாம் என்ன செய்வது? எல்லாம் ஆண்டவன் படைப்பு! அதற்காக நீங்கள் கோபமடைவதில் அர்த்தம் இல்லை? என்று அமைதியுடன் சொல்லியது குயில்.

நீ அதிகமாக பேசாதே, ஏதோ ஆண்டவன் உனக்கு வரம் தந்ததுபோலும், எனக்கு சாபமிட்டது போலவும், கூறி ஆண்டவனைப் போற்றுகிறாயே...! உனக்கு மட்டும் தான் கதைக்கத் தெரியும் என்று, நினைக்கிறாயா?

இல்லை இல்லையக்கா, ஆண்டவன் எனக்கு வரம் தந்ததாக நான் கூறவில்லை. சில சமயம் நான் கூட, ஆண்டவனைக் குறை கூறியுள்ளேன். இவ்வளவு அழகையும் இனிமையான குரலையும் தந்த ஆண்டவன், என்னை கறுப்பாக படைக்காமல்....! வேறு ஒரு நிறத்தில் படைத்திருந்தால்...! என்னைப் போன்ற சிறந்த ஒரு பறவையாக யாரும் இருந்திருக்க முடியாதல்லவா? இதைக் கேட்ட காகத்துக்கு, மேலும் கோபம் அதிகமாகியது.

ஏன், கறுப்பு நிறம் உனக்கு அவ்வளவு இளக்காரமாய் போய்விட்டதா? அந்தக் கறுப்பு நிறம் இருப்பதால் தான், **நீ இன்றும் உயிரோடு இருக்கிறாய்**? அது உனக்குத் தெரியுமா? உன் அம்மாவும் அப்பாவும் எவ்வளவு சோம்பேறிகள்? இன்றுவரை அவர்களால் தமக்கென ஓர் கூட்டைக் கூட கட்டிக்கொள்ள முடிய வில்லை?. உனது அம்மா எங்கள் கூட்டில் வந்து முட்டை இட்டு செல்கிறா?, எவ்வளவு வெட்கக்கேடு? அந்த முட்டைகளை, என் அம்மா தான் அடைகாத்து, நீ குஞ்சாக வெளிப்பட்டாய். சில

நாட்கள் அம்மாவின் அன்புடன் நீ வளர்ந்தாய். உன் குரலைக் காட்டியவுடன் நீ தனது பிள்ளை இல்லை? என்பதைத் தெரிந்து, உன்னைக் கொத்தித் துரத்தி விட்டா. இல்லாது விடின் குஞ்சிலேயே உன்னைக் கொத்தி தின்றிருப்பா...? என் அம்மா, நீ தப்பிப் பிழைத்ததற்கு காரணமே என்னைப்போன்ற கறுப்பு நிறந்தான். இப்போது யோசித்துப்பார் கறுப்பு நிறத்தைப் பற்றி....!

குயில் சிந்திக்கத் தொடங்கியது. அக்கா நீ மனிதர்களுடன் நெருங்கிப்பழகுபவள். மனிதர்களைப் பார்...! எத்தனையோ பேர் தனக்கென ஓர் வீட்டைக்கட்டிக்கொள்ள முடியாமல்...! தெருவோரத் திண்ணைகளிலும், பொதுமண்டப வாசல்களிலும் "**தெருவில் ஓர் சமுதாயமாக**" வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவில்லையா? உயிர் வாழவில்லையா? சாந்தோஷமாக வாழவில்லையா?

சகோதரியே உன் நிலை எனக்குப் புரிகிறது. சிறிது காலப்பகுதியாவது நீயும் நானும் நாம் சகோதரங்களாக ஒன்றாக ஒரு கூட்டில் வாழ்ந்தவர்கள். இப்போதும் "கூடி உற்றாரோடு உறவாடி உண்டு மகிழும்" உயர்ந்த குணம் எம்மிடமே உள்ளதாக, பல புலவர்கள் கூட பாடியுள்ளனர். சகோதரி என்ற முறையில் உன்னிடம் கூறுகிறேன்.. உன் அப்பா அம்மா செய்த தவறை நீ நியாயப்படுத்த முற்படாதே, எந்த இனத்துக்கும் ஓர் தனித்துவம் இருக்கவேண்டும். தன் சந்ததி தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்கு நிச்சயமாக ஓர் இருப்பிடம் இருக்கவேண்டும். "எலிப்பளை ஆனாலும் தனிப்பளை" வேண்டும். அதை நீயாவது உன் சந்ததிக்கு கற்றுக்கொடு. நாம் வாழ்வதற்கு **நிறம் மொழி(குரல்) பிரச்சனையாக இருந்த காலம் இப்போது மலையேறிவிட்டது.** என்னை மனிதர்கள் பலர் வெறுப்பதற்கு காரணம் எனது கறுப்பு நிறமோ? கரகரத்த குரலோ அல்ல,

என்னிடம் தட்டிப்பறித்து உண்ணும் கபடக்குணம் உள்ளது. அதனால் தான் சிறுவர்கள் கூட என்னை வெறுக்கிறார்கள். இந்தத் தட்டிப்பறிக்கும் குணம் கூட, எனக்கு பிறவியில் ஏற்பட்டதல்ல, இதை நான் பகுத்தறிவுள்ள மனிதர்களிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். ஒருவரின் வருமானத்தை மற்றவர் தட்டிப்பறிப்பது...! ஒருவரை மற்றவர் ஏமாற்றிப் பிழைப்பது, துரோகம் செய்வது **அனைத்தும் மனிதர்களின் கேவலமான குணங்கள்தான்.** நானும் எம் இனத்தவரும் மனிதர்களுடன் நெருங்கிப்பழகுவதினால், இதைக் கற்றுக்கொண்டோம். ஆனால் இது கேவலமானது? என்பதை தற்போது உணர்ந்து வெட்கப்படுவதுடன், வேதனையும் அடைகிறேன். காகம் கூறியதை குயில் அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தது.

சகோதரியே நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். தட்டிப் பறித்து உண்ணும் கெட்ட பழக்கத்தை இன்றுடன் நிறுத்தி விடுகிறேன். நீயும் உன் சந்ததி வாழ உனக்கென "ஒரு கூட்டைக் கட்டிக்கொள்ள முயற்சி செய்" இன்றிலிருந்து செயற்படுத்து என்று கூறியபோது, சிறுவர்கள் சிலர் கல்லை எடுத்து காகத்தை விரட்டினர். சகோதரியே நான் நாளை சந்திக்கிறேன் என்று கூறிவிட்டு காகம் விருட்டென பறந்து சென்றது. காகம் பறக்கும் போது ஒன்றைக் கூறியது. "சகோதரியே நாங்கள் இருவரும் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம்." **அதாவது திருந்திவிட்டோம்**. ஆனால்...! மனிதன் மற்றவனைத் தட்டிப்பறிக்கும், ஏமாற்றிப்பிழைக்கும், குணத்தை மாற்றுவானா..? **அல்லது மனிதன் மாறுவானா...? காலந்தான் அதற்கு பதில் கூறவேண்டும்**...! மரத்திலிருந்த காகமும், குயிலும் **ஒரே திசையில் ஒன்றாக** பறந்து சென்றன.

எழுத்தாளன் சிந்தனை
2018 பங்குனி

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தின் வெளியீடுகள்

01. **அசையும் நாணல்கள்** - தொகுப்பு நூல் 2018
(நாவலூரான் வ.ஜசிந்தன்)

02. **பகலில் காணும் கனவுகள்** - கவிதை நூல் 2018
(கவிஞர் வடவரணி சி.சபா)

03. **அந்தமிழ் அறுபது** - கவிதை நூல் 2019
(கவிஞர் நிர்மலா சிவராசலிங்கம்)

04. **புலத்தின் கனவுகள்** - கவிதை நூல் 2019
(கவிஞர் அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன்)

05. **குளிர்விடும் மூச்சு** - கவிதை நூல் 2019
(கவிஞர் அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன்)

06. **ஓவியமும் சிற்பமும்** – (கட்டுரைகள் 2019)
(கலாபூசணம் வடவரணி சி.சபா)

07. **மரணிக்கும் மண்வாசனை** - சிறுகதைகள் 2019
(கலாபூசணம் வடவரணி சி.சபா)

08. **சமநிலைக்கரகம்** - ஆய்வுநூல் (அச்சில்)
(எழுத்தாளர் யோகநாதன் துஷாந்தினி)

கலைகளுக்கு உயிர்கொடுப்போம்
கலைஞர்களை ஊக்குவிப்போம்

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்
நாவற்காடு வரணி, இலங்கை.
தொ.இல : 0773376249

நூலாசிரியர் பற்றி...!

கலாபூசணம்
வடவரணி சி.சபா

சின்னவன் சபாரத்தினம் என்னும் இயற் பெயரைக் கொண்ட இவர் வடவரணியை பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிட மாகவும் கொண்டவர். வடவரணி சி.சபா என்னும் புனை பெயரில் கவிதைகள், கட்டு ரைகள், சிறுகதைகளை எழுதி வரும் இவர் ஓர் பல்துறைப்படைப்பாளியாவார்.

தனது கவிதைகளை தொகுத்து "பகலில் காணும் கனவுகள்" என்ற தலைப்பில் ஓர் கவிதை நூலையும், "மரணிக்கும் மண் வாசனை" என்ற தலைப்பில் இச்சிறுகதை நூலையும், இத்துடன் இணைத்து "ஓவியமும் சிற்பமும்" என்ற தலைப்பில் ஓர் கட்டுரை நூலையும் வெளியிட்டுள்ளார்.

இம் மூன்று நூல்களையும் வெளியிட்டு, வரணி மண்ணுக்கு பெருமை தேடித்தந்துள்ளார். இம்மூன்று நூல்களையும் எமது "நதியோர நாணல்கள் கலை இலக்கிய மன்றமே" வெளியீடு செய்துள்ளமை மன்றத்துக்கும் பெருமையளிக்கின்றது.

இவருக்கு "கலாபூசணம்" அரசவிருதும், "கலைச்சாகரம்" விருதும் பல்வேறு பாராட்டுக்களும் கௌரவமும் கிடைத்துள்ளது. அரச உத்தியோகத்தரான இவர் கூட்டுறவு திணைக்கள கணக்காய்வுப் பிரிவின் தலைமைக்காரியாலய பரிசோதகராகக் கடமை புரிந்து தற்போது ஓய்வு நிலையிலுள்ளார் இவர், ஓர் அகில இலங்கை சமாதான நீதவானாக உள்ளதுடன், எமது நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தின் பிரதம ஆலோசகராகவும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ந.இராசகுமாரன்
நிர்வாக கிராம உத்தியோகத்தர் (ஓய்வுநிலை),
தென்மராட்சி.

திரு ந.இராசகுமாரன்
நிர்வாக ஆலோசகர்,
நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்,
நாவற்காடு, வரணி, யாழ்ப்பாணம்.

400/=
9 789557 192055

Printed by : Sivakajan press - Kodikamam